# தமிழருவி

## கலை இலக்கிய சமூக விஞ்ஞான சஞ்சிகை

மலை - 2 அருவி - 1



உலகப்பெருமஞ்சம் இணுவில் கந்தசுவாமி கோவில்

விலை 50/-

வெளியுலகில் சிந்தனையிற் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். - பாரதியார்


நிர்வாக இயக்குநர், உதவி ஆசிரியர்:

த. கணேசமூர்த்தி

பிரதம ஆசிரியர் :

ம. பா. மகாலிங்கசிவம்

கௌரவ ஆலோசகர் :

சிவத்தமிழ் வித்தகர்

சிவ. மகாலிங்கம்

முகவரி:

சிவகுல வீதி,

உரும்பிராய் மேற்கு,

உரும்பிராய்.

தொலைபேசி :

077 7743055

021 490 7619

அலுவலக முகவரி

தமிழருவி,

பலாலி வீதி,

டிப்போ அருகாமை,

உரும்பிராய்.

E.mail :

tkm.tamilaruvi@gmail.com

Skype : tkm.tamilaruvi


## ஒரு வருட நிறைவில் ........

தமிழருவி சஞ்சிகை வெளிவரத்தொடங்கி ஓர் ஆண்டு, நிறைவு பெற்றுவிட்டது. இதுவரை 5 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. நூல்களைத் தேடி வாசிப்பவர்களும், ஆக்கங்களை எழுதுபவர்களும் குறைவடைந்து செல்லும் சூழலில் நாம் . இச் சஞ்சிகையை வெளியிடவேண்டி உள்ளமை அனைவருமே அறிந்த உண்மையாகும்.

எனினும் குறைந்த வளத்துடன் எம்மால் இயன்ற அளவிற்கு நிறைவான சேவையைத் தமிழருவி மூலம் தருவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். ஏனெனில் சமூகத்தில் நாம் விரும்பும் மாற்றங்களை ஏற்படுத்த வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரின் பங்கு முக்கியமானதாகும்.

எமது ஓராண்டுச் சாதனைகள் எவை என்று ஆராய்ந்தால் எழுத்தார்வம் இருந்தும் தமது ஆக்கங்களை வெளியிடக் களம் இல்லாது இலைமறைகாயாக இருந்த மாணவர் பலருக்கு நாம் களம் தந்து ஊக்குவித்திருக்கின்றோம். மாதம் ஓர் இளம் எழுத்தாளர் அறிமுகம் என்ற பகுதியினூடாக ஆற்றல் வாய்ந்த மாணவரை அறிமுகம் செய்திருக்கின்றோம். கவிதை, கட்டுரைப் போட்டிகள் மூலம் இளம் எழுத்தாளர் பலரின் திறமையை வெளிக்கொணர்ந்து பரிசில் வழங்கி ஊக்குவித்திருக்கிறோம். மூத்த எழுத்தாளர்களின் ஆக்கங்கள், பேட்டிகள் என்பவற்றின் மூலம் அவர்களின் அறிவையும், அனுபவத்தையும் இளையதலைமுறையினரிடையே கொண்டு சேர்த்திருக்கின்றோம்.

இவற்றையெல்லாம் தொடர்ந்து முன்னெடுக்க எத்தனையோ அன்புள்ளங்கள் எம் தோளோடு தோள் நின்று துணைபுரிந்தார்கள். அவர்களை இவ்வேளை நன்றியுடன் நினைவிற் கொள்ள வேண்டிய அவசியம் எமக்கு இருக்கின்றது.

தமிழருவி முதலாவது இதழ் வெளிவர முன்னிருந்தே எமக்கு வழிகாட்டியாய் இருந்து, இன்றுவரை ஒவ்வொரு இதழாக நுணுகி ஆராய்ந்து நிறைகுறைகளை எடுத்துக்கூறி எம்மைச் சரியான திசையிற் செல்ல வைப்பவர் எமது கௌரவ ஆலோசகர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்.......

எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல், நூல் எழுத்துப் பிழைகளின்றி வெளிவரச் செவ்வைபார்த்துத் தரும் திருமதி. உதயலதா நவதீசன், ஒவ்வொரு சஞ்சிகைக்கும் தேவையான ஆக்கங்களை நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்னரே தொடர்ச்சியாகத் தந்துதவுகின்ற மதிப்பிற்குரிய எழுத்தாளர்கள்.......

நாம் சஞ்சிகைகளை விற்பதற்காகக் கொண்டு செல்லும்போது இன்முகத்துடன் வரவேற்று எமது நோக்கத்தை நிறைவேற்ற ஒத்துழைப்புத் தந்துவரும் அதிபர், ஆசிரியர், மாணவர், புத்தக விற்பனை நிலைய உரிமையாளர்கள்.......

கடிதங்கள், தொலைபேசி மூலமாகவும் நேரடியாகவும், ஆக்க பூர்வமான விமர்சனங்களை முன்வைத்துத் தமிழருவி வளம்பட உதவியவர்கள்.........

செய்திகள், விமர்சனங்கள் மூலம் தமிழருவிக்கு இலவசமான விளம்பரம் தந்து உதவிய பத்திரிகை நிறுவனத்தினர், விளம்பரதாரர்கள்.....

தமிழருவி நூற்பதிப்பு முயற்சியைப் பணவருவாய்க்குரிய ஒன்றாகக் கருதாமல் கலைச்சேவையாகவே கொண்டு திறம்படச் செய்து தரும் றூபன் பிறிண்டேர்ஸ் முகாமையாளர் மற்றும் பணியாளர்கள்......

அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள். உங்கள் ஆதரவு இனியும் தொடர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

**நிர்வாக இயக்குநர்,**
**உதவி ஆசிரியர்.** **பிரதம ஆசிரியர்**

## கௌரவ ஆலோசகரின் கருத்துரை!

# நல்லறிவு பிரகாசிக்கத் தமிழருவி துணை செய்யும்

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
*B.A. Dip-in-Edu, S.L.E.A.S., M.A.*



"நல்லறிவானது எல்லாத் திக்கிலிருந்தும் எம்மை நோக்கி வருவதாக" என இந்து சமயத்தின் ஆதார நூல்களாகிய வேதங்கள் கூறுகின்றன.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள்
யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்பது மகாகவி பாரதியாரின் வாக்கு ஆகும். தமிழ்மொழி உலகில் தோன்றிய மூத்தமொழிகளில் ஒன்றாக, சிறந்த இலக்கிய வளம் கொண்ட மொழியாக, பக்தி மொழியாகத் திகழ்வதோடு அறிவியல் மொழியாகவும் மாறவேண்டும் என்பது தமிழ்மொழிப் பற்றாளர்கள் பலரின் விருப்பமும் ஆகும். தமிழ் வாசகர்களுக்குக் கலை இலக்கியங்களுடன் சமயம், சட்டம், மருத்துவம், விவசாயம், வரலாறு, கல்வி என்பவற்றிலும் அறிவினைப் பெறக் கூடியதான சஞ்சிகை ஒன்றினை வெளிக்கொணர வேண்டும் என்று பெருவிருப்பம் கொண்ட கோண்டாவிற் பதியைச் சேர்ந்த திரு. த. கணேசமூர்த்தியின் சிந்தனை, செயல் வடிவம் பெற்றுத் தமிழருவிச் சஞ்சிகையாகத் தோற்றம் பெற்றது.

2011ஆம் ஆண்டில் தமிழருவி சஞ்சிகையின் ஐந்து இதழ்கள் வெளிவந்துள்ளன. இதன் பிரதம ஆசிரியராகத் தமிழ்ப்புலமை மிக்க குடும்பத்தில் தோன்றிய மட்டுவில் ம. க. வேற்பிள்ளையின் பூட்டன் ம. பா. மகாலிங்கசிவம் பணியாற்றுகிறார். பல்வேறு துறைசார்ந்த அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் தமிழருவியின் ஐந்து மலர்களிலும் வெளிவந்துள்ளன. மாணவ சமூகத்திற்கு அதிகம் பயன்படக் கூடியதாக சஞ்சிகை வெளிவரவேண்டும் என்பது பிரதம ஆசிரியர், நிர்வாக இயக்குநர், கௌரவ ஆலோசகர் ஆகியோரது விருப்பமும் ஆகும். மாணவர்களிடம் கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி என்பவற்றை நடாத்தி அவர்களை ஊக்குவிக்கும் பணியையும் தமிழருவி செய்து வருகின்றது.

இன்று வாசிக்கும் பழக்கம் மாணவர்களிடமும் மக்களிடமும் அருகி வருகின்றது. வெகுஜன தொடர்பு சாதனங்களின் அபரிமிதமான வளர்ச்சியினால் இன்று வீடே சினிமாத்தியேட்டராக மாறிவிட்டது. புலன்களைத் தடுமாறச் செய்து மனத்தின் ஆரோக்கியத்தைப் பாழாக்கத் துணை செய்யும் பல ஜனரஞ்சகமான நிகழ்வுகளைத் தொலைக்காட்சிகள் நாளாந்தம் வெளிப்படுத்துகின்றன. புத்தி கெடாமல் இருப்பதோடு நல்ல வழியில் செயற்படுவதற்கு நல்ல நூல்களை நாம் தேடிப் படிக்க வேண்டியது அவசியமாகும்.

அறிவுப் பசி கொண்டு அலைபவர்களுக்கு உதவும் நூலாக, பல்வேறு அம்சங்களையும் ஒரே பார்வையில் பார்த்து அறிய உதவும் மலராக, தமிழருவி தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமும் ஆகும்.

ஈழத்தில் தமிழிலே சஞ்சிகைகள் நடாத்தியவர்கள் பல சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவித்தார்கள். முளையிலே கருகியவைகளும் உண்டு. சில மாதங்கள், சில வருடங்கள் வாழ்ந்து அழிந்தவையும் உண்டு. சஞ்சிகை நடாத்துவதில் ஏற்படக்கூடிய சோதனைகளையெல்லாம் போதனைகளாக்கிக் கொண்டு இன்றுவரை சாதனை செய்தவர்களில் மல்லிகை பத்திரிகையின் ஆசிரியர் டொமினிக் ஜீவா முதன்மை இடம் பெறுகிறார்.

"தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வதில்லை" என்பது கம்பன் வாக்கு. தமிழருவி வெளிவரும் நோக்கம் தூய்மையானது. வாழையடி வாழையாகத் தமிழர் சமுதாயத்திற்குப் பயன்படும் நூலாகத் தமிழருவி பிரகாசிக்கும். தீர்க்க ஆயுளுடன் எமது சமூகத்திற்குப் பல்வேறு வழிகளிலும் பயன்படும் நூலாக, திசைகாட்டும் வழிகாட்டியாகத் தமிழருவி திகழ வேண்டும் என்பதே சஞ்சிகைக் குழுவோடு தொடர்புடைய அனைவரதும் விருப்பமாகும். மனிதர்களின் விருப்பங்கள் நிறைவேற இறைவனின் துணை மிகவும் அவசியம். மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகிய பல தரப்பட்டவர்களின் ஆதரவும் இறையருளின் ஆசியும் தமிழருவிக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.



# புலம்பெயர் இலக்கியங்கள் சொல்லும் செய்திகள்

இன்றைய பொழுதுகளில் தமிழ் இலக்கிய உலகில் அதிகம் பேசப்படுபவையாகவும், சமூக மாற்றத்தில் குறிப்பிட்டு சொல்லத்தக்க அதிர்வலைகளைச் சிருஷ்டித்துச் செல்பவையாகவும் விளங்கும் இலக்கிய வகைமையாகப் புலம்பெயர் இலக்கியங்கள் விளங்குகின்றன.

"புலம்பெயர்வு" என்பது ஒரே அரசியல் பூகோள எல்லையை விட்டு நகர்ந்து சமூக அரசியல் பண்பாட்டுச் சூழ்நிலைகளால் பெரிதும் வேறுபட்ட பிரதேசத்தில் வாழ நேரிடுகிறவர்களைக் குறிக்கின்றது. இவ்வாறு அரசியல் சமூக பண்பாட்டு அம்சங்களில் பெரிதும் வேறுபட்ட நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்பவர்களால் படைக்கப் படும் இலக்கியங்களையே இங்கு "புலம்பெயர் இலக்கியம்" என்ற சொற்றொடர் கொண்டு அழைக்கின்றோம். இதனை ஆங்கிலத்தில் Diaspora Literature என குறிப்பிடுவர்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் இன்று உலகமெங்கும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு புலம் பெயர்ந்தவர்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வட அமெரிக்காவில் கனடாவிலும் மற்றும் அவுஸ்திரேலியா விலும் மிக அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். இன்றைய கணிப்பின்படி ஏறத்தாழ ஆறு இலட்சத்திற்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்வதாகக் கணிக்கப்படுகிறது. இந்நாடுகளில் இருந்து ஈழத்தமிழர்கள் படைக்கும் படைப்புக்களே **"புலம்பெயர் இலக்கியம்"** என்ற பெயர் கொண்டு அழைக்கப் படுகின்றன.

## புலம்பெயர் படைப்புக்கள்

புலம்பெயர் படைப்புக் களில் கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய இலக்கிய வடிவங்களே முக்கியமான வையும் கவனத்திற்கு உரிய வையும் ஆகும். இவை தவிர ஏனைய கலை இலக்கிய முயற்சிகளாகப் பின்வருவனவும் நடந்தேறி வருகின்றன. அவற்றுள் நாடகம், சஞ்சிகை – பத்திரிகை வெளியீடுகள், நூல் வெளியீடுகள், ஒலி ஒளி செயற்பாடுகள், மற்றும் தமிழர் தம் அடையாளத்தைத் தக்க வைக்கும் கலாசார செயற்பாடுகள் என்பன முக்கியமானவை.

## கவிதை

புலம்பெயர் படைப்புக்களில் கவிதைகள் பற்றி நோக்கும்போது இதுவரை வெளிவந்துள்ள புலம்பெயர் படைப்புக்களுள் கவிதைத் தொகுப்புக்களே அதிகமானவையாகும். கவிதைகள் அவை பாடுகின்ற பொருட்பரப்பிலும் அவற்றின் புனைதிறன் உத்தியிலும் திருப்திப்படக்கூடிய அளவுக்கு புதிய வெளிச்சங்களைக் காட்டி நிற்கின்றன. புலம்பெயர்ந்த காலத்தில் 80களின் இறுதிவரை தாயக நினைவினையும் அவலத்தையும் பாடிக்கொண்டிருந்த அதிகமான கவிஞர்கள் தற்போது தாம் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டின் சூழலைப் புரிந்து கொண்டு அந்நாட்டின் வாழ்வனுபவங் களையும் பாடத்தொடங்கியுள்ளனர்.

இந்த வகையில் சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், செழியன், கி.பி அரவிந்தன், இளவாலை விஜயேந்திரன், திருமாவளவன், சக்கரவர்த்தி, நட்சத்திரன் செவ்விந்தியன், தா. பாலகணேசன், இளைய அப்துல்லா, முல்லை அமுதன், முல்லையூரான் (மறைவு), மைத்திரேயி, பிரதீபா, ரஞ்சினி, ஆழியாள் என்றதொரு நீண்ட பட்டியலே கவிதையில் உண்டு. நோர்வேயில் இருந்து சுவடுகள் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட "துருவச் சுவடுகள்" என்ற கவிதைத் தொகுப்பே புலம்பெயர்ந்தோர் மத்தியிலிருந்து வெளிவந்த முதலாவது கவிதைத் தொகுப்பாகக் கணிக்கப்படுகிறது. புலம்பெயர்ந்த பெண்கள் மத்தியிலிருந்து வெளிவந்த "மறையாத மறுபாதி" என்ற கவிதைத் தொகுப்பும் மிகுந்த கவளத்திற்குரிய பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வந்த தொகுப்பாகும்.

## சிறுகதை

கவிதைகளுக்கு அடுத்தபடியாக சிறுகதைகள் முக்கியமானவை. புகலிடத்திலிருந்து வெளியான சஞ்சிகைகளில் வெளிவந்த கதைகளைத் தொகுத்து "மண்ணைத் தேடும் மனங்கள்" என்ற பெயரிலான தொகுப்பு ஒன்று 1986இல் வெளியாகியது. இதன் பின்னர் "புலம்பெயர்ந்தோர் கதைகள்", "பனியும் பனையும்" ஆகிய சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவந்தன. பெண் படைப்பாளிகளின் கதைகளைத் தொகுத்து "புது உலகம் எமை நோக்கி" என்று வெளியிட்டனர். இவையெல்லாம் புலம்பெயர் சிறுகதைகளில் தவிர்க்க முடியாத முக்கியமான ஆரம்பகாலத் தொகுப்புகளாகும். இதன் பின்னர் பல முயற்சிகள் நடந்தேறியுள்ளன.

**"புலம்பெயர்வு" என்பது ஒரே அரசியல் பூகோள எல்லையை விட்டு நகர்ந்து சமூக அரசியல் பண்பாட்டுச் சூழ்நிலைகளால் பெரிதும் வேறுபட்ட பிரதேசத்தில் வாழ நேரிடுகிறவர்களைக் குறிக்கின்றது. இவ்வாறு அரசியல் சமூக பண்பாட்டு அம்சங்களில் பெரிதும் வேறுபட்ட நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்பவர்களால் படைக்கப்படும் இலக்கியங்களையே இங்கு "புலம்பெயர் இலக்கியம்" என்ற சொற்றொடர் கொண்டு அழைக்கின்றோம்.**

சிறுகதைகளைப் படைத்து வரும் புலம்பெயர் படைப்பாளிகளில் அ. முத்துலிங்கம், பொ. கருணாகரமூர்த்தி, குமார்மூர்த்தி (மறைவு), க. கலாமோகன், பார்த்திபன், ஷோபா சக்தி, சக்கரவர்த்தி, விமல் குழந்தைவேல், ஆசி. கந்தராஜா, முருகபூபதி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அருண் விஜயராணி, நிருபா, சுமதிரூபன் எனப்பலர் எழுதி வருகின்றனர். புதியவர்களின் வரவும் முக்கியமானது.

## நாவல்

80களின் இறுதிப்பகுதியில் இருந்தே புலம்பெயர் படைப்பாளிகளிடம் இருந்து நாவல்கள் வெளிவரத் தொடங்கின. பார்த்திபனின் பல குறுநாவல்கள் ஆரம்பத்தில் வெளிவந்தன. ஆரம்பத்தில் வெளிவந்த நாவல்கள் தாயக நினைவுடன் தொடர்புபட்டவையாகவும் சீதனப்பிரச்சினை, சாதிப்பிரச்சினை, காதல் மற்றும் திருமண உறவுகள், இனப்போராட்டத்தின் அவலம் என்பவற்றையே மையமாகவும் கொண்டிருந்தன. சிறிது காலத்தின் பின்னரே தாம் வாழ்கின்ற சூழலைச் சுட்டும் படைப்புக்களை வரையத் தொடங்கினர். இவ்வகையில் இன்று புலம்பெயர் நாவல்களைப் படைத்த படைப்பாளிகளில் ஷோபா சக்தி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், விமல் குழந்தைவேல். முல்லை அமுதன், மா. கி. கிறிஸ்ரியன், கி.செ.துரை, பார்த்திபன், இ.தியாகலிங்கம் ஆகியோரைக் குறிப்பிடலாம். இற்றை வரை சுமார் 75ற்கும் மேற்பட்ட நாவல்கள் வெளி வந்துள்ளன.



இவர்களின் படைப்புக்கள் தத்துருபமானவை யாகவும் உணர்வுகளின் பிரதிமைகளாகவும் மற்றும் சிந்தனை தூண்டல் மிக்கவையாகவும் விளங்குகின்றன. அந்த வகையில் புலம்பெயர் இலக்கியங்கள் பின்வரும் விடயங்களை உணர்வுகளுடன் வெளிக் கொணர்கின்றன.

- பிரயாண நிலை அவலம்
- நிறவெறி
- இயந்திரமயமான வாழ்வும் அந்நிய மனோ பாவமும்
- அகதி உணர்வுகளும் அவலங்களும்
- தாயகம் பற்றிய ஏக்கம்
- தகுதிக்கேற்ற தொழில் இன்மை
- புதிய பண்பாட்டுச் சூழல்
- பெண்ணிலை வாதக்கருத்துக்களும் விமர்சனங்களும்
- அரசியல் விமர்சனங்களும் உலகப் பார்வையும்

போன்ற உணர்வுகளின் வெடிப்புக்குக் காரணமான பாடுபொருட்களினை சீதூக்கி இவ்விலக்கிய படைப்புக்கள் வெளிக்கொண்டு வரப்படுகின்றன. அவற்றின் வழியே ஆராயும் போது புலம்பெயர் நாடுகளுக்கு பிரயாணம் செய்வதில் மக்கள் அடையும் அவலங்களை இலக்கியங்களில் சுட்டிக் காட்ட புலம்பெயர் படைப்பாளிகள் தவறுவதில்லை. விசா பெறுவதில் இருந்து பயணப்படுவது வரை அவர்கள் அடையும் துன்பங்கள் உணர்வுகளின் உந்தல்களாக வெளிக்கிளம்புகின்றன. விசா அனுமதி மறுக்கப்படும் போது தம் பொருளாதார நலன் கருதி அபாயமான நிலைகளிலும் துன்பங்களுடனும் பயணப்படும் அவலங்கள் பல அவர்களுக்கு ஏற்படுகின்றன. இதனைத் தன் நண்பன் அனுபவித்த துன்பத்தை எண்ணிப் பாடுவது போல் கி.பி. அரவிந்தன் பின்வருமாறு கவி பாடுவார்.

**கிரேக்க கடல் மடியில் குளிரில் நீ விறைக்கையில்**
**என்னை நீ நினைத்தாயோ?**
**உன் பெயரினை பத்திரிகையில் கண்டேன்**
**கொப்பளித்து பொருமியது**
**வெடிக்காமல் போனது எனது நெஞ்சு**

துன்பப்பட்டு பிரயாணம் செய்து அந்நிய தேசம் வந்த பின் உறைவிடம் தேடி அலைந்து வசதியில்லாத தங்குமிடத்தில் தங்கி நின்று தமது இளமையை தொலைக்கின்றனர் பலர். இவ் அவலத்தை புலம்பெயர் இலக்கியங்களில் தவறாமல் காணலாம். இதனை வ. ஐ. ச. ஜெயபாலன்

**"சூல் கொண்ட பன்றியின் கருவறை போன்று**
**பிராங்பேட் நகரசந்தியில் ஓர் அறையில்**
**போர்வையில் சுருண்ட யாழ்ப்பாணத்து நடைப்**
**பிணங்கள் சிலது**
**எகிப்திய மம்மிகளாய் சுருண்டு**
**கிடக்கும்"** என்று கொதிப்பார்.

தாயகத்தின் இனவெறி வாட்டியெடுத்த தமிழனை அந்நிய தேசத்தில் "நிறவெறி" பரவலாக தாக்குவதும் உண்டு. எம் மக்களை அடிமை போன்று பார்க்கும் வெளி நாட்டவர், எம் மக்களை நாடோடிகள், அகதிகள் போன்று பார்ப்பதினால் புலம் பெயர் தமிழன் உறவியல் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்படுவதும் உண்டு.

**தலித்தாய்ப் பிறந்து தமிழன் எனக் குனிந்து**
**கறுப்பனாய் உன்னை உணர்ந்தேன்**

என்ற கவிவரிகள் இதற்கு மிகச் சிறந்த சான்றாகும்.

உயிர் வாழ்வதற்கும் மேலதிக சம்பளத்திற்கும் தாய் நாட்டில் பட்டு வந்த கடன் அடைப்பதற்கும் என்று தமிழன் வெளிநாட்டில் தன்னை இயந்திரமாக மாற்றுகின்றான். அல்லது மாற்ற நிர்ப்பந்திக்கப் படுகின்றான். கணவன், மனைவி, பிள்ளைகள் குடும்பத்தினுள் ஒரு நேரசூசியின்படி இயங்கும் நிலையால் உணவுகளோ உண்வுகளோ ஒன்றாகப் பரிமாறுவது சாத்தியமற்றதாகின்றது. கவிஞர் ஜெயபாலன் சொல்வது போல் **"செக்குமாடுகள்"** என்று வர்ணிக்கத்தக்க வாழ்க்கை இந்த அவலத்தையும் புலம்பெயர் எழுத்தாளனின் பேனாக்கள் மெல்ல முடியாமல் வெளியே உமிழ்கின்றன. இதனை பாமினி,

**இயற்கையை விழுங்கிய**
**இயந்திரத்தின் தலைநகரில்**
**என் நாட்களை இழக்க**
**நிர்ப்பந்திக்கப்பட்டேன்**

என்று விசனப்படுவாள். மேலும் அந்நிய நாட்டில் முன்பின் அனுபவம் இல்லாத அந்நிய மனோபாவம் தமிழனைப் பாடாய்ப் படுத்தும் அவலங்களும் இலக்கியங்கள் வழியே வெளிப் படுவதுண்டு. வேற்றுமொழி, விகாரமான கலாச்சாரம், வேறு இனம், மதம் என்று தமிழன் தனிமையையும் அகதி என்ற உணர்வினையும் உணர்கின்றான்.

**"இவ் அகதி முகம் பெறவா**
**என் உயிர்க்களை**
**நான் இழந்தேன்"**

என்ற அரவிந்தனின் வரிகள் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வந்நிய மனோபாவம் தமிழனை

**உயிர் வாழ்வதற்கும் மேலதிக சம்பளத்திற்கும் தாய் நாட்டில் பட்டு வந்த கடன் அடைப்பதற்கும் என்று தமிழன் வெளிநாட்டில் தன்னை இயந்திரமாக மாற்றுகின்றான். அல்லது மாற்ற நிர்ப்பந்திக்கப் படுகின்றான். கணவன், மனைவி, பிள்ளைகள் குடும்பத்தினுள் ஒரு நேரசூசியின்படி இயங்கும் நிலையால் உணவுகளோ உண்வுகளோ ஒன்றாகப் பரிமாறுவது சாத்தியமற்றதாகின்றது.**

வாட்டி வதைக்கும் அவலங்களைப் புலம்பெயர் இலக்கியம் எங்கும் காணமுடிகின்றது.

பொருளாதாரம் போர் போன்ற காரணங்களினால் தன் உறவுகளைப் பிரிந்து அந்நிய தேசத்தில் அடைக்கலம் புகுந்த மக்கள் தம் உறவுகளையும், தாய்த் தேசத்தையும் எண்ணி வருந்துகின்றனர். "வாழ்வதற்கு மட்டும்" பிறந்த மனிதர் ஜீவிக்கும் அந்நிய தேசத்தில் தம் உறவுகளுக்காக ஏங்கித் தவிக்கின்றனர். உறவுகளுக்காக மாடாய் உழைத்தாலும் தம் துன்பங்களை தாயகத்திற்கு தெரிய விடாமல் வனவாசம் செய்கின்றனர்.

"நாங்கள் நல்ல சுகம்
உங்கள் சுகம் எப்படி"
பொய் எழுதி எழுதி
பேனாவே நகைக்கின்றது
"உனக்கென்ன வெளிநாட்டில்"
ராசா வாழ்க்கை!
செலவு பணம் கேட்டு வருகின்ற
தபால்களின் கேலிகள்"

போன்ற கவிதை அடிகள் இதற்கு நல்ல உதாரணங்களாகும். மேலும் தாயகத்தில் நடக்கும் போர்கள் இடம்பெயர்வு பற்றிய எண்ணத்தால் தம் மண் வாசனையை எண்ணி வருந்துகின்றனர் புலம்பெயர் மக்கள். இந்த ஏக்கமே புலம்பெயர் இலக்கியங்களில் அதிகம் இடம்பிடித்துள்ளது என்று கூறலாம்.

"சிறுகுருவி வீடு கட்டும்
தென்னோலை பாட்டிசைக்கும்
சூரியப் பொடியன் செம்பரத்திப்பூவுடன் புணரும்
என் ஊரின் இருப்பிழந்தேன்"

என்ற வரிகளும்

இன்னும் எத்தனை நாள்
இந்து மகாகடலில் மரகத வீணையென
வடகிழக்காக நீண்டு இருக்கும்
தாய் நாட்டை நெஞ்சில் சுமந்து
நான் ஏங்குவது?
நாட்டேக்கம் என் நெஞ்சினை
நஞ்சாய்ச் சபிக்கின்றதே.

என்ற கவிஞர் ஜெயபாலன் வரிகள் இவ் ஏக்கத்திற்கு ஒரு பானை சோற்றின் பதப்பருக்கைகள் போல் தெரிகின்றன. இவ் உணர்வுகளுடன் ஒவ்வொரு புலம்பெயர்ந்த தமிழனும் இருப்பதை புலம்பெயர் இலக்கியங்கள் பரவலாய் உணர்த்துகின்றன.

புலம்பெயர் இலக்கியங்களில் அடுத்து முக்கியம் பெறுவது "பெண்ணிய சிந்தனைகள்" ஆகும். எம் தாய் நாட்டின் தொழுநோயாக படிந்துள்ள பெண்களுக்கு எதிரான பல மூடநம்பிக்கை நோய்களும் அடக்கு முறைகளும் புலம்பெயர் தேசத்திலும் பரவியுள்ளன. ஆதலால் அங்கும் பெண்ணியம் பற்றி இலக்கிய சாரங்கள் மேற்கிளம்புகின்றன. ஆண் பெண் சமத்தும், பெண்ணிய சிந்தனைப் பரம்பல், விழிப்புணர்வுகள், சீதன எதிர்ப்பு அதன் அவலம், பெண் அடிமை எதிர்ப்பு போன்ற விடயங்கள் ஆண், பெண் இருபால் படைப்பாளிகளின் உள்ளத்தில் இருந்தும் குறியிட்டுக் கிளம்புகின்றன.

எங்களைப் பாருங்கள்
எங்கள் சேலைகளையும் ரவிக்கைகளையும் அல்ல
எமது உணர்ச்சிகளை
எங்கள் முகத்தையும் மார்புகளையும் அல்ல
மனக் குமுறல்களை

என்ற கல்யாணியின் "மறையாத மறுபாதி" என்ற கவிதைத் தொகுப்பின் வரிகள் பெண்ணியப் பார்வைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

ஆண் பெண் சமத்துவம் பற்றிக் கூறும் போது

சமையல் தொடங்கி படுக்கையறை வரை
இலவசமாய் வழங்கியது போதும்
சுமைகளும் துளித்துளியான துன்பத்தின்
வெளிப்பாடுகளும்
மட்டும் உனதல்ல
சூழ உள்ள சகலவற்றிலும் உனக்கும் சம பங்குண்டு
வெளியேவா?

என்ற கவிதை பெண்ணிய விடுதலை மற்றும் சமத்துவத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

பெண்ணியப் பார்வையில் புலம்பெயர் இலக்கியங்கள் மற்றோர் விடயமாக பெண்களின் திருமண அவலங்கள் குறிப்பிடப்படுகின்றன. முன்பின் தெரியாத வெளிநாட்டு ஆண்மகனை பெண்ணின் விருப்பம் கேட்காமல் மணம் முடித்து ஏற்றுமதிப் பொருள் போல் வெளிநாடு அனுப்புவதும் அங்கு அவள் அடையும் எதிர்பாராத தோல்விகளும் ஏமாற்றங்களும் புலம்பெயர் இலக்கியங்களால் வெளிக்காட்டப்படுகின்றன.

12 பேர் மனைவியானோம்
யாருக்கு என்று கேள்
ஒருத்தி எருமை மாட்டிற்கு
ஒருத்தி கல்லுக்கு
ஒருத்தி ஆஸ்பத்திரிக்கு
ஒருத்தி எதிரிக்கு ..... இப்படியாக

இதனைப் போல் தாயகத்தில் காணப்படும் சீதனம் எனப்படும் வரதட்சணைக் கொடுமை அந்நிய நாடுகள் சென்றாலும் பெண்களை விடுவதாயில்லை இச்சீதனக் கொடுமை பற்றிய புலம்பெயர் பெண் எழுத்தாளர்கள் பலர் தம் ஆதங்கத்தை அல்லது அனுபவத்தை இலக்கியங்களில் சிந்தியுள்ளனர். எண்ணற்ற கவிதைத் தொகுப்புகளும் "ஆண்கள் விற்பனைக்கு" போன்ற நாவல்களும் திருமணச் சந்தையின் அவலங்களைச் சுட்டிக்காட்டுகின்றன.

இதனை நிருபா "மாப்பிள்ளைக்கு வந்தனங்கள்" என்ற கவிதைத் தொகுப்பில்

......... பூமியை விட்டு நான்
செவ்வாய்க் கிரகம் சென்றாலும்
சூரியனையும் சந்திரனையும் சீதனமாய்க் கேட்பீரோ

என்று பாடி இருக்கின்றார். மேலும் இவற்றுடன் பாலியல் எண்ணப்பாடுகளும் அரசியல் நோக்கு மற்றும் உலகியல் நோக்கு என்பவையும் புலம்பெயர் இலக்கியங்களில் மேற்கிளம்புவதை அவதானிக்கலாம். போர் காரணமாக அவலப்பட்டு இருக்கும் தன் நாட்டின் அரசியல் சூழ்நிலைகளையும் படுகொலைகள் அகதிவாழ்வு பற்றியும் புலம்பெயர் இலக்கியவாதிகள் படைப்புக்களை ஆக்குகின்றனர்.

இந்த வகையில் புலம்பெயர்ந்தாலும் உணர்வுகளின் மோதல்களால் புலம்பெயர் மக்கள் தம் தமிழ் கொண்டு இலக்கியம் படைக்கின்றனர். இவ்விலக்கியங்கள் சமூகத்தில் பல அதிர்வுகளையும் மாற்றங்களையும் சிருஸ்டிக்க தவறுவதில்லை என்பதை இங்கு உள்ளுணர முடிகின்றது.



குணரட்ணம் பிரதீப் (திரடத்தூய்மன்)
மானிப்பாய் இந்துக் கல்லூரி
2012 கலைப்பிரிவு

# வ. அ. இராசரத்தினத்தின் தோணி

## - ஒரு நயப்புரை



தோணி எனும் சிறுகதையானது வ.அ. இராசரத்தினம் எனும் கதாசிரியரால் எழுதப்பட்டது. ஒரு சிறுகதையானது எவ்வெவ் விதிகளில் எழுதப்பட்டு ஒழுங்கமைக்கப்பட வேண்டுமோ அவ்வாறெல்லாம் எழுதப்பட்டுச் சிறுகதை இலக்கணம் சிறப்புறக் காணப்படும் ஒரு சிறுகதையாக இக்கதை மிளிர்கிறது. இக்கதை மிகவும் எளிமையாக உள்ளதோடு கதையின் கருப்பொருளைக் கதையை வாசித்து செல்லும் வாசகரால் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாய் உள்ளது. இக்கதையின் மையக் கருத்தானது உழைப்பவனுக்கு உழைக்கும் கருவி சொந்தமாக இருக்க வேண்டும். உழைப்பின் பயனும் உழைப்பவனுக்கு உரியதாக இருக்க வேண்டும். மற்றவர்கள் அதனைச் சுரண்டி வாழக்கூடாது என்ற தொனிப் பொருளில் அமைந்துள்ளது.

இக்கதையானது தன்னிலையில் சொல்லப் படுகிறது. கதையில் சொல்ல வந்த கருத்தினை மிக அழகாக எடுத்துச் சொல்லி வாசகர் மனதில் பதிய வைக்கிறார். கதாசிரியர் தனது கதைக் கருவை அழகாக வெளிப்படுத்தியுள்ளமையை பின்வரும் உரை யாடல்களிலே அவதானிக்கலாம்.

"இந்தத் தோணி எல்லாம் அவருடையது தான் நாம் மீனைப் பிடித்து அவருக்கு தான் கொடுக்க வேண்டும்."

"நமக்கு காசு தரமாட்டாரா?"

"நம் கடனில் கழித்துக் கொள்வார். விலையை நமக்குச் சாப்பாட்டிற்காக மேலும் கடன் தருவார்"

இக்கதையிலே உத்திகள் அதிகமாக கையாளப்பட வில்லையாயினும் கதை சொல்லும் பாங்கினால் கதை வலுவடைந்து வாசகர் மனதில் நிலைத்திருக்கின்றது. கதாசிரியர் தானாகவே முன்வந்து கதையைச் சொல்கிறார். சொந்த அனுபவத்தினைக் கதையாகச் சித்தரிப்பதனைப் போன்று கதையை உருவாக்கியுள்ளார்.

"அப்படியானால் நாம் ஒரே கடன்காரராகத் தான் இருக்க வேண்டுமா?"

"என்னமோ அப்பா, நானும் தலை நரைக்கும் மட்டும் உழைத்து விட்டேன் கடனை இறுக்க முடியவில்லை. நமக்கென்று புதிதாக ஒரு தோணி வாங்கவும் முடியாது"

இக்கதையிலே உத்திகள் அதிகமாக கையாளப்படவில்லையாயினும் கதை சொல்லும் பாங்கினால் கதை வலுவடைந்து வாசகர் மனதில் நிலைத்திருக்கின்றது. கதாசிரியர் தானாகவே முன்வந்து கதையைச் சொல்கிறார். சொந்த அனுபவத்தினைக் கதையாகச் சித்தரிப்பதனைப் போன்று கதையை உருவாக்கியுள்ளார். கதையின் எந்தப் பகுதியையும் அலுப்புத் தராதவாறு மிகக் கவனமாக நகர்த்திச் சென்றிருக்கிறார்.

இக்கதையானது பண்டிதர் முதல் பாமரர் வரை விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இலகுவான எளிய மொழி நடையில் அமைந்துள்ளது. இக்கதையில் பேச்சு வழக்குச் சொற்கள் குறைவாகக் கையாளப்பட்டும் இலக்கண நடைச் சொற்கள் அதிகம் கையாளப்பட்டு முள்ளது. ஆனால் அது ஒரு பெரிய குறைபாடாகத் தோன்றவில்லை. விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் எளிய நடையிலே அமைந்துள்ளது. இக்கதையில் ஆசிரியரால் அற்புதமான வர்ணனை கையாளப் பட்டுள்ளது. கதை நிகழ்களத்தை அப்படியே கண் முன்னே காட்சி யாக வருவித்தி ருக்கிறது. "ஒரு குடிசையிலிருந்து மற்றொரு குடிசைக்குப் போகப் பெண்களின் தலைவகிடு போல் ஒற்றையடிப் பாதைகள் உள்ளன."

"எங்கள் வீட்டுக் கூரைக்கு ஊடாகத் துள்ளிப் பாய்ந்து நிலத்தில் வெள்ளித் துண்டுகளை போல வட்ட வட்டமாக ஒளியைச் சிந்தும்" போன்ற உரையாடல்கள் நிகழ்கால வர்ணனையைப் பிரதிபலிக்கின்றன. சூழலில் நடக்கும் ஒவ்வொரு சிறு விடயத்தையும் ஆராய்ந்து அவதானித்துக் கதையினுள்ளே புகுத்தியுள்ளார். கடற்கரைக் கிராமத்தில் காணப்படும் தென்னை மரங்கள், கடற்கரையோரத்தில் வீசும் கச்சான் காற்று, ஆற்றங்கரையோரத்தில் உள்ள இராவணன் மீசைகள், இறால் பிடித்தல், அடம்பன் கொடிகள் போன்றவை அழகாக விபரிக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு ஆசிரியர் கதையினூடாக அழைத்துச் செல்கிறார்.

இக்கதையில் பல பாத்திரங்கள் கதைக்குப் பலம் சேர்க்கின்றன. பிரதான பாத்திரங்களாக கதை சொல்பவர். அப்பா, அம்மா, செல்லன், கனகம், முதலாளி போன்றோரைக் குறிப்பிடலாம். இதில் அப்பாவாக வரும் கதாபத்திரம் மிகவும் பரிதாபத்திற்குரிய கதாபத்திரமாகக் காணப்படுகிறது. கடன் வாங்கியே காலத்தை ஓட்டிக் கொண்டிருப்பதும் எவ்வளவு காலமாக உழைத்தும் கடனை அடைக்க முடியாததாக உள்ள கதை வசனம் அவரின் பரிதாபத்தை எடுத்தியம்பு கின்றது. தனக்கு அநீதி நடப்பது தெரிந்தும் எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ள பாத்திரமாக காணப்படுகிறது. கதை சொல்லும் (நான்) பாத்திரம் வீட்டு நடப்புப் பற்றி அறியாத பாத்திரமாக உள்ளது. "அம்மாவிற்கு வெளியில் என்ன வேலை இருக்குமோ என்னால் ஊகித்து கொள்ள முடியாது ஆனால் வீட்டிற்கு வரும் போதெல்லாம் மரவள்ளிக் கிழங்கும், தேங்காயும் கொண்டு வருவாள்" இவ் வசனத்தினூடாகவும் தந்தை மீன்பிடியில் ஈடுபட்டும் கடனிலே காலத்தைக் கழித்து வருகிறார் என்பதையும் தெரியாமல் இருக்கும் பாத்திரமாக சித்தரிக்கப் படுகின்றது. ஆனால் திடமான முடிவு எடுக்கும் திறமையும், விடா முயற்சியும், இலட்சிய உணர்வும், கனவுகளைக் காணும் தன்மையுமுடைய பாத்திரமாகக் காணப்படுகிறது.

தனது இலட்சியமான சொந்தத் தோணிக்காகக் கனகத்தை திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்து நெருங்கிப் பழகுவதும் தோணி கடலில் மூழ்கிவிட்டதை அறிந்து காதலியைச் செல்லனுக்கு விட்டுக் கொடுப்பதும் அவனது நல்ல பண்பையும் இலட்சிய வெறியையும் எடுத்துக் காட்டுகின்றன.

இக்கதையில் உத்திகள் கையாளப்பட்டது குறைவாயினும் உவமைகள் கதைக்குத் தகுந்தாற் போல் கையாளப்பட்டுள்ளன. "பெண்களின் தலைவகிடு போல் ஒற்றையடிப் பாதைகள் செல்கின்றன" "நிலத்தில் பட்டும் படாமலும் உருண்டு உருண்டு பந்தயக் குதிரை போல வேகமாக எங்களை நோக்கி ஓடிவரும் "கடற்பரப்பிலே வெள்ளைச் சீலைப் பாய்கள் வட்ட வட்டமாக வண்ணத்துப்பூச்சிகளைப் போல் அழகாக இருக்கும்" "பாசிக் கொடி போல்" "கிளிஞ்சல் போல" "கற்பாரிலே நிற்கும் செம்மீனைப் போல" "நீரின் இடை மட்டத்தில் ஆடும் பாசிக் கொடிபோல மென்மையாக ஆடிக் கொண்டு தான் நடப்பாள்" மேற்குறிப்பிட்டவாறான உவமைகள் கதையில் ஏற்ற இறக்கத்திற்கு ஏற்ப கையாளப்பட்டுள்ளன.

**துளசி சிவநாதன்**
**யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**

அப்துல்கலாம் இளைஞர்களை கனவு காணுங்கள் என்று கூறியதைப் போல இக்கதையில் வரும் இளைஞனும் கனவு காணுகிறான். "எனக்கென்று தோணியொன்று கிடையாமல் நான் எந்தப் பெண்ணின் வாழ்வையும் பாழாக்கப் போவதில்லை...." "இன்னமும் தோணி எனக்கு கனவுப் பொருளாகவே இருக்கின்றது. அதனாலென்ன உணர்ந்த கனவு செயல்மிக்க நனவின் ஆரம்பம் தான் அப்போது எனக்கு மட்டுமல்ல என் நண்பர்கள் எல்லோருக்குமே சொந்தத் தோணி இருக்கும்" போன்றவாறு எல்லாம் அவன் கற்பனை வளர்ந்து செல்கின்றது.

வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்கள் இக்கதையினுடைய அமைப்பு முறையைப் பின்பற்றிக் கதை எழுதக் கூடிய அளவிற்கு இக்கதை சிறந்த சிறுகதைக்கு எடுத்துக் காட்டாய் அமைகிறது.

# வாசகர்க்கு விருது


**2011ஆம் ஆண்டு நடைபெற்ற கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வில் தமிழருவி கௌரவ ஆலோசகர், வாசகர்கள் ஆகிய நால்வர் விருது பெற்றுள்ளனர். அவர்கள் பற்றிய சிறிய அறிமுகம் ஒன்று இங்கு இடம்பெறுகிறது.**

## கலாபூஷணம் சிவ. மகாலிங்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு திருப்பரங் குன்றம் எனப் பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளையால் போற்றப்பட்ட குப்பிழான் கிராமத்திற் பிறந்தவர் சிவ. மகாலிங்கம் அவர்கள். சிவசுப்பிரமணியம் அன்னபூரணம் தம்பதிகளின் மகனான இவர் 07.03.1949இற் பிறந்தார்.

சைவத்தின் பெருமைகளைச் சொற்பொழிவுகள் மூலம் எடுத்துக் கூறுவதையே தனது வாழ்வின் பிரதான நோக்கமாகக் கொண்டு சமயப்பணி புரிந்து வருபவர். மென்மையான, கனிவான நடையில் கணீரென்ற குரலில் இவர் கூறும் சமயவாழ்க்கைக்கான நெறிமுறைகள் கேட்பவர் உள்ளங்களில் இலகுவாகப் பதியும். இவர் பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ள போதும் இணுவில் செகராச சேகரப்பிள்ளையார் ஆலயத்தில் வழங்கப்பட்ட சிவத்தமிழ் வித்தகர் பட்டமே இவரை எப்போதும் ஒட்டிக் கொண்டது. கலைமாணி (B.A) பட்டப்பின் கல்வி டிப்ளோமா (Dip.in.Edu) சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி (M.A.) முதலிய பட்டங்களையும் இவர் பெற்றுக்கொண்டார்.

20 வருட ஆசிரிய சேவையுடன் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளர், உபஅதிபர் பதவிகளையும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஆகிய பதவிகளையும் இவர் வகித்துள்ளார்.




எப்போதும் இறைபுகழ் பரப்புவதையே நோக்க மாகக் கொண்ட இவர் சமய தத்துவக் கருத்துக்களை எடுத்துக் கூறும் ஆறு நூல்களை வெளியிட்டுள்ளார். திருமுறைச் செல்வம், ஞானவிளக்கு, சிவஜோதி, முருக மந்திரம், ஞானதீபம், தரிசனங்களும் வாழ்வியலும் என்பனவே அவையாகும். சமயம், கல்வித்துறை தொடர்பான ஐம்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார்.

சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர் களின் பங்களிப்பு என்னும் தொடர் கட்டுரையைத் தமிழருவி சஞ்சிகையில் இவர் எழுதி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் தமிழருவி சஞ்சிகையின் கௌரவ ஆலோசகராக இருந்து சஞ்சிகை சரியான நெறியிற் செல்லப் பேருதவி செய்துவருவதை நன்றியுடன் நினைவுகூர வேண்டியது அவசியமானதாகும்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் சமயப்பணி மேலும் தொடர தமிழருவியின் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.



## கலாபூஷணம் செல்லப்பா நடராசா

2011ஆம் ஆண்டிற்கான கலாபூஷணம் விருது பெற்றவர் களுள் ஒருவர் முதுபெரும் பத்திரிகையாளரான திரு.செல்லப்பா நடராசா அவர்கள். இவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் அறிக்கையாளராகவும் சிரேஷ்ட அறிக்கையாளராகவும் சுமார் முப்பது வருட காலம் பணி புரிந்து இளைப்பாறிய அனுபவஸ்த்தர். "எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்" எனும் இவரது நூலைக்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் 1986ஆம் ஆண்டு வெளியிட்டது. இந்நூல் பாராளுமன்ற நடைமுறைகள் சம்பிரதாயங்கள் மாண்புகள் மகிமைகள் மரபுகள் பற்றியதாகும். இத்துறையில் தமிழில் வெளிவந்த முதல் நூல் என அறிஞர்களால் பாராட்டப் பெற்றது. இந்நூல் இவருக்கும் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது. இரண்டாம் பதிப்பும் இன்று வெளிவந்துள்ளது.

திரு. நடராசா பாராளுமன்ற சேவையில் இணைய முன் லேக்கவுஸ் தினகரன் நாளிதழில் அலுவலகப் பத்திரிகையாளராக 1954ல் இணைந்து கொண்டவர். வி.கே.பி. நாதன், பேராசிரியர் க. கைலாசபதி, ஆகியோர் தினகரன் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய போது பத்திரிகைத் துறையின் சகல நுணுக்கங்களையும் கற்றுத் தேறியவர். தினகரனில் 1961ம் ஆண்டு வரை கடமையாற்றிய காலத்திலேயே புகழ் பூத்த பத்திரிகை யாளராக ஒளிர்ந்தவர். இவரது செய்திகள், விமர்சனங்கள், கட்டுரைகள், வர்ணனைகள், நகைச்சுவைகளுக்கு அன்று வாசகர்களிடையே பெரும் வரவேற்பிருந்தது.

பாராளுமன்ற சேவையில் இணைந்ததன் பின்னரும் இவர் தன்னைப் பத்திரிகையாளனாகவே அடையாளப் படுத்திக் கொண்டார். பாராளுமன்றம் பற்றி இவர் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் வாசகர்களிடையே அமோக ஆதரவைப் பெற்றன.

கடந்த அறுபது வருடங்களாகப் பத்திரிகைத் துறையில் அனுபவம் வாய்ந்த இவர் பல்வேறு வகையான பல நூறு கட்டுரைகளின் சொந்தக்காரர். இவர் மாணவராக இருந்த காலத்தில் (1950ஆம் ஆண்டு காலப் பகுதியில்) மிகப் பிரபல்யம் வாய்ந்த புகழ்பூத்த செய்தியாளராக விளங்கிய அச்சுவேலி திரு.எஸ். செல்லத்துரையின் தூண்டுதல்படியே அவருக்கு உதவியாகச் செய்திகளை எழுத ஆரம்பித்தார். இன்று வரை இவரது எழுத்துப் பணி தொடர்கிறது.

பாடசாலைப் பருவத்தில் தனக்கிருந்த வாசிப்புப் பழக்கமே தன்னை மேல் நிலைப்படுத்தியதெனக் கூறும் இவர் கோண்டாவில் பாடசாலையில் தாம் கற்ற இலக்கண இலக்கியங்களையும் தமிழையும் பற்றி என்றும் பெருமையில் திளைப்பவராக உள்ளார்.

## கலாபூஷணம் கே. ஆர். டேவிட்



ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களில் முதன்மையான ஒருவராகக் கருதப்படும் கே. ஆர். டேவிட்டின் முழுப்பெயர் கிறகோரி இராயப்பு டேவிட் என்பதாகும். இவர் மட்டுவில் வடக்குக் கிராமத்தில் 07.07.1945ல் இராயப்பு அருளம்மா தம்பதிகளின் 3ஆவது மகனாகப் பிறந்தார்.

1966ம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்த "புகலிடம்" சிறுகதையுடன் இவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமாகின்றது. இது முதற்கதையாக இருந்தபோதும் இவருக்குத் தனியான தொரு கணிப்பை ஏற்படுத்தியது. இதன்பின் வீரகேசரி, தினபதி, தினகரன், ஈழநாடு, முரசொலி, ஈழநாதம் முதலிய பத்திரிகைகளிலும் மல்லிகை, சிரித்திரன், சுடர், கலைமுகம், ஞானம், வானொலி மஞ்சரி முதலிய சஞ்சிகைகளிலும் இவரது சிறுகதைகள் தொடர்ந்து வெளிவரத் தொடங்கின.

இவரது "தனி ஒருவனுக்கு........" என்ற சிறுகதை தகவம் இலக்கிய அமைப்பினால் நடாத்தப்பட்ட ஐந்து வருடச் சிறுகதைத் தேர்வில் முதலிடம் பெற்றது. நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவர் தமது சிறுகதைகளிற் சிலவற்றைத் தெரிவு செய்து ஒருபிடிமண் என்னும் தொகுப்பாக 1994ல் வெளியிட்டார்.

பாலைவனப் பயணிகள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்னும் இருகுறு நாவல்களையும் எழுதியுள்ள இவரது புகழ்பெற்ற நாவல் "வரலாறு அவளைத் தோற்றுவிட்டது" என்பதாகும். 1976ல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்த இந்த நாவல் மலையக மக்களின் வாழ்வியலைக் கருப்பொருளாகக் கொண்டதாகும்.

இவர் இலக்கியத்துறையில் மட்டுமன்றி நாடகத் துறை, ஓவியத்துறை, சிற்பத்துறை ஆகியவற்றிலும் ஆர்வம் உடையவராக இருந்தார். இவரால் வரையப்பட்ட ஓவியங்கள் இப்போதும் யாழ்ப்பாணத்தில் பல சனசமூக நிலையங்களிலும் வீடுகளிலும் பேணப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

தமிழ் இலக்கியப்பரப்பில் அழியாத்தடம் பதித்த கே. ஆர். டேவிட் அவர்கள் மேலும் பல விருதுகளையும் வெற்றிகளையும் பெறத்தமிழருவி வாழ்த்துகிறது.

## கலாபூஷணம் இராசையா பீதாம்பரம் (பற்குணம்)


கலைவளர்ச்சியில் பெரும்பங்காற்றி வரும் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திரு. இராசையா பீதாம்பரம் அவர்கள். சிறந்த நாடகக் கலைஞராக விளங்கும் இவர் தனது 13ஆவது வயதில் கலைஞர் கருணாநிதியின் (நச்சுக் கோப்பை) என்னும் நாடகத்தில் நடித்ததன் மூலம் தனது கலைவாழ்வை ஆரம்பித்தவர்.

சிறந்த நாடக நடிகராக மட்டும் அன்றித் தயாரிப் பாளராகவும் விளங்கும் இவர் வீரமைந்தன், திப்புசுல்தான், சரியா? தப்பா?, இன்பக்கனவு, இடிந்த கோவில், மிஸ்டர் கந்தப்பு, பரியாரியார் பரமசிவம் ஆகிய நாடகங்களை நெறியாள்கை செய்துள்ளார். இவற்றில் முக்கியமான பாத்திரம் ஆகிய கதாநாயகன் பாத்திரத்தில் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியு ள்ளார். இவர் தான் ஆரம்பித்த வண்ணை கலைவாணர் மன்றத்தினூடாகவே பல நாடகங்களை மேடையேற்றினார்.

இவர் யாழ். மாநகரசபை நூலகத்திற் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது நாடகக் கலைப்பங்களிப்பைப் பாராட்டி 1994ம் ஆண்டு அனைத்துலக எம்.ஜி.ஆர். பேவையினர் "நடிகமாமணி" என்ற பட்டத்தையும் 2005ஆம் ஆண்டு நல்லூர் பிரதேசசெயலக கலாசாரப் பேரவையினர் "கலை ஞானச் சுடர்" என்ற படத்தையும் வழங்கிக் கௌரவித்தனர்.

இக் கௌரவங்களுக்கெல்லாம் மகுடம் சூட்டியது போல் இவருக்கும் கடந்த ஆண்டின் இறுதியில் கலாபூஷணம் விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழருவியின் முதல் இதழி லிருந்தே வாசகராக இருந்து ஆக்கபூர்வமான கருத்துக் களைக் கூறிவரும் இவரது பணிகள் மேலும் சிறக்கத் தமிழருவி வாழ்த்துகிறது.





# பனையோலை இராமன் க(ர)தைகள்

## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்

### 4. திருவிளையாடற் காதை

ம.பா.மகாலிங்கசிவம்

பனையோலை ராமன் சேர் தனது க(ர)தைகளைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருந்தார். அவரிடம் காதற்கதைகளும் எவையாவது இருக்குமா என்று அறியும் ஆவல் எனக்கு ஏற்பட்டது. (அதென்னமோ பாருங்க, ஒருத்தன் காதலிக்கிறதைவிட இன்னொருத்தரின்ரை காதற்கதையை நோண்டிக் கேக்கிறதிலை தான் "கிக்" அதிகம்)

அதென்னமோ பாருங்க, ஒருத்தன் காதலிக்கிறதைவிட இன்னொருத்தரின்ரை காதற்கதையை நோண்டிக் கேக்கிறதிலை தான் "கிக்" அதிகம்

"சேர், நீங்க சின்ன வயதிலை காதல் கீதல் ஒண்டிலையும் அகப்படேல்லையே?"

முகத்திலை ஒரு சிரிப்பு. அதுக்குத் தொடக்கமும் முடிவும் இல்லாம "ஸ்ரில்"லை விட்ட படம் மாதிரி எழுதி ஒட்டியிருந்தது. எங்கையோ ஆழக் கிணத்துக்கை நினைவுகள் இறங்கிப் போறது மாதிரியும் தெரிஞ்சுது. போய்க்கொண்டே இருந்தார். இருந்தாற் போல, தேடப்பட்ட அறுந்த வாளி பாதாளக் கரண்டியிலை கொழுவினது மாதிரி ஒரு பிரகாசம். "ஓம் தம்பி நானும் அந்த இழவிலை (Love?) மாட்டுப்பட்டனான்தான். ஒரு பிள்ளை நல்ல பணக்காரி. 'ரொனிக்' விளம்பரங்களிலை வருமே அந்த மாதிரி.




'அப்ப அந்த மாதிரித்தான் எண்டு சொல்லுங்கோவன். அந்த ரொனிக் அழகியை எங்கை முதலிலை சந்திச்சனீங்கள்?' "ஒரு பண்ராண்டிலைதான்."

தன் முதுமைச் சுருக்கம் விழுந்த முகத்துக்கு ஒத்துவராத இளமை கலந்த சிருங்கார முறுவலுடன் சொல்லத் தொடங்கினார். "பஸ்ராண்டிலை அந்தப் பிள்ளை நிண்டு கொண்டிருந்தது? அதுக்கு முதல், நான் அந்தப் பிள்ளையைப் பாத்ததில்லை. அவள் குதி உயர்ந்த 'ஹீல்ஸ்' போட்டிருந்தாள். ஹீல்ஸில் குதிக்காலுக்கும் முன் பாதப் பகுதிக்கும் இடையே பெரிய இடைவெளி. நாய்க்குட்டியொண்டைக் கடிக்கிறதுக்காக நாய் ஒண்டு துரத்திக் கொண்டு வந்தது. உயிர்தப்ப வேகமாக ஓடிவந்த அந்த நாய்க்குட்டி ஹீல்ஸின் இடைவெளிக்குள் ஒருபக்கத்தாலை நுழைஞ்சு மற்றப்பக்கத்தாலை ஓடிவிட்டது. நாய் அதுக்குள்ளால் போக முடியவில்லை. நாய்க்குட்டி தப்பிவிட்டது"

தன்னை அறியாமலே தனது ஹீல்ஸின் இடைவெளி மூலம் ஒரு நாய்க்குட்டியைக் காத்த ஜீவகாருண்யக் கன்னிமேல் அவருக்குக் காதல் ஏற்பட்டுவிட்டது.

இறுக்கமான பாவாடையில் முன்னங்காலும் பின்னங்காலும் பிணைக்கப்பட்ட நாம்பன் மாதிரி நடக்கமுடியாமல் அவள் நடந்த கம்பீரநடை தன்னைக் கவர்ந்துவிட்டதாகக் கூறிய அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். "தம்பி, இறுக்கற் பாவாடையோடை நடந்து வந்த அந்தப் பிள்ளை வயிரவர் கோயிலுக்குப் போனா என்ன நேர்த்தி வைக்கும்?"

"என்ன நேர்த்தி வைக்கும்?" விடை தெரியாமல் அவரிடமே கேள்வியைத் திருப்பி விட்டேன். "வயிரவா, என்னை நாய் கலைக்கக் கூடாது" அவரது கற்பனா சக்தி என்னைப் பிரமிக்க வைத்தது.

சீதையின் அங்க அடையாளங்களை அங்குலம் அங்குலமாக அனுமானுக்கு வருணித்த இராமனைப் போல் அந்தப் பிள்ளையின் அங்கங்கள் ஒவ்வொன்றாகப் புகுந்து விளையாடத் தொடங்கிவிட்டார். கம்பன் மாதிரி அதை வரிக்கு வரி எழுதுவது எனக்கு நாகரிகம் இல்லை.

அவரது வர்ணனைகள் அவரது காதலியின் முதல்நாட் சந்திப்பை எனக்கு "ரீ-பிளே" போட்டுக் காட்டுவது போல இருந்தன. இறுதியாக,

தன்னை அறியாமலே தனது ஹீல்ஸின் இடைவெளிமூலம் ஒரு நாய்க்குட்டியைக் காத்த ஜீவகாருண்யக் கன்னிமேல் அவருக்குக் காதல் ஏற்பட்டுவிட்டது.

"ஒன் தஸ்பொட் லவ் தம்பி. ஒன்தஸ்பொட் லவ்" எண்டார் மிகுந்த படபடப்புடன். (அவரது ஆங்கில அறிவு, வார்த்தைப் பிரயோகம் பற்றி முன்னரே சொல்லியிருக்கிறேன்.)

ஒன் தஸ்பொட்டிலேயே (சகவாசதோஷம் மன்னிக்கவும்) அவளிடம் தனது காதலைச் சொல்லிச் சம்மதம் கேட்டார் அதிரடி மன்னன் பனையோலை ராமன். அவர் சிறுவயதிலிருந்தே இலக்கிய ஆர்வம் மிக்கவராக இருந்ததால் இலக்கிய வழக்கில் தனது காதலைத் தெரிவித்தார். "அன்பே, என் இதய அறை வெறுமையாக இருக்கிறது. அங்கே குடியிருக்க வருவாயா?'' "செருப்பைக் கழட்டிறதே?''

"இதயம் கோயில் இல்லை. நீ செருப்புடனேயே வரலாம்'' எண்டார் அவர்.

அதுக்கு அந்தப் பிள்ளை எந்தக் கதையும் கதைக்காமல் பஸ்ராண்டுக்கை இருந்த ஒரு கடையிலை யானைப் போத்தல் சோடா ஒண்டு வாங்கி 'மடக் மடக்' எண்டு குடிச்சிட்டுப் போட்டுதாம்.

''வாடா போடா எண்டு பேசினாலும் தாங்கியிருப்பன். சோடாவோடை போனதை மறக்க ஏலுதில்லை'' எண்டு சொல்லேக்கை அவற்றை நாக்குத் தளதளத்தது.

அவர் எவ்வளவோ மடக்கிக் கதைச்சும் அந்தப் பிள்ளை மடங்கவே இல்லை எண்டு மிகக் கவலையோடை சொன்னார். "உங்கடை உடுப்பு நடப்புக்கு ஆர்தான் மடங்குவாளவை'' மெதுவாக முணுமுணுத்தேன். "என்னதம்பி சொன்னனீர்?'' மனிசனுக்குப் பாம்புக்காது. கேட்டுவிட்டது. "இல்லைசேர். உங்கடை காதல் நிறை வேறாத படியால் எனக்கு நல்லகதை கிடைச்சிருக்கு'' எண்டு சொல்லிச் சமாளிச்சன்.

காதலைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள் படிக்கிற ரியூசனிலை போய் எடுபிடி வேலையாளாச் சேர்ந்தார். அந்த வேலைக்குத் தெரிவு செய்வதற்கு அங்கு இயக்குநராக இருந்த தமிழாசிரியர் வைச்ச நேர்முகத் தேர்வு மிகவும் எளிமையானது. தனது புத்தகப்பையை எடுத்து வரச்சொல்வதற்கு

"தம்பி உறியிலை என்ரை பறி கிடக்குது. எடுத்துக்கொண்டு வா'' என்றார். தனது குறியீட்டு மொழியைப் புரிந்து கொள்ளும் திறமை இவரிடம் இருக்கிறதா என்று பரிசோதிப்பதே நேர்முகத் தேர்வின் நோக்கம். "உறியிலை கிடக்கிற பறீக்குள்ளை என்ன கறியே கிடக்குது?''

எதுகைமோனைகளுடன் தன்னையும் தாண்டி மேலே ஒருபடி போய்விட்ட பனையோலை ராமனை அவருக்குப் பிடித்துக்கொண்டுவிட்டது. வேலைக்குச் சம்பளம் கிடைப்பதுடன் காதலியையும் பார்க்க முடிவதால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்திய புளுகம் அவருக்கு.

என்றாலும் அவரது வாய்த்துடுக்குக் காரணமாக ஒரு மாதத்திற்குள்ளேயே வேலையால் துரத்தப்பட வேண்டி ஏற்பட்டு விட்டது.

ஒரு நாள் அவரது காதலியின் வகுப்புக்கள் முடிந்து மாணவர் எல்லோரும் போனபின்பும் அவள் வகுப்பிலே தனித்து இருந்தாள். அடுத்த வகுப்பில் கற்கும் தனது அயல்வீட்டுப் பிள்ளையை அழைத்துச் செல்வதே அவளது நோக்கம்.

அவளைக் கண்ட பனையோலை ராமனுக்கு அவள் தனக்காகத் தான் காத்திருக்கிறாள் என்ற நப்பாசை. உடல் எங்கும் புல்லரிக்கத் தொடங்கியது. அவள் அருகில் சென்று

"ஏன் வீட்டை போகாம தனிய இருக்கிறீர்?'' என்று கேட்டார்.

அவர் முகத்தைப் பார்த்துக் கதைப்பதே பிடிக்காத வெறுப்புடன் மற்றப்பக்கம் பார்த்துக் கொண்டே "பிள்ளை வரோணும்'' என்றாள் சுருக்கமாக. "நடுவகுப்புக்கை இருந்து கொண்டு பிள்ளை வரோணும் எண்டால் என்னெண்டு வரும்? அங்காலை ஆக்கள் இல்லாத இடமாய்ப் போய் ட்றை பண்ணிப் பாரும்''. அவர் இந்த முயற்சியுடன் தன்னைச் சம்பந்தப் படுத்திப் பேசவில்லை, என்றாலும் இது பெரிய கதையாகி அவர் வேலைக்கே உலை வைத்துவிட்டது.

அதுக்குப் பிறகும் பனையோலை ராமன் சேர் விடேல்லையாம். அந்தப் பிள்ளை அவர் வீட்டடியால் அடிக்கடி போய் வருமாம். தன்னை அவள் நிமிர்ந்தோ, திரும்பியோ, கடைக்கண்ணாலோ பாக்காவிட்டாலும் தன்னைக் காணாவிட்டால் அவள் கவலைப்படுவாள் (?) என்பது தனக்கு நிச்சயமாகத் தெரியும் எண்டும் சொன்னார். (அந்தப் பிள்ளையின் பெயரை அவர் எனக்குச் சொல்லியிருந்தாலும் இப்போது ஆச்சியாக இருக்கிற அந்தப் பிள்ளையின் பேரப்பிள்ளைகள் நக்கல்விடும் எண்டதாலை அதைச் சொல்லவில்லை.)

ஒரு நாள் அவள் இவர் வீட்டடியாலை தன்ரை 'பிறெண்ட்ஸ்'மாரோடை கதைச்சுக்கொண்டு போனாள். தன்னை எப்பவும் ஒரு ராணியாகக் கற்பனை செய்யும் அவள்,

"நானடி ஞாயிற்றுக்கிழமையிலைதான் உடுப்புத் தோய்க்கிறனான். அண்டைக்கு எல்லா உடுப்பையும் ஒண்டாப் போட்டுத் தோய்ப்பன்'' எண்டு வலுவிலாசமாகக் கதைவிட்டாள். அதைக் கேட்ட பனையோலை ராமனால் தன்ரை வாயை அடக்க முடியேல்லை. தன்னை மறந்தார். தன் நாமம் கெட்டார். "எல்லா உடுப்பையும் ஒண்டாப் போட்டுத் தோய்ச்சா, வீட்டுக்கு என்னத்தோடை நிப்பியள்?'' கேட்டு விட்டு ஒரே வறுகா வறுகி விட்டார்.

அவளோ அதை அப்படியே விட்டுவிடத் தயாரில்லை. இவரது வீட்டுக்கே 'கோள்மூட்ட(?)' வந்து விட்டாள், வந்து தாயுடன் கதைச்சுக் கொண்டிருந்தாள்.

வீட்டுக்கு வந்தவளை உபசரிக்க நினைத்த, தாய் முந்தானை முடிச்சிலிருந்து மூண்டு ரூபாவை எடுத்துக் கொடுத்து பிஸ்கற் வாங்கிவர இவரை அனுப்பினாள். தனது குடும்பத்தின் வறுமை நிலையை உணர்ந்த இவர் விலை குறைந்த 'மலிபன்' பிஸ்கற்றையே வாங்கினார். அதை றேயில் வைத்துக் கொண்டு வந்து (றே எங்கை கிடக்குது? தங்கச்சியின்ரை சாப்பாட்டுக் கோப்பைதான்) அவள்முன் பயபக்தியோடை வைச்சார். அப்போது தனது பணத்திமிரை வெளிப்படுத்திய அவள்

"நாங்க எங்கடை வீட்டை நாய்க்குத்தான் மலிபன் பிஸ்கற் போடுறனாங்கள்'' எண்டு நக்கலாய்ச் சொன்னாள்.

தனது ஏழ்மை அவமானப்படுத்தப்பட்ட கொதிப்போடு கண்கள் சிவக்கப் பனையோலை ராமன் சொன்னது, "இப்ப, நாங்களும் நாய்க்குத்தான் மலிபன் பிஸ்கற் வச்சிருக்கிறம்''

தொடரும்....

(அடுத்த தமிழருவியில் சஞ்சலம்' தீர்த்த காதை)



# மாதம் ஓர் இளம் எழுத்தாளர் அறிமுகம்

வளர்ந்துவரும் எழுத்தாளர்களை மாணவப் பருவத்திலேயே இனங்கண்டு ஊக்குவிக்கத் தமிழருவி விரும்புகின்றது. இவ்வகையில் சிறுகதை அல்லது கவிதை எழுதும் மாணவர்களுள் திறமையான ஒருவரது முழுப்பெயர், பிறந்த திகதி, இடம், பெற்ற விருதுகள், எழுதிய ஆக்கங்களின் எண்ணிக்கை என்பவற்றுடன் புகைப்படம் ஒன்றையும், அவரது ஆக்கங்களுட் சிறந்ததெனக் கருதும் ஆக்கத்தையும் அனுப்பிவைத்தால் பிரசுரிப்பதற்குத் தமிழருவி தயாராக உள்ளது. ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**த.கணேசமூர்த்தி, தமிழருவி,**
**நிர்வாக இயக்குநர், உதவி ஆசிரியர்,**
**சிவகுல வீதி,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

## எழுத்தாளர் - 6

**செல்வி. லக்ஷனா ஸ்ரீரங்கநாதன்**



யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலய நவோதயாப் பாடசாலையில் க.பொ.த சாதாரணதரப்பிரிவில் கல்வி கற்பவர் செல்வி. லக்ஷனா ஸ்ரீரங்கநாதன் . இவர் 1995ம் ஆண்டு பங்குனி மாதம் 06ம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்திலே உரும்பிராய் எனும் ஊரில் பிறந்தார். தற்போதும் அவரின் சொந்த இடமான உரும்பிராயில் வசித்து வருகின்றார். இவர் தமிழ், ஆங்கில மொழிகளில் இடம்பெற்ற போட்டிகளில் பங்குபற்றிப் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

2010ஆம் ஆண்டில் ஆங்கில தினப்போட்டியில் Recitation கோட்ட மட்டத்தில் 1ஆம் இடத்தினைப் பெற்றுள்ளார். ஆங்கில தினப் போட்டியில் Solo acting கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம், மாகாணமட்டம் என்பவற்றில் 1ஆம் இடத்தினைப் பெற்றுள்ளார். தமிழ்த் தினப்போட்டியில் பேச்சுப்போட்டியில் பங்குபற்றி கோட்ட மட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம் என்பற்றில் 1ஆம் இடத்தினை பெற்றுள்ளார். வடமாகாண மட்டத்தில் நடாத்தப்படும் வருடாவருட Power point மென்பொருள் தயாரிப்பில் 2ஆம் இடத்தினைப் பெற்றுள்ளார். 2011ம் ஆண்டில் ஆங்கில தினப்போட்டியில் Recitation கோட்ட மட்டத்தில் 1ஆம் இடமும், வலயமட்டத்தில் 3ஆம் இடமும் பெற்றுள்ளார். ஆங்கில தினப் போட்டியில் Solo actiong கோட்டமட்டத்தில் 1ஆம் இடத்தினைப் பெற்றுள்ளார். யாழ் வானொலி அலைவரிசையில் பல நிகழ்ச்சிகளை செய்துள்ளார். அந்த வகையில் கவியரங்கம், ஆங்கில மொழியில் பேச்சு என்பன எடுத்துக்காட்டுகளாகும். " தமிழருவி " கட்டுரைப் போட்டியிலும் 2ஆம் இடத்தினைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு யாழ் மாவட்ட பொலிஸ் நிலையத்தினால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் 1ஆம் இடத்தினைப் பெற்றுள்ளார். இவர் சதுரங்க அணி, முதலுதவிப்படை அணி என்பவற்றில் அங்கத்தவராகத் திகழ்கின்றார். இவரது கவிதை ஒன்று இங்கே தரப்படுகிறது.

## அன்பென்ற ஆலயத்தில் அன்னையே தெய்வம்

எங்கேயோ தொலைந்த
என்னை
என் பாதையில் வழிப்படுத்தினாய்.
அம்மா ...... என்று
உன்னை அழைத்தற்காய் மட்டும்
எனக்கு உன் உயிரையே
உயிராய்க் கொடுத்தாய்.
உனக்கு நான் தாய் என்ற
பெருமைதனை தந்ததற்காய்
உன் இரத்தத்தையே பாலாய்
ஊட்டினாய்.........
அம்மா... உன் அருகினிலே
நிழலாக மட்டும்
வரம் கொடு!
இல்லையெனில்
நீயே எனக்கு மகளாகப்
பிறந்து விடு !
என் கருவறையாவது
பெருமையடையட்டும்....



இவ்வாறு நீயிருந்தால்
என் கரங்கள் - உனைக்
கருவறையிலிந்து கல்லறைவரை
கவிபாடி விடும் !
உன் தோள் சாய்கையில்
தீரும் என் கவலைகள்
ஏங்குகிறேன் அம்மா !
ஒரு நிமிடம் உன் தோள் சாய !
எத்தனை உறவுகள் இருந்தாலும்
உனக்கு ஈடாகுமா என் தாயே !
எத்தனை ஜென்மம் நீண்டாலும்
கரையாதம்மா என் பாசம்!

எத்தனை ஜென்மங்கள்
எடுத்தாலும் - அத்தனை
ஜென்மங்களும் உன்னோடு கூடி
வாழ்ந்திட இறைவனை வேண்டுகின்றேன்.

காவலுக்காகக் கோட்டைகளை அமைத்தார்கள்
காதலுக்காகத் தாஜ்மகாலை அமைத்தார்கள்
கவிதைக்காகக் கவியரங்கம் அமைத்தார்கள்
இறந்தவர்களுக்காகக் கல்லறைகளை அமைத்தார்கள்
ஆனால் அம்மா.... நான் உனக்காக – என் மனதினிலே
கற்பனைக் கடலிலே மாளிகை அமைத்துள்ளேன்
வருவாயாக! என்னோடு கூடிக்களிப்பதற்காக! – எனவே
அன்பென்ற ஆலயத்தில் அன்னையே தெய்வம் என
இந்நேரத்தில் கூறி அமைகின்றேன்!



## எம் ஆசான்கள்

கல்வியெனும் ஆழ்கடல் தன்னில்
அறிவு எனும் முத்தைப் பெற
நல்வழி காட்டிய
இனிய ஆசான்களே!
உங்களை நாம் வணங்கி நின்று
வாழ்த்துகின்றோம்!
கல்விக் கடலில்
பயணித்த மாணாக்கருக்கு
கலங்கரை விளக்காய்
நின்று கரை சேர்த்தீர்
பேதையாய் இருந்த எம்மை
மேதையாய் உயர வைத்தீர்
அறியாமையில் இருந்த நம்மை
அறிவால் நிறைய வைத்தீர்
செடியாய் இருந்த எமக்கு
கல்வி நீர் ஊற்றி
தல விருட்சமாக்கி
சாதனை புரிய வைத்தீர்
கொழு கொம்பின்றித் தவித்த எமக்குப் பாரியாய்
வந்து அறிவுரை எனும் தேர் தந்து படர வைத்தீர்
குருடனாய் இருந்த எமக்கு அறிவு எனும்
சத்திர சிகிச்சை மூலம் உலகைக் காணச் செய்தீர்
எட்டாக் கனியாய் இருந்த கல்வியை ஏணி எனும்
படி தந்து பறிக்கச் செய்தீர்
கல்வி என்னும் கனியினை இனிமையாக
வழங்கிடுவீர்
அறிவுரைகள் பலவும் கூறியே அனைவரும்
போற்ற வைத்திடுவீர்
எறும்பாய் இருந்த எம்மை சிகரம் தொட
வைத்து சாதனைகள் பல படைக்கச் செய்தீர்
எம்மைச் சிறந்த கல்விமான்களாக்கி
உலகில் தலை நிமிர்ந்து வாழச் செய்த
ஆசான்களே என்றும்
வளமுடன் வாழி ! வாழி !



**K. நிசாந்தினி**
யா/ யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்.

## பூ

என் அழகிய மலரே
என் கண்போல் உன் இதழ்
உன்னை தின்மும் ஆண்டவருக்குச் சாத்தி
என் கையால் பிடுங்கி ஆசானுக்குக்
கொடுப்பேன்
அதை வாங்கி வைத்திடுவார்
அது என்னைப் போல் தினம் தினம்
கண் மூடித் திறக்கும்.
இது உன் வாழ்க்கை.
ஆண்டவனின் சிறிய இயற்கைப்
படைப்புத்தான் மலர் - என்
கண் சிவப்பது போல உனது
இதழ் சிவக்கும்.
என்னைப் போல் தினம் தினம்
சிரிக்கும் மலரே.
உன் சுவாசமே எனக்கு நறுமணம்
உன் வியர்வையே எனக்குத் தேன்.

ச. நிஷாளினி, 07A
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

## சிந்தனைச் சுடர்

- எதிலும் நம்பிக்கை இல்லாதவர்கள் எப்போதும் காண்பதில்லை – நட்சத்திரங்களின் இரகசியத்தை. அவர்கள் சென்றறியாத இடங்களுக்குச் செல்வதுமில்லை. மனித ஆர்வத்தின் புதிய வாசல்களைத் திறப்பதுமில்லை.
- பொறுமையின் நீண்டகாலச் செயல்முறையில் உருவாகிறது ஆன்மாவின் அமைதி. அது - வலியற்றதும், ஏற்கத்தக்கதுமான ஒரு பரிமாணத்தை வழங்குகிறது இந்த வாழ்க்கைக்கு.

# ஒழித்திடுவோம் போதை உலகை....



பாம்பினம் போல் போதை
பலரையும் கொல்லுது - இன்று
ஆனாலும் பாம்பது ஒழிந்து போக
பயமது மறைந்து போச்சு - இன்று
பாம்பிலும் கொடியதாய் உலகில்
பல்வகை போதைகள் - இன்று
பாம்பு போல் அவை பலரையும் தீண்டி
பறிக்குது பற்பல உயிரை - இன்று
காலையில் ஒரு வகை ஹெரோயின்
நடுப்பகல் பிரண்டி வகை ஒன்றாம்
மாலையிலே விஸ்கியின் எதையில் அற்ககோல்
நாட்டு மக்களை கொல்லுதென்று
சாலவும் ஆராய்ச்சி செய்து
சாதனை செய்கிறது அரசு
பலவகை போதைப் பொருள் பற்றி
பற்பல திட்டங்களையும் தீட்டுகின்றது.

இந்தக் கொடிய அபின், கஞ்சா
மூளை, நரம்பு, நுரையீரலைப் பொசுக்கிட
குப்பை கூளங்களால் தயாரித்த கசிப்பு
கண், ஈரல் அழற்சியைக் கொடுத்திட
செப்பமாக வாங்கிய விஸ்கி, பிரண்டி
நரம்புத் தளர்ச்சியுடன் மனநிலை தளம்பி
சடுதியாய்த் தப்பாது தொற்றிட
இளைஞர் உயிரைக் குடிக்கிது போதை...

ஒப்பரிய இப்பாரினில் போதை வகைகள்
ஓராயிரமாய் பெருகியே
செப்பிட முடியாக் கொடுமை தன்னை
செய்யும் இந்நாட்டிலே
தப்பாது இத் தம்மடித்தலை
தடுத்து நிறுத்தத் தவறினால்
ஒப்பாரி ஒலி மட்டுமே!
ஓங்கி ஒலிக்கும் இந்நாட்டிலே.

போதையைப் பகைத்தால் வாழ்க்கை
சுவைத்தலைத் தரும் இளைஞா....
நெஞ்சு வரை நீ இழுக்கும் போதை தனில்
நஞ்சு இருக்கு நன்றாய் புரிந்துகொள்
ஆவியாய் வெளியேறும் புகை உன்
ஆவியையும் வெளியேற்றி விடும்
மைந்தனே நீ ஊதும் போதை கடுகதியாய்
யமலோகம் அனுப்பி வைக்கும் உனை!

போதைப் பொருள் தடுப்புத்தினமென
சுபீட்சத்திற்காய் அறிவித்தும்
கண்டுமிந்த உயிர் இழப்பை சமூகம்
காணாதிருப்பது நீதியோ?
அரசுமிக்க கடமையுணர்வுடன் புரிந்திட்டாலும்
அப்பாரிய பொறுப்பையெல்லாம்
இளம் தலைமுறை செவிசாய்த்தால்
இளஞ் சந்ததி இனிதே மகிழ்ந்திருப்பர்.

இன்றைய பாடசாலை சமூகமும், சந்ததியும்
இப் போதைப் பிடியிலிருந்து நீங்கிட
ஆசிரியரும், பெற்றோரும், உற்றோரும்
ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தி
தவறுகின்ற மாணவர்களை வழிபாடுகளில்
இணைத்திட செய்வதனால்
ஒளிமயமான எதிர்கால வாழ்வை
ஒளியேற்றும் மாணவ சமுதாயம்.

போதைக்கு முற்றுப்புள்ளி வைத்து
போதைப்பொருள் விழிப்புணர்வை
இளைஞர் சமுதாயத்திற்கு ஊட்டிடுவோம்
போதைப்பொருள் விற்பனையை
முற்றாகத் தடைசெய்து நாட்டைக்
கட்டியெழுப்புவோம் அழிவுகளிலிருந்து
போதை இல்லாத உலகை
சிருஷ்டிப்போம்! சிருஷ்டிப்போம்!

ச. சேந்தன் தரம் 11,
யா/இந்துக் கல்லூரி.

## அனைவருக்கும் கல்வி

மனிதன் தான் கண்டு பிடித்த அறிவியல்களை
பரம்பரைக்காய் பதுக்கிவைத்தவையே கலைகள்
பரவலாக்கி அறிவியலைப் பலரும் அறியும்
வண்ணம் பகிரங்கப்படுத்துவதே கல்வி

வேந்தனே கல்விக்குத் தலைமை ஏற்றமையே
துணைவேந்தர் முறைமை அரசனே நீதிக்கு
தலைமை ஏற்றமையே நீதியரசர் முறைமை
நிர்வாகத்தையும் அவனே செய்தது வரலாறு

கல்வியால் கற்றுணர்ந்து அறிவியலை – அதை
அளவுகோலாய்க் கொண்டு தகைமைகளைப்
பெறுபவருமுண்டு, கற்றுணர்ந்த
தம்மறிவின் ஆற்றல்களால்
தாமே அறிவியலைக் கல்வியாக
சபையில் சமர்ப்பிப்பவருமுண்டு

கல்வி கற்பிக்கும் முறைமைக்கும் கல்வியுண்டு
கல்வியால் உயர்ந்தவருக்கு பதவியுமுண்டு
கல்வியில் தொழிநுட்ப அறிவுமுண்டு
கல்வியால் பொருளாதாரப் பயனுமுண்டு

கல்வியின் சிறப்புக்களைச் சொன்ன அறிஞர்கள்
பலருண்டு, கல்வியின்
பயன்களோ பலவென்றறிவோம்
அனைவருக்கும் கல்வியென்பதே அரசின் கொள்கை
அறியாமை இருளை அகற்ற அறிவைப் பெறுவோம்.

திருமதி. ஜெய. கேமலதா
கீரிமலை வீதி,
சங்கானை.

# இலக்கிய இன்பம்

உறையூர் என்ற நகரம் முற்காலத்தில் சோழ மன்னர்களின் இராஜதானியாக இருந்தது. காவிரிக் கரையிலே அந்நகர் பொன்னகர் போல் பொலிவுற்றுத் திகழ்ந்தது. இம்மகிமை தங்கிய இந்நகரைச் சோழ மன்னர்கள் பரம்பரையாக ஆட்சி புரிந்து வந்தனர்.

இத்தகைய சோழர் குலத்தில் கி.பி 1133-1150 வரை அரசு புரிந்து வந்த அநபாயச் சோழன் மிகப்பெரும் கீர்த்தியுடையவன். இவன் மிகுந்த சிவபக்தியுடையவன். இவனை 2ஆம் குலோத்துங்கன் எனவும் அழைப்பர். பகைவர்களால் வரும் அபாயங்களை அழித்தபடியால் அநபாயன் என்ற பெயர் இவனுக்கு உண்டாயிற்று. இவனிடம் மந்திரியாக இருந்த சேக்கிழார் பெருமான் இம் மன்னனின் தூண்டுதலால் தான் பெரிய புராணம் பாடினார் என்பது சிறப்பிற்குரியது.

இத்தகைய சிறப்பிற்குரிய அநபாயனின் அவைக் களப் புலவராக ஒட்டக் கூத்தர் விளங்கினார். 'கவிச் சக்கரவர்த்தி' 'கவிதாச கவிராயர்' என்ற சிறப்புப் பட்டங்களும் இவருக்கு இருந்தன. இவர் அநாபாயனுடைய தந்தை விக்கிரம சோழனிடம் ஆஸ்தான புலவராக இருந்தார். அப்போது அநபாய மன்னன் இவரிடம் கல்வி பயின்றார். அநபாயனின் மகன் 2ஆம் இராஜராஜனும் ஒட்டகக்கூத்தரிடம் கல்வி பயின்றான்.

அக்காலத்திலே உள்நாட்டுக் கலகங்கள் இல்லை. அதனால் தமிழகத்தில் அமைதி நிலவியது. அன்பு நெறி தழைத்தது. இன்பம் செழித்தது.

இந்நிலையில் அநபாயனின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை மக்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். காலை தொடங்கி மாலை வரை அன்னதானம் சொர்ணதானம் முதலிய பல தானங்கள் வழங்கப்பட்டன.

இடிபோல் பல்லியங்கள் முழங்கின. எங்கும் இன்பமயம், திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

இரவு 9.00 மணி மன்னர் பரிவாரங்கள் சூழத் திருவுலா சென்றார். இராஜவீதியில் ஆண்கள் ஒருபுறம் பெண்கள் இன்னொரு புறம் என ஒழுங்காகச் சென்றனர். அவ்வுலாவின் பெருமைகளை வர்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

இசை நுணுக்கங்கள் தெரிந்த பல இசை விற்பன்னர்கள் ஒருபுறம், குழலிசை, மத்தள இசைக் கலைஞர்கள் மறுபுறம் என இசை என்ற இன்பவெள்ளம் கரைபுரண்டு ஓடியது. எள் விழுந்தால் கூட கீழே விழாத வகையில் மக்கள் கூட்டம் கூடியிருந்தது. இந்த மக்கள் வெள்ளத்தில் அமைதி வெள்ளம் நிறைந் திருந்தது தான் பெரு அதிசயம்.

**எஸ்.நதிபரன் B.A. (Hons)**



இவ்வாறான உபசாரங் களுக்கு மத்தியில் மன்னர் தெரு வீதியுலா வந்து கொண்டிருக்கும் போது நேரம் நடுநிசியை நெருங்கியது. நட்சத்திர மண்டலம் போல் விளக்குகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. அமைச்சர்கள் முதலிய பரிவாரங்கள் மன்னரைச் சூழ்ந்திருந்தனர்.

சூரியன் அருகில் சந்திரன் இருப்பது போல் ஒட்டக்கூத்தரும் அருகில் இருந்தார். இருபுறமும் வெண் சாமரை வீசினார்கள். வெண்கொற்றக் குறும்புக்காரப் பெண்ணொருத்தி கூர்மையான அறிவு படைத்தவள். அருகில் நின்ற மற்றொரு பெண்ணைப் பார்த்து. "என்னடி இப்போது என்ன வெயிலா? மழையா? இல்லையே. இந்த நேரத்தில் குடை அவசியமோ? அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான் என்பது பழமொழி". அப்பெண் மற்றொரு பெண்ணிடம் கிண்டலாகச் சொன்னாள்.

மன்னருடைய செவிகளிலும் இவ்வார்த்தைகள் விழவே அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். அவமானப் பட்டவராக அர்த்த ராத்திரியில் குடை ஏன்? என்று அப்பெண் குறும்பாகக் கேட்ட கேள்விக்கு விடை கூற வேண்டும் என மன்னர் ஒட்டக்கூத்தரிடம் வேண்டினார்.

ஒட்டக்கூத்தர் குறிப்பறிந்து பாடுவதில் மதிநுட்பம் வாய்ந்தவர். பெண்கூறிய வார்த்தைகளைக் கேட்டு மன்னர் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை உணர்ந்து ஒருபாடல் பாடினார். அதாவது மன்னர் பெருமானே, வணக்கம். பெண்களின் கற்பொழுக்கத்தால் உலகிற்கு எல்லா நலன்களும் உண்டாகின்றன. அத்தகைய பெண்களின் கற்பொழுக்கத்தைக் காத்தருள்வது காவலனின் கடமை. விண்ணிலே இருப்பவள் அருந்ததி. அவள் கற்புக்கரசி. அரசனான நீ பவனி வரும்போது விண்ணிலிருந்து உன்னைக் கண்டால் இத்துணை அழகனும் உளனோ? என்று உன் அழகில் மயங்கினால் அவள் கற்பு மாசுபடும்.

அவ் வண்ணம் இரவு வேளையில் வானத்தில் உலவும் இயல்புடைய வளாகிய அருந்ததியின் பார்வை உன்மேல் விழக்கூடாது. இதனால் அவளது கற்பைப் பாதுகாக்கும் பொருட்டுத் தான் உனக்கு குடை பிடிக்கப் படுகிறது.

இது வெறும் ஆடம்பரத்திற்காகப் பிடிக்கப்பட வில்லை என மிக அழகாகக் கவிநயத்துடன் நகைச் சுவையாகக் கூறினார். அவர் கூறிய கருத்துக்கள் பொதிந்த பாடல் இதோ,

"அண்டமீதுலவும் அருந்திறல்
கற்புக்கரசியாம் அருந்ததி நின்னைக்
கண்டதால் ஊறுபடலொனா
தென்று கருதி நீ பவனியில் கவிகை
கொண்டதும் முறையே
குலோத்துங்க எனும் கொற்றவ
நற்றவ மணியே!
மண்டனைப் புரப்போர் மாதரார்
கற்பை வளர்த்திடல் மாண்புடைத் தன்றோ?"





இப் பாடலைக் கேட்டு மன்னர் மட்டுமன்றி அர்த்த ராத்திரியில் குடை எதற்கு எனக் கேட்ட பெண்ணும் கூட தலைகுனிந்து அரசனிடம் மன்னிப்புக் கேட்பது போல தலைவணங்கி நின்றாள்.

இனிமையான - பொருள் ஆழம் மிக்க - தெளிவான கருத்துக்களையுடைய புலவரது பாடலினால் தனது மானம் காப்பாற்றப்பட்டது குறித்து மன்னனின் உள்ளமும் உணர்வும் குளிர்ந்து ஆனந்தப்பட்டான்.

# செங்கை ஆழியானுடன் ஒரு சந்திப்பு

# இளம் எழுத்தாளர்களுக்கு வாசிப்புப் பழக்கம் அவசியமாகும்





செங்கை ஆழியான், இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் ஓர் அத்தியாயமாகக் கொள்ளத் தக்கவர். யாழ். வண்ணார்பண்ணையில் உள்ள கலட்டியில் 1941 ஜனவரி 25ல் பிறந்தவர். தந்தை கந்தையா வணிக முயற்சிகளில் ஈடுபட்ட ஒருவர். தாய் அன்னம்மா. குடும்பத்தில் இவர் எட்டாவது பிள்ளை. வீட்டின் கடைக்குட்டியும் இவர்தான். பாடசாலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் புவியியல் துறைசார்ந்த முதற்பட்டக் கல்வியைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றார். 1984இல் முதுகலைமாணிப் பட்டத்தையும் 1991இல் கலாநிதிப் பட்டத்தையும் யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக் கொண்டார்.

இலக்கிய உலகு, கல்வி உலகு, நிர்வாக உலகு என இவரது ஆளுமை விரிவாக்கத்தை வகுத்து ஆராய முடியும். 50 நாவல்கள், 185 சிறுகதைகள், நூற்றுக்கும் மேற்பட்ட பாடநூல்கள் எனப் படைத்த இவர் இன்றும் எழுதிக் கொண்டிருக்கிறார். நாளொன்றில் குறைந்தது ஒரு மணி நேரமாவது எழுதாவிடின் தனக்கு நித்திரையே வராது என்கிறார் இந்த 71 வயது இளைஞர். உடல் தளர்ந்தாலும் உள்ளத்தாலும் உணர்வுகளாலும் அவர் என்றும் இளைஞர் தான்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தமிழ் சிறப்பு நெறிக் கற்கையை மேற்கொள்ளும் ஆசிரிய மாணவர்கள் கலாநிதி செ. திருநாவுக்கரசுவின் ஆலோசனைகளையும் விரிவுரையாளர் ச. லலீசனது வழிகாட்டல்களையும் பின்பற்றிச் செங்கை ஆழியானைத் தங்களது விரிவுரை மண்டபத்தில் சந்தித்து மனம்விட்டுப் பேசினர். செங்கை ஆழியானைப் பற்றி அறியும் வேட்கையுடனும் செவ்வி காணல் என்ற பாட உள்ளடக்கத்தின் செயன்முறையாகவும் தமிழாசிரியர்கள் 26 பேர் (தென்பகுதியைச் சேர்ந்தவர்கள்). அவருடன் பேசிய விடயங்களைத் தமிழருவி வாசகர்களுக்காகத் தொகுத்துத் தருகின்றோம்.

**கேள்வி:** உங்களது இலக்கியப் பிரவேசம் எப்போது ஆரம்பமாகியது எனக் கூறுங்கள்?

பதில் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாணவனாகக் கல்வி கற்றுக்கொண்டிருந்த போது எனது இலக்கியப் பிரவேசம் இடம்பெற்றது. 1957ஆம் ஆண்டில் கல்கண்டு என்ற தமிழக இதழுக்காக ஒரு பக்கக் கதை ஒன்றை எழுதி அனுப்பினேன். சித்தியின் கொடுமை பற்றிய சிறிய கதை அது. பெயர் ஞாபகமில்லை. கல்கண்டில் பிரசுரமான மைக்குச் சன்மானமாக அதன் ஆசிரியர் தமிழ்வாணன் ஒரு ரூபா காசை யாழ்ப்பாணம் தம்பித்துரை ஏஜன்ட் மூலம் எனக்கு வழங்கினார். அன்று எனக்கு அச்சம்பவம் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. அன்று தொடக்கம் இன்றும் எழுதிக் கொண்டிருக்கிறேன். இதுவரை 185 சிறுகதைகள், 50 நாவல்கள் வரை எழுதியிருக்கிறேன். சிறுகதைகள் 5 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவற்றுள் இரண்டு (இரவு நேரப் பயணிகள், நகராத நத்தைகளும் ஆமை ஓடுகளும்) சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றுள்ளன.

**கேள்வி:** நீங்கள் இலக்கியத்துறைக்குள் பிரவேசிப்பதற்குத் தூண்டுகோலாக இருந்த விடயம் என்னவென்று கூறமுடியுமா?

பதில் : யாழ். இந்துக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் ஆசிரியர்கள் தூண்டுதலாக இருந்தனர். ஏரம்பமூர்த்தி மாஸ்டர், தேவன் யாழ்ப்பாணம், மு. கார்த்திகேசன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் பேராசிரியர்களான சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, ஆ. சதாசிவம் போன்றவர்களுடைய சிந்தனைகள் என்னுள் பாதிப்புக்களை ஏற்படுத்தின. மூவரும் வெவ்வேறு தளங்களில் பயணித்தவர்கள். இதைவிட எனது பாடசாலைப் பருவத்தில் கண்ணன் என்ற சிறுவர் சஞ்சிகை நடத்திய நாவலிலக்கியப் போட்டிக்காக "ஆறுகால்மடம்" என்றொரு நாவலை எழுதி அனுப்பினேன். அதற்குப் பரிசு எதுவும் கிடைக்கவில்லை. பாராட்டுக் கடிதம் ஒன்று அனுப்பினார்கள். அப்போட்டிக்காக ஆக்கங்கள் அனுப்பிய யாவருக்கும் பாராட்டுக் கடிதம் அனுப்பப்பட்டதாகப் பின்னர் அறிந்து கொண்டேன். (சிரிக்கிறார்)

**கேள்வி:** உங்களுடைய ஆரம்பகால நாவல் "நந்திக்கடல்." நந்திக்கடல் உங்களை எவ்வாறு பாதித்தது?

பதில் : என்னுடைய ஆரம்பகால நாவல்கள் இரண்டு. ஒன்று ஆச்சி பயணம் போகிறாள். மற்றையது

நந்திக் கடல். 1963இல் இவற்றை நான் எழுதினேன். நான் முல்லைத்தீவில் வேலை பார்த்த காலத்தில் அங்குள்ள இயற்கை அழகு என்னைக் கவர்ந்தது. இதனால் நான் நந்திக் கடலைக் களமாகக் கொண்டு நாவல் எழுதினேன்.

**கேள்வி: குணராசா என்ற நீங்கள் "செங்கை ஆழியான்" என்ற புனைபெயரை எதற்காகத் தேர்ந்தெடுத்தீர்கள்?**

பதில் : நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாகப் படிக்கிற காலத்தில் சொந்தப் பெயரைப் பயன்படுத்தி ஆக்கங்களை எழுதுவதில் இடர்ப்பாடுகள் இருந்தன. படிக்கும்போது இடதுசாரிச் சிந்தனைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டதால் செங்கை ஆழியான் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டேன்.

**கேள்வி: செங்கை ஆழியான் தவிர வேறு புனை பெயர்களைக் கையாண்டிருக்கிறீர்களா?**

பதில் : ஆம். கையாண்டுள்ளேன். மணாளன், சர்வசித்தன், சற்குணம் முதலிய பெயர்களைக் கூறலாம். சற்குணம் என்பது எனது வீட்டுப் பெயர்.

**கேள்வி: இலக்கியங்களைப் படைத்துப் பிரசுரிப்பதற்குப் பொருளாதார பலமும் குடும்ப ஒத்துழைப்பும் தேவை. உங்களுக்கு இவை எவ்வாறு சாத்தியப்படுகின்றன?**

பதில் : நான் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆரம்ப காலங்களில் எனது அக்காவும், அண்ணாவும் உதவி செய்தனர். மனைவியின் பங்களிப்பு மிகப் பெரியது என நினைக்கிறேன். என்னைத் திருமணம் செய்த நாளில் இருந்து எனது எழுத்துப் பணிகளுக்கு அவர் முழு ஆதரவையும் தருகிறார். நான் எழுத உட்கார்ந்துவிட்டால் ஒரு வேலைகூடச் சொல்லமாட்டார். எனக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் மூவருக்கும் திருமணம் செய்து வைத்தவரும் அவரே. ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் இருக்கிறார் என்ற வகையில் எனது வெற்றிகளுக்குப் பின்னால் என் மனைவி கமலாம்பிகை குணராசாவே இருக்கிறார். தவிர, தற்போது எனது புத்தகங்கள் வெளிவந்தவுடன் ஏறத்தாழ 300 பிரதிகள் விற்பனையாகின்றன. இதனால் புத்தக வெளியீட்டால் பொருளாதார ரீதியில் நான் நட்டமடைவதில்லை.

**புவியியல்துறை சார்ந்து எத்தனையோ பட்டதாரிகள் வெளி வந்திருந்தும் அவர்கள் எழுத்துப்பணியில் ஆர்வங்காட்டாமை எனக்கு வேதனையளிக்கிறது.**

**கேள்வி: 50 நாவல்களைப் படைத்திருக்கிறீர்கள். இவற்றுள் உங்களைக் கவர்ந்த நாவல் எதுவெனக் கூறமுடியுமா?**

பதில் : நிச்சயமாக காட்டாறு நாவல் என்னைப் பெரிதும் கவர்ந்த நாவல் ஆகும். இது யதார்த்தப் பண்புடன் படைக்கப்பட்டது. யதார்த்தப் படைப்பு ஒன்று கண்டது - கேட்டது - உணர்ந்தது என்ற வகையில் சமூகப் பயன்பாட்டை வழங்குமாறு படைக்கப்பட வேண்டும். யதார்த்தமாகப் படைக்கப்படும் நாவல்களே என்னை மிகவும் கவருவன.

**கேள்வி: தங்களது அண்மைக்கால நாவல்கள் பற்றிக் கூறுங்கள்?**

பதில் : ருத்ர தாண்டவம் என்றொரு நாவலை எழுதினேன். இதில் விடுதலைப் புலிகளின்



சனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடமிருந்து சாகித்ய ரத்னா விருதைப் பெற்றுக்கொள்ளும் செங்கை ஆழியான்

தோல்வியை வரவேற்று எழுதினேன். முன்னர் பட்ட கஷ்டங்களைவிட தற்போது நிம்மதியாக இருக்கிறோம் என எழுதியுள்ளேன். இதனால் இந்த நாவல் பலத்த எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது. தற்போது மகாவீரன் சங்கிலி காவியம் எழுதிக் கொண்டிருக்கிறேன். இதை வீரகேசரி நிறுவனம் கேட்டமைக்கமைய எழுதுகிறேன். இதைவிட வெளிநாட்டுக்காரர்களை மையப்படுத்தி ஒரு நாவல் எழுதிக் கொண்டிருக்கிறேன். இதற்கு இன்னும் பெயர் வைக்கவில்லை.

**கேள்வி: நீங்கள் பல நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதிக் குவித்துள்ளீர்கள். இது இறைவனின் கொடை எனக் கருதுகிறீர்களா?**

பதில் : ஆம் அப்படியும் கொள்ளலாம். உண்மையில் நிறைய வாசிப்பவன் நான். மற்றவர் என்ன சொல்கிறார் எனப் புரிந்து கொள்வதற்கு வாசிப்புப் பழக்கம் பெரிதும் உதவுகிறது. அத்துடன் முயற்சியும் வேண்டும்.

**கேள்வி: தமிழ் இலக்கியத்துறை தவிர எந்தத் துறைகளில் எழுதியுள்ளீர்கள்?**

பதில் : புவியியல் துறையில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடநூல்களை ஆக்கியுள்ளேன். பட்டப் படிப்பு மாணவர்களுக்கா கவும் பல புவியியல் நூல்களை எழுதி யுள்ளேன். பொது அறிவு, நுண்ணறிவு நூல்களையும் எழுதியுள்ளேன். நான் பட்டம் பெற்ற காலத்தில் இருந்து இன்று வரை பாடநூல்களை யும் எழுதிக் கொண்டு தான் இருக்கிறேன். மற்றவர் களுக்குச்



சந்தர்ப்பம் வழங்க மாட்டீர்களா? என நீங்கள் கேட்கலாம். பல்கலைக் கழகம் சார்ந்தவர்கள் புள்ளிகள் (Points) கிடைக்கு மென்றால்தான் புத்தகங் களை எழுதுகிறார்கள். எனக்கு அந்தப் பிரச்சினை இல்லை. எனவே பாடநூல் களைத் தாராளமாக எழுதுகிறேன். ஒவ்வொரு முறையும் பாடத்திட்டம் மாற்றிய மைக்கப்படும்போது ஆசிரியர்கள் வேண்டிக் கொள்கிறார்கள். நான் எழுதுகிறேன். புவியியல்துறை சார்ந்து எத்தனையோ பட்டதாரிகள் வெளி வந்திருந்தும் அவர்கள் எழுத்துப்பணியில் ஆர்வங் காட்டாமை எனக்கு வேதனையளிக்கிறது.

**கேள்வி: நீங்கள் ஏன் மலையகப் பிரதேசத்தைக் களமாக வைத்துப் படைப்பாக்கம் செய்ய வில்லை?**

பதில் : ஒரு பிரதேசத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இலக்கியம் படைக்கக்கூடாது. மலையகம் சார்ந்த அனுபவம் எனக்கு ஏற்படவில்லை. பிரதேசம் சார்ந்த அனுபவம் எற்பட்டா லேயே அதனைக் களமாக வைத்து இலக்கியத்தைப் படைக்க முடியும் என்பது எனது நம்பிக்கை.

**கேள்வி: உங்கள் வாழ்வியலில் பல்வேறு தொழில்களை ஆற்றியுள்ளீர்கள். இவற்றுள் உங்களுக்குப் பிடித்த தொழில் எது?**

பதில் : ஆசிரியத்தொழிலே என்னைக் கவர்ந்த தொழில். பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் போது நாமும் கற்றுக் கொள்கிறோம். இதுவே மனநிறைவான தொழிலுமாகும்.

**கேள்வி: எழுத்துத்துறையில் நீங்கள் எதிர் கொண்ட சவால்கள் பற்றிக் கூறுங்கள்?**

பதில் : நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் எழுதக்கூடாது என எனது மேலதிகாரிகள் என்னைக் கண்டித்தனர். நான் கதைகளையும் கல்விசார் நூல்களையுமே எழுதுகிறேன் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்திய பின்பே எனக்குப் பிரச்சினை தராமல் விட்டார்கள். இது தவிர, வாடைக்காற்று வெளிவந்த போது அக்கதையில் பூனைக்கண் ஏற்படுவது தொடர்பாக நான் தெரிவித்த கருத்து ஒன்றுக்காக தமது ஊரைக் (நெடுந்தீவு) கேவலப்படுத்தி விட்டேன் எனப் பிரச்சினை எடுத்தார்கள்.

**கேள்வி: நீங்கள் எழுதிய எல்லாப் படைப்புக்களும் நூலுருவில் வெளிவந்துள்ளனவா?**

பதில் : இல்லை, சிறுகதைகள் பல என்னிடம் பிரசுரமாகாமல் இருக்கின்றன.

**கேள்வி: தங்களது ஆரம்ப கால இலக்கியப் படைப்புக்களையும் தற்போதைய படைப்புக்களையும் ஒப்பு நோக்கிப் பார்த்திருக்கிறீர்களா?**

பதில் : நிறையத் தடவைகள் ஒப்பிட்டுப் பார்த்தி ருக்கிறேன். ஆரம்ப காலங்களில் கண்டதை அப்படியே சொல்ல வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. தற்போது மூன்று வகையிலே கதைகளை எழுதுகின்றேன். கண்டதைக் கேட்டதை அவ்வாறே சொல்வது. கண்டதைக் கேட்டதைத் தான் உணர்ந்தவாறு சொல்வது. கண்டதைக் கேட்டதைச் சொல்வதோடு யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் பண்பாட்டுக் கோலங்களையும் அவற்றுடன் கலந்து வெளிப் படுத்திக் கொள்வது இந்த அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்துள்ளேன்.

**கேள்வி: இலங்கையின் தற்போதைய இளம் எழுத்தாளர்களைப் பற்றிய உங்களின் கருத்து?**

பதில் : தற்போதைய எழுத்தாளர் களுக்கு வாசிப்புப் பழக்கம் இல்லை. நல்ல எழுத்தாளர் களுடைய எழுத்துகளை வாசிக்க வேண்டும். புதுமைப் பித்தன், வல்லிக் கண்ணன், ஜெயகாந்தன் முதலியோரது எழுத்துக்களை வாசிக்க வேண்டும். இலங்கையைப் பொறுத்த வரையில் இலங்கையர்கோன், வைத்திலிங்கம் போன்றோரது எழுத்துக்களை வாசிக்க வேண்டும். நான் இவற்றை யெல்லாம் வாசித்துள்ளேன். அவர்களது எழுத்தாற்றல் உத்திகளைப் புரிந்து கொண்டு எனது படைப்பாக்கத்தை மேற்கொள்கிறேன். ஆனால் இன்றைய இளம் எழுத்தாளர்கள் அவ்வாறு செய்வதில்லை. அவர்களது சிறுகதைகளைப் படிக்கும்போது எனக்குள் ஓர் 'அதிர்வு' ஏற்படுகின்றது.

**மக்களின் ஏற்புக்கு உள்ளாகும் படைப்புக்களில் கலைத்துவச் சிக்கல்கள் இருப்பதாக சில விமர்சகர்கள் குறைப்படுவதுண்டு. மார்க்சிய வாதிகளே இவ்வாறு அபிப்பிராயப் படுகின்றனர். இவர்கள் ஒரு தீர்ப்பை எழுதி வைத்துவிட்டுத்தான் படைப்பைத் தேடுகின்றார்கள்.**

**கேள்வி: சில விமர்சகர்கள் பொருண்மையும் கலைத்துவமும் என்ற நிலையில் உங்கள் எழுத்துக்களில் கலைத்துவச் சிக்கல்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில் : மக்களின் ஏற்புக்கு உள்ளாகும் படைப்புக் களில் கலைத்துவச் சிக்கல்கள் இருப்பதாக சில விமர்சகர்கள் குறைப்படுவதுண்டு. மார்க்சியவாதிகளே இவ்வாறு அபிப்பிராயப் படுகின்றனர். இவர்கள் ஒரு தீர்ப்பை எழுதி

வைத்துவிட்டுத்தான் படைப்பைத் தேடுகின்றார்கள்.

**கேள்வி:** தமிழின் முதல் நாவல் காவலப்பன் கதை என நீங்கள் கூறுவதாக எங்கள் விரிவுரையாளர் கற்பித்தார். இதனை முதல் நாவலாகக் கொள்வதற்கு நீங்கள் கூறும் நியாயம் என்ன?

பதில் : இது 1856இல் யாழ்ப்பாணத்தில் வெளி வந்தது. இது ஒரு மொழிபெயர்ப்பு நாவல். அசன்பே சரித்திரம் ஒரு தழுவல் என்றால் இது ஒரு மொழிபெயர்ப்பு. மொழி பெயர்ப்பு நாவல், நாவலாகாது என ஒதுக்கக் கூடாது.

**கேள்வி:** கவிதைத்துறையில் ஈடுபட்டிருக்கிறீர்களா?

பதில் : இல்லை, சிறுகதை மூலமும் நாவல் மூலமும் சமூகத்திற்குச் சொல்ல வேண்டியவற்றைத் தெளிவாகச் சொல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**கேள்வி:** நீங்கள் ஆசிரியர்களாகிய எங்களுக்கு என்ன கூறவிழைகின்றீர்கள்?

பதில் : ஆசிரியத் தொழில் உன்னதமான தொழிலாகும். ஆசிரியர் எந்நாளும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். புதுப்புது விடயங்களைத் தேடிக் கற்க வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களுக்குச் சிறப்பாகக் கற்பிக்க முடியும்.

**ஆசிரியத் தொழில் உன்னதமான தொழிலாகும். ஆசிரியர் எந்நாளும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். புதுப்புது விடயங்களைத் தேடிக் கற்க வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களுக்குச் சிறப்பாகக் கற்பிக்க முடியும்.**

**கேள்வி:** நாங்களும் உங்களைப் போல வர வேண்டும் என ஆசைப்படுகின்றோம். இதற்கு நீங்கள் கூறும் அறிவுரை?

பதில் : அரசியல், கல்வி எனச் சகல துறைகளிலும் சரியானவற்றைப் படித்து இனங்கண்டு கொள்ளுங்கள். உங்களிடமுள்ள திறமைகளை நீங்களே உய்த்து உணர்ந்து கொள்ளுங்கள். அதனை வளர்த்தெடுங்கள். அது உங்கள் கைகளிலேதான் இருக்கிறது. 500 அல்லது 1000 பக்கங்களில் இலங்கையில் நாவல் வெளி வருவதைக் காணமுடியவில்லை. எழுத்துத் துறையில் நம்பிக்கை தருபவர்களைக் காண்பதும் அரிதாகவே உள்ளது. முயற்சியுங்கள். முயற்சித்தால் உங்களாலும் முடியும்.

**செவ்வி கண்டவர்கள்:** வி. ஸ்ரீதரன், செ. சரோஜனி குமாரி, மா. சரோஜனி, ச. துஷாந்தி, ஐ. நிரஞ்சலா, மு. தௌ. சாஹிராபானு, செ. புஸ்பவதி, மு.ந.பாத்திமா நாதிரா, பெ. மரியநிஷோனி, க. வதனஸ்ரீ, மு. சலாம், சா.மு. ராஜ், மு.ஐ.மு.நிஹார், மு.மு. நசீம், மு. நவநீதன், சு. பிரபாகரன், எம்.என்.எப்.சப்ரா, ஐ.றைஹானா, அ.பா. நிஸானா, மு.உ.ஜெஸ்மிலா உம்மா, ஏ.எல்.எப்.மக்கியா, ப.பஹ்மிதா, செ. பர்ஹானா, சி. சாந்தகுமாரி, அ.க. ஜெராட், அ.சு.சித்திபரீதா.



2010ம் ஆண்டுக்கான சாகித்திய ரத்னா விருது

**செல்வி கண்ட நாள்:** 19.10.2011 புதன்கிழமை காலை 9.00-11.00 மணி


## உலகப் பழமொழிகள்

- அன்பான சொல் மருந்தாக இருப்பதோடு வாழ்த்தவும் செய்கிறது. - அங்கேரி
- செயலே புகழ் பரப்பும் வாய் அல்ல. - அங்கேரி
- முட்டாளுடன் விருந்துண்பதைவிட புத்திசாலியுடன் கூலி சுமப்பது மேல். - அயர்லாந்து
- துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு ஆனால் அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே.
- பேனாவின் வழுக்கைவிட காலின் வழுக்கல் குறைந்த அபாயமாகவே இருக்கிறது. - அரேபியா
- திறமையான நீச்சல்காரனைத்தான் ஆறு அடித்துக் கொண்டு செல்கிறது. - இங்கிலாந்து
- அயோக்கியனைக் கூட மேடையேற்றிவிட்டால் நல்லதையே பேசுவான்.
- அறிந்தவர்கள் அதிகம் பேசுவதில்லை அதிகம் பேசுபவர்கள் அறிந்தவர்களில்லை. - இஸ்ரேல்
- சுயகட்டுப்பாடு ஒருவனை இறைவனிடம் சேர்க்கிறது.
- குழந்தைக்குச் சோறு கொடுத்தால் தாய்ப் பாலை மறக்கும். பெண்ணுக்குக் கணவன் வந்தால் தாயை மறப்பாள். - இலங்கை
- ஒவ்வொருவரும் தன் வீட்டு வாசலைச் சுத்தம் செய்தால் தெரு தானாகச் சுத்தமாகிவிடும்.
- நிலவு உன்னோடு இருந்தால் நட்சத்திரங்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. - எகிப்து
- பெண் குழந்தைகள் வீட்டுக்கு அலங்காரம். அவர்கள் விற்பனைக்குரிய பொருட்கள்
- நல்ல மனசாட்சி இறைவனின் குரல். - எஸ்டோனியா
- தன்னை விடச் சிறந்த தூதனைக் குள்ளநரி ஒருபோதும் அனுப்பாது.
- சுமை ஏறிய சோளக்கதிர்தான் தன் தலையை மிகவும் தாழ்த்தித் தொங்கப் போட்டுக் கொள்ளும். - ஐரிஸ் (அயர்லாந்து)

வி. சுலக்சன்
யா/ஸ்கந்தவரோதய கல்லூரி
2012 A/L கலைப்பிரிவு

# புலம்பெயர் தமிழர்கள் : பெண்களும் விழுமிய முரண்பாடுகளும்

*மா. சின்னத்தம்பி*
*கல்வியியல்துறை,*
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.*



புலம்பெயர்ந்து வாழும் மக்கள் பொருளாதார வாழ்வுக்கும் சமூகவியல் வாழ்வுக்குமிடையில் சமநிலை ஒன்றை உருவாக்குவதில் தொடர்ச்சியாக அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அவை தொழில் கல்வி, மொழி, திருமணம், உறவுகள் தொடர் பானவையாகக் காணப்படுகின்றன.

விருப்பம், எதிர்பார்க்கை, நம்பிக்கை, பழக்கம், பற்றுறுதி, மொழி, கலை, வாழ்வியல், நடை உடை பாவனைகள் தொடர்பான நடத்தைக் கோலங்களுடன் உளரீதியான ஒத்திசைவைப் பெறுவதில் அதிக சிரமங்களைத் தொடர்ச்சியாக எதிர்கொள்கின்றனர்.

**உழைப்பு ஆற்றலோ, பொருளாதாரத் திறன்களோ இல்லாத ஆண்கள் கூட "கணவன்" என்ற அந்தஸ்தை பெறுவதில் நாட்டம் கொண்டிருந்தமைக்கு எளிதாக வந்து சேரும் "குடும்பத் தலைவன்" என்ற அதிகாரபீடம் உதவியது. மனைவி மற்றும் பிள்ளைகள் தொடர்பான அதிகாரங்களைப் பிறப்பிக்கும் ஆற்றலைக் "கணவன்" என்ற குடும்ப நிலைப் பதவி வழங்கியது. இதற்கு சமூக பண்பாட்டுப் பலம் துணை நின்றது.**

குடிபுகுந்த நாடுகளில் பிறந்த புதிய தலைமுறையினர் எதிர்நோக்கும் போக்கும் வாழும் நாடுகளின் வாழ்வியலுடன் இதமாக ஒன்றிப் போயுள்ளன. அவர்கள் தமது தாய், தந்தையரது நாடு, பொருளாதார வாழ்வு முறை, பண்பாடு தொடர்பாகத் தகவல்களைப் பெற்று, அதனால் உருவான அறிவு ரீதியான புலக்காட்சியை கொண்டுள்ளனர். உணர்வுபூர்வமானதாக அவை வளரவில்லை. இலங்கையில் நிகழ்ந்த இன முரண்பாடுகள், யுத்தம், நாட்டைவிட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்தித்த உதைப்புக் காரணிகள் என்பன தொடர்பாக அவர்களிடமும் ஆழமான மனவெழுச்சி வளர்க்கப் பட்டுள்ளது. அது ஒரு கவலை நிறைந்த திரைப் படத்தைப் பார்க்கும் இரசிகனுடைய மனதில் உருவாகும் துன்பியல் உணர்வு போன்றது. இதனால் உதவும் மனப்பான்மை நிறையவே வளர்ந்துள்ளது. அதை ஒரு தாய் மண் சார்ந்த உணர்வாக கருதுவது மிகவும் சரியாக அமைய முடியாது.

ஆனால் ஈழத்தில் பிறந்து பதின்ம வயதுகளில் நாட்டைவிட்டுப் பயத்துடனும், பதகளிப்புடனும், உயிர்ப் பாதுகாப்புத் தேவைகளினுடனும் ஓடி ஓடிப் பல நாடுகளில் வாழ்ந்து நகர்ந்து நகர்ந்து இறுதியாக ஏதோ ஒரு செல்வந்த நாட்டில் வாழ்வை நிலை நிறுத்திக் கொண்டுள்ளவர்களைத் தான் "புலம் பெயர்ந்த தமிழர்கள்" என்று கொள்ள முடிகின்றது.

இவர்கள் இப்போது ஐந்து அல்லது ஆறு பதின்ம வயதில் உள்ளனர். இவர்கள் இரு வகையான வாழ்வியல் கண்ணோட்டங்களையும், உணர்வுகளையும் கொண்டவர்கள். ஒன்று பிறந்து, வளர்ந்து, பண்பாட்டுக் கருத்துருவாக்கங்களைக் கட்டமைப்புச் செய்வதில் ஆழமான பங்களிப்பைச் செய்த தாயகம் பற்றிய உணர்வு. இது மனதில் எங்கோ ஒரு மூலையில் உயிர்த் துடிப்புடன் தொழிற்பட்டுக் கொண்டே உள்ளது. எப்போ தெல்லாம் தனிமை கிடைக்கிறதோ அப்போதெல்லாம் அவர்களது மனம் தாயகம் நோக்கித் தாவத் தொடங்கிவிடும். இதில் ஒரு ஏக்கமும் குதூகலமும் இணைந்தே உள்ளன. இது தான் ஆத்மார்த்தமான வாழ்வு நிலையாக அமைகின்றது.


இரண்டாவது நிலையென்பது புகுந்த நாடுகளில் தங்களது பொருளாதார சமூகவியல் தேவைகளை நிறைவு செய்வதில் தடைகள் பல தாண்டி புதிய கண்ணோட்டங்களை உருவாக்கிக் கொண்டு உள்மனதுடன் ஒட்டாமலே நிர்மாணித்துக் கொண்ட இரண்டாவது வாழ்வு. இது பொருள்சார் வாழ்வு என்று கொள்வது மிகப் பொருத்தமானது. புகுந்த நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பு, தொழிற்பாடுகள், நியமங்கள், சட்ட திட்டங்கள் என்பவற்றை விளங்கிக் கொண்டு அதற்குரிய தகைமைகளை வளர்த்துக் கொண்டு வாழும் வாழ்வு. இது தப்பிப் பிழைப்பது தொடர்பான வாழ்வியல் உருவாக்கம் தான்.

இங்கே குறிப்பிடப்படும் முதலாவது தலைமுறையினரது விழுமிய முரண்பாடுகள் பற்றியே இங்கு குறிப்பிடுகிறேன். இவை பற்றிய கருத்துக்கள் எனது அவதானிப்புக்க ளிலிருந்து மீள் உருவாக்கம் செய்யப்பட்டவை. பல்வேறு தகைமைகளில் அவர்களைப் போன்ற அனுபவங்கள் பெற்றவர்களால் மாத்திரம் பிரித்துப் பார்க்கக் கூடியவை. இவர்கள் தாயகத்தைவிட்டு பிரித்துணர முடியாத காரணங்கள் மற்றும் நிலைமைகளினால் வெளி யேறியவர்கள். குடிபுகுந்த நாடுகளில் இரண்டாவது வாழ்வை நிர்மாணித்துக் கொண்டிருப்பவர்கள். இவர்களது விழுமிய முரண்பாடுகள் பற்றியே இக்கட்டுரை கவனம் செலுத்துகின்றது.

**உறவுகள் மற்றும் குடும்பங்கள்:**

எந்த ஒரு இனக்குழுமத்தினதும் சமூகவியலின் அடிப்படைகள், குடும்ப முறைமை மற்றும் உறவுகளின் பலம் என்பவற்றிலிருந்தே உருவாகின்றன.

கணவன் - மனைவி, தாய் - பிள்ளைகள், தந்தை - பிள்ளைகள், குடும்பங்களிடையிலான பொருள் மற்றும் உணர்வு சார்ந்த பரிமாற்றங்கள் என்பன சமூகவியலை நிர்ணயிக்கின்றன. புலம்பெயர்ந்தவர்கள் குடியேறிய நாடுகளில் நிலவுகின்ற மாதிரிகளை நோக்கி மெல்ல மெல்ல நகர்ந்து போவதைக் காண முடியும்.



வாழ்நாள் முழுதும் கணவனது தலை மைத்துவத்தை ஏற்று, அவரது கட்டளைகளை மாத்திரம் நிறைவேற்றி அவரது பொருளாதார பலம் என்ற நிழலில் வாழ்வதை மதிப்புமிக்க பெண்மையின் இலக்கணமாகக் கருதிய வாழ்வு முறையைப் பெண்கள் இலங்கையில் கொண்டிருந்தனர். சீதனம் கொடுத்து திருமணம் செய்தாலும், குடும்ப மட்டத்தில் பொருளாதாரப் பணிகளில் ஈடுபட்டு வருவாய் தேடினாலும் "கணவன்" என்ற ஆண் மேலாதிக்கம் தனிப்பட்ட பெண்களாலும், பெண் பால் வகையினாலும் ஏற்கப்பட்டிருந்தது. இதில் ஆண்கள் மிகப் பெரிய மேலாண்மையைக் கொண்டிருந்தனர். உழைப்பு ஆற்றலோ, பொருளாதாரத் திறன்களோ இல்லாத ஆண்கள் கூட "கணவன்" என்ற அந்தஸ்தை பெறுவதில் நாட்டம் கொண்டிருந்தமைக்கு எளிதாக வந்து சேரும் "குடும்பத் தலைவன்" என்று அதிகாரபீடம் உதவியது. மனைவி மற்றும் பிள்ளைகள் தொடர்பான அதிகாரங்களைப் பிறப்பிக்கும் ஆற்றலைக் "கணவன்" என்ற குடும்பநிலைப் பதவி வழங்கியது. இதற்கு சமூக பண்பாட்டுப் பலம் துணை நின்றது. பெண்களின் கல்வி, தொழில் நிலை, உழைப்பு என்பன "கணவன்" ஒருவருடன் இணையும் போது மதிப்பிழந்து போவதை பண்பாடு ஏற்றுக்கொண்டது. உறுதிப்படுத்தியது. இவ்வாறு "கணவனாதல்" என்ற தகைமைப்பாடு அதிகார, அந்தஸ்து, பொருளாதார நிலைமைகள் சார்ந்த மேன்மையை வழங்கியிருந்தது. மறுபுறம் "மனைவியாதல்" என்ற தகைமை பெண்களுக்கே உரித்தான அதிகாரம், அந்தஸ்து, பொருளாதார வலிமை என்பன சார்ந்த இழப்பை அல்லது தியாகத்தைக் கட்டாயப் படுத்தின. வாழ்நாள் முழுதும் கட்டுப்படுத்தல் என்பதை அவர்கள் தாமாக விரும்பி ஏற்றுக் கொள்வதாகவே தாலி கட்டுதலை சமூகவியலாளர், நோக்குகின்றனர். கால்களில் இரும்பினால் செய்யப்பட்ட வளையங்களை கட்டாயமாக அணியச் செய்தால் அவர்கள் அடிமைகள். ஆனால் தங்கத்தினால் செய்யப்பட்ட வளையத்தை கழுத்தில் விருப்பத்துடன் அணியச் செய்தால் அவர்கள் மனைவியர். இருவரது உரிமை, சுமை, அந்தஸ்து என்பன தொடர்பாக பெரிய வேறுபாடுகள் எதுவுமில்லை. பாரதிராஜா, பாக்கியராஜா போன்ற தென்னிந்திய இயக்குநர்கள் தமது திரைப் படங்களில் பெண்களிடம் விடுதலை வேட்கை உயரும் போது தாலியை அறுத்துவிட்டு வெளியேறுவதாக காட்டியமையை இங்கு தொடர்புபடுத்திப் பார்ப்பது பொருத்தமானது.

கால்களில் இரும்பினால் செய்யப்பட்ட வளையங்களை கட்டாயமாக அணியச் செய்தால் அவர்கள் அடிமைகள். ஆனால் தங்கத்தினால் செய்யப்பட்ட வளையத்தை கழுத்தில் விருப்பத்துடன் அணியச் செய்தால் அவர்கள் மனைவியர். இருவரது உரிமை, சுமை, அந்தஸ்து என்பன தொடர்பாகப் பெரிய வேறுபாடுகள் எதுவுமில்லை.

ஆண்கள் பல சமயங்களில் பெண்களின் மகப்பேற்று பலவீனங்களை நியாயமாக முன் நிறுத்தி தமது மனைவியரின் சகோதரிகளை திருமணம் செய்வதைப் பண்பாட்டுச் சட்டங்கள் ஆதரித்தன. தமது கணவன்மாரின் மகப்பேற்றுப் பலவீனங்களிலிருந்து விலகி அவரது சகோதரர்களை திருமணம் செய்து கொள்வதற்கு அதே சமூக சட்டங்கள் இடமளிக்க வில்லை. ஆண்களினால் கவனமாக உருவாக்கப்பட்ட விழுமியம் சார்ந்த சட்டங்களும் நடைமுறைகளும் ஆண்களுக்கு அபரிமிதமான அதிகாரங்களையும் "சும்மா" வருகின்ற பொருளாதார நலன்களையும் அள்ளி வழங்கின. இதனாலேயே ஆண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் மேலானவர்களாகவும் பெண் பிள்ளைகள் பெற்ற பெற்றோர் கீழானவர்களாகவும் பார்க்கும் சமூக மற்றும் பண்பாட்டு ஏற்பாடுகள் வலிமையுடன் வளர்க்கப்பட்டன. பலமாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. திருமணச் சடங்குகள் ஆண் மேலாதிக்கத்தைப் பல நிலைகளில் வலியுறுத்தின. ஆண்களுக்குத் தலைப்பாகை வைத்தல், மணவறையில் நிமிர்ந்து இருத்தல், அமர்ந்தபடியே பெண்ணுக்கு மாலை அணிவித்தல் என்பன இத்தகையன. மாறாக பெண்களின் முகத்தை மூடுதல், எழுந்து நின்றபடி மாலையை ஏற்றுக் கொள்ளுதல் என்பன பெண்களின் குறைநிலை அந்தஸ்தை வெளிப் படுத்தின.

மேலே தெளிவுபடுத்தப்பட்டவையயெல்லாம் தமிழர்கள், குறிப்பாக தமிழ் மொழி பேசும் இந்துக்களின் பண்பாட்டு விழுமிய சமூக ஏற்பாடுகள் தாயகத்தில் இருக்கும் வரை கணவன்-மனைவி என்ற உறவு முறை நிலவிய மாதிரிகையைக் காட்டுவன. புலம்பெயர்ந்து வாழத் தொடங்கியவுடன் பெண்களின் வாழ்வு நிலை பன்மடங்கு மேம்படலாயிற்று. பெண்கள் புதிய சுதந்திரத்தைப் பெறலாயினர்; புதிய நியமங்களை வரித்துக் கொண்டனர்; நடை, உடை, விருப்பு, வெறுப்பு, தொடர்பாடல் போன்ற எல்லாவற்றிலும் புதியனவற்றை உள்வாங்கினர். உணர்வு, மனவெழுச்சி, நம்பிக்கை, துணிவு, தீர்மானம் தொடர்பாகப் புதுமைப் பெண்களாகினர். இதற்குரிய வாய்ப்புக்களையும், வளங்களையும், அங்கீகாரத்தையும், பாதுகாப்பையும் மேற்குல சமூக, அரசியல், பொருளாதார சூழல் வழங்கியது.

இத்தகைய ஆண்-பெண் என்ற சமூகநிலை அந்தஸ்தில் மிகப் பெரிய மாறுதல்கள் உருவாகின. நிலைத்தன. இதனால் "கணவன்" என்ற குடும்பம் சார் பதவி நிலை படிப்படியாகப் பலவீனமாயிற்று. "தந்தை" என்ற அதிகாரபீடம் பல மாதிரி வெடிப்புகளுக்குள்ளா கியது. பெண்களது சுதந்திரமும், சுயஉணர்வும், சுய வெளிப் பாடும், சுய பொருளாதார உரித் துக்களும் ஆண்களிடமிருந்து அவர்களை விடுவிக்கலாயின. இது ஆண்களை மையப்படுத்தியிருந்த விழுமிய - சமூக வலையமைப்பில் ஏராள மான ஓட்டைகளை உருவாக்கி விட்டது. இந்த மாற்றங்களை - பழைய விழுமியங்களின் சிதைவை முன்னேற்றங்களாகப் பார்ப்பதா அல்லது பின்னடைவாகக் கருதிக் கொள்வதா என்பதில் பலமான முரண்பாடு நிலவுகின்றது.

இந்த மாற்றங்களை-பழைய விழுமியங்களின் சிதைவை முன்னேற்றங்களாகப் பார்ப்பதா அல்லது பின்னடைவாகக் கருதிக் கொள்வதா என்பதில் பலமான முரண்பாடு நிலவுகின்றது.

பெண்கள்: பால் மற்றும் பால்மை

புலம்பெயர்ந்த பின் மீள் உருவாக்கம் செய்யப்பட்ட தமிழர்களது இரண்டாவது விழுமிய வடிவமைப்பானது புதிய திசை நோக்கித் தமிழர்களது வாழ்வியலை நகர்த்தியுள்ளது. இது பெண்களின் விடுதலையுடன் பிணைக்கப்பட்ட வகையில் விரிந்து, கிளை பரப்பி வளர்கிறது. இந்த மாற்றங்களில் சுலபமாக தென்படுவனவாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

மேற்குலகின் காலநிலை, தொழில்முறை, நிறுவன மாதிரிகை, பாதுகாப்புச் சட்டங்கள், தொடர்பாடல் மாதிரிகைகள், கொண்டாட்டங்கள் போன்ற பல வற்றினாலும் இத்தகைய மாற்றங்கள் உருவாக்கப் பட்டமையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

- பெண்கள் வழிய வழிய எண்ணை வைத்து இறுக்கமான ஒரே பின்னலைப் பின்னுதல் அல்லது கொண்டை போடுதல் மறைந்து தலைமயிரைக் கட்டையாக வெட்டுதல் அல்லது பரப்பி விடுதல்.
- உடல் வளைவுகளை மறைக்கும் வகையில் முழுமையாக சேலை அணியும் முறையிலிருந்து வெளியேறி காற்சட்டை, மேற்சட்டை, தொப்பி அணிதல்.
- தமக்கும் குடும்பத்தாருக்கும் தேவைப்படும் மூன்று வேளைகளுக்குமான உணவு தயாரித்தல் விருந்தினருக்காக உணவு தயாரித்தல் என்பது பெண்களுக்காக குடும்ப மட்ட உரிமை சார்ந்த கடமையாக சமூகத்தினால் வலியுறுத்தப்பட்டது.

**பெண்கள் குடும்பத் தலைவராகி வருவதையும் இந்த மாற்றம் உறுதி செய்கின்றது. இதனால் மேலை நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர் குடும்பங்களில் "இரட்டைத் தலைமை" உருவாகி வருகின்றது. இது பெண்களின் முன்னேற்றத்தை வெளிப்படுத்தும் சமுதாயக் குறியீடு ஆகும்.**

புலம் பெயர்ந்த நாடுகளில் இதிலிருந்து விடுபட்டு வருமானம் தரும் தொழில்களாக மாத்திரம் உணவு தயாரித்தலில் ஈடுபடும் பெண்களையே அதிகம் காணமுடியும். வீட்டுத் தேவைக்கும், விருந்தினருக்கும் உரிய உணவு, பணம் கொடுத்து உணவகங்களில் வாங்கப்படுகின்றது.

தீ, புகை, அழுக்கு என்பவற்றிலிருந்தும் உண்பவர்களின் கோரிக்கைகள் மற்றும் கண்டனங் களிலிருந்தும் பெண்கள் விடுபட்டுள்ளனர். உணவு தயாரித்தல் பணி குடும்பப் பெண்களின் கைகளிலிருந்து வணிக நிறுவனங்களுக்கு கைமாறிவிட்டது. சமையல் கட்டிலிருந்து பெண்கள் தொழிற்சாலைகளுக்கு மாற்றப் பட்டு விட்டனர்.

- வாகனங்கள் ஓட்டக் கற்றுக்கொண்டுவிட்டனர். தமக்கென உரிமையான வாகனங்களை தமது உழைப்பு வருமானங் கொண்டு கொள்வனவு செய்து உள்ளனர்.

இது புதிய தளமாற்றத்தைப் பெண்களது வாழ்வியல், பொருளாதார, அந்தஸ்து நிலைகளில் உருவாக்கிவிட்டது. தமது நாளாந்த நகர்வு பற்றிய முடிவுகளைத் தாமாக மேற்கொண்டு தனியாகப் பல்வேறு இடங்களுக்கும் செல்லத் தொடங்கியிருந்தனர். வேலை, கொள்வனவு, பொழுதுபோக்கு, சமூக ஊடாட்டம், சட்டத் தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற எல்லாத் தேவைகளுக்காகவும் ஆண்களின் ஆலோசனையோ, அனுமதியோ, துணையோ இல்லாமல் பெண்கள் செல்லத் தொடங்கியிருந்தனர். இதற்கு வாகன உரிமையும், வாகனம் ஓட்டும் ஆற்றலும் பெரிதும் துணை நிற்கின்றன.

பெண்கள் குடும்பத் தலைவராகி வருவதையும் இந்த மாற்றம் உறுதி செய்கின்றது. இதனால் மேலை நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர் குடும்பங்களில் "இரட்டைத் தலைமை" உருவாகி வருகின்றது. இது பெண்களின் முன்னேற்றத்தை வெளிப்படுத்தும் சமுதாயக் குறியீடு ஆகும்.

- திருமண முடிவுகளில் பெண்கள் சுயாதீனமுடைய வர்களாகின்றனர். தமக்குப் பாதுகாப்பின்மை அதிகரிக்கும் போதும், தமக்கு அகநிலைத் துன்பங்கள் கூர்மையடையும் போதும், தமது உடலும் உழைப்பும் அங்கீகாரம் எதுவுமின்றி சுரண்டப்படும் போதும் "கணவன்" என்ற பகைவனிடமிருந்து வெளியேற அவர்கள் தயங்குவதில்லை. ஆயிரங் காலத்துப் பயிர் என்பது பெண்களுக்கு மாத்திரம் உரித்தான ஒடுங்குதலையும், துன்பியலையும் வலியுறுத்தும் தந்திர வாசகமா யுள்ளது.

இதனால் மகிழ்வான பயணம் செய்யும் பஸ் பயணம் போலத் திருமண வாழ்வை யதார்த்தமாக நோக்கும் புதிய கண்ணோட்டம் அவர்களிடம் வளர்ந்துள்ளது.

நீண்ட பயணத்திற்காகச் சில சமயம் ஒன்றுக்கு மேற்பட்ட பஸ் வண்டிகளில் பயணம் செய்வதுண்டு அல்லவா? அதேபோல் தமது இருப்புக்கு உதவக்கூடியதாக திருமணம் பற்றிய நோக்கையும் போக்கையும் அவர்கள் மாற்றிக் கொண்டுள்ளனர். இது ஒரு வகையான "சமூக அதிர்ச்சி"யாகப் பழைய தலைமுறையினரால் உணரப்படுகின்றது. ஆனால் தவிர்க்க முடியாத வாழ்வியல் தேவையாக புதிய தலைமுறையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மாற்றங்களுடன் வேகமாகவும் மகிழ்ச்சியுடனும் முன்னேறுதல் என்பதில் பெண்கள் அக்கறை கொண்டுள்ளனர். பெண்களது தனிப்பட்ட உடல் தேவை, பாதுகாப்பு, மகப்பேறுக் கௌரவம் தொடர்பாக பெண்களை வகையீடு செய்யும்போது பால் (Sex) என்று பேசப் படுவதுண்டு. ஆனால் பெண்களின் சமூகப் பங்களிப்பு, பொருளாதார வகிபாகம், அரசியல் தலைமைத்துவம், தொழில்நுட்ப வகிபாகம் என்பவற்றி னடிப்படையில் பெண்களைத் தனித்துவம் மிக்க குழுமமாக வளர்க்கும் நோக்கில் பால்மை (Gender) என்ற எண்ணக்கரு வளர்ந்துவிட்டது.

புலம்பெயர்ந்த தமிழர்களிடையிலும் பால் என்பதிலிருந்து பால்மை நோக்கிய அசைவுணர்வு வலிமையோடு வளர்ந்து வருகிறது. புதிய தொழில், புதிய உணவு, புதிய பண்பாடு என்பவற்றை ஏற்றுக்கொள்வது போல் புதிய விழுமியங்களை உள்வாங்கிப் பெண்களிடையில் உயர்ச்சி நோக்கிய அசைவியக்கம் ஏற்படுவதையும் அங்கீகரிப்போம். மாற்றங்கள் குறுங்காலத்தில் இதமாக தென்படா விடினும் நீண்ட காலத்தில் வலிமையையும் வளர்ச்சியையும் தந்தால் நல்லது தானே!

# பயணங்கள் முடிவதில்லை

மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கு மொழி உதவி செய்கிறது. அதன் விளைவாகத் தான் கதை, கவிதை, நாடகம், புதினம், கட்டுரை போன்ற இலக்கியங்கள் தோன்றுகின்றன. மொழி எண்ணங்களைப் பதிவு செய்கிறது. எழுத்தின் துணைகொண்டு நூல்கள் உருவாகின்றன. மொழி காலத்தை வெல்லும் ஆற்றலைத் தருகிறது. அதன் உதவியால் தான் ஏறத்தாழ 2600 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பியம் இன்றும் வாழ்கின்றது. இது என்றும் வாழும் மொழி. ஓர் இனத்தை இணைக்கும், பிணைக்கும் மாயச் சங்கிலி. மக்களைப் பிரித்து வைக்கும் சாதி அதன் உட்பிரிவுகள் மதம், செய்யும் பணி, ஏற்றத் தாழ்வை உண்டாக்கும் பொருளாதாரம் ஆகியவற்றைக் கடந்து தாய்மொழி ஓரினத்தை ஒருங்கிணைக்கிறது.

முகம் தெரியாத இருட்டில் இருந்தாலும் பார்வைக்கு அப்பால் தொலை தூரத்தில் இருந்தாலும் ஒருவனிடம் கருத்தைக் கொண்டு சேர்க்கும் பணியை மொழி செய்கிறது. மொழி பல தலைமுறையினருக்கும் நன்மை புரிகிறது. தன் காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு உரைக்கப்பட்ட திருக்குறள், இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்த பின்னரும் இன்றைய தமிழருக்கும் ஒளிவிளக்காக உதவுகிறது. ஒவ்வொரு மனிதனுமே மொழித் தூய்மையைப் பேண வேண்டும்.

அண்மையில் எமது பிரதேச வைத்திய சாலைக்கும் சென்றிருந்தேன். அங்கே பெரிய அளவிலான ஓர் விளம்பரப் பலகை அதில் "காச நோய்த் தடுப்பும் மார்பு நோய்களுக்குமான தேசிய செயற்திட்டம்" என்றிருந்தது. செயல் + திட்டம் செயற்றிட்டம் என்றே புணர வேண்டும். அல்லது செயல்திட்டம் என்று புணர்த்தாது எழுதப்பட வேண்டும் இரண்டு விதமாகவு மின்றி ஏனிப்படி? யாரிடம் வினாத் தொடுப்பது?

**கைதடியூர் பாரதி**

மொழியைச் சரியான முறையில் பயன் படுத்துகின்ற போது தான் அது வளம் பெறும். வாக்கிய இயைபுக்கேற்ப அது அமைக்கப்பட வேண்டும். இந்த இயைபுகள் பலவிடங்களில் கவனிக்கப்படுவதில்லை. நம் பழந்தமிழ் இலக்கண ஆசிரியர்கள் வாக்கிய இயைபுகள் சொற்புணர்ச்சிகள் பற்றிய இலக்கணங்களைச் சிறப்புறக் கூறியுள்ளனர். அந்த இலக்கணப்படி வாக்கியங்கள் அமையும்போது தான் அவை இயைபுடையதாய் விளங்கும்.

ஒற்றுக்கள் மிக வேண்டிய இடத்தில் அவை மிக வேண்டும். தேவையற்ற இடத்தில் அவை இடம் பெறக் கூடாது. இந்தத் தவறுகள் பத்திரிகைகளில் அன்றாடம் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. எடுத்துக்காட்டுக்கள் கூறப்போனால் அவை ஏராளம் ஆயினும் ஒன்றிரண்டைக் கூறலாம் "தேசங்களை சீர் செய்வதற்காக" என்று 11.01.2012 யாழ்ப்பாணப் பத்திரிகையில் செய்தி. அதில் வல்லொற்று மிக வேண்டும். அதாவது சகர ஒற்று மிக வேண்டும். அதன் படி சேதங்களைச் சீர்செய்வதற்காக என்று வர வேண்டும். அதே தினச் செய்தி ஒன்று "தமது பதிவுகளை கலாசாலையில் மேற்கொள்ளலாம்" என்று வரும்.

இன்னொரு பத்திரிகையின் ஒரு செய்தி "பொலிஸாரால் குறித்த பெண்ணை உரும்பிராய் பிரதேசத்தில் வைத்து கைது செய்தனர்" இங்கு ஒற்றுக்கள் மிகவில்லை என்பது ஒரு விடயம். அதைவிட வாக்கிய இயைபு காணப்படாமை இன்னொரு விடயம். இச் செய்தி பொலிஸாரால் குறித்த பெண் உரும்பிராய்ப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். என்று வரவேண்டும். அன்றேல் பொலிஸார் குறித்த பெண்ணை உரும்பிராய்ப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்தனர் என்று வரவேண்டும்.

அப் பத்திரிகையின் ஒரு செய்தி பராமரிப்புக் கிளினிக் என்பதற்குப் பதிலாகப் பராமரிப்பு கிளினக் என்று வந்துள்ளது.

இன்னும் புணர்ச்சி விதிகளைச் சரியான முறையில் அனுசரித்து எழுதாத தவறுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இன்றளவும் 'கலாசாரம்' என்ற சொல்லை 'கலாச்சாரம்' என்று எழுதும் தவறு சிறுவர் முதல் பெரிய கல்விமான்கள் வரையில் காணப்படும் பெருந் தவறாக உள்ளது. இச் சொல் தொடர்பான ஒரு சம்பவம்.

அன்றொருநாள் நான் 769 கொடிகாமம் பேருந்தில் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். பேருந்து அரியாலைப் பகுதியை அண்மித்திருந்தது. அப்போது........

(பயணங்கள் தொடரும்)



"இந்திரபவனம்"
குறிஞ்சிக்குமரன் வீதி,
வீரமனை, குப்பிளான்.
2011 மார்கழி 25.

ஆசிரியர்,
"தமிழருவி"
சிவகுல வீதி,
உரும்பிராய்.

## இது கடிதமல்ல. என் உணர்வு

பெருமதிப்பிற்குரிய தமிழருவி ஆசிரியர், அவர்கட்கு,

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற மகாகவி பாரதியாரின் வாக்கிற்கிணங்கத் தமிழ் மணக்கும் யாழ் மண்ணில் தமிழருவி தனித்துவம் மாறாமல் வெளி வருவது பாராட்டுக்குரியது. அந்த வகையில் தமிழருவி ஆசிரியர் குழாத்தினருக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

மேலும் கடந்த தமிழருவி இதழில் ஆக்கங்கள் தேவை. என்று வெளியான ஆசிரியர் தலையங்கத்தைப் பார்த்து ஒரு கணம் ஆடிப் போனேன். கல்வி, கலை, பண்பாட்டுக்குப் பெயர் போன யாழ்ப்பாண மண்ணிலா இந்த நிலை?

"வாருங்கள் கவிஞர்களே நாமும் வீதிக்குப் போவோம்"

என்றான் தமிழகக் கவிஞர் அறிவுமதி. நான் அழைக்கிறேன். "சினிமா, போதை, கைத்தொலைபேசியால் சீரழியும் நம் தேசத்தை சீர்படுத்திட – எம் எழுதுகோலை ஆயுத மாக்கி இனியொரு விதி செய்வோம் எழுந்து வாரீர்....!" என்று.

புரட்சிகள் படைக்க ஆயுதங்களால் மட்டுமா முடியும்? ஏன் நம் எழுதுகோல்களாலும் முடியும் என்பதை இந்த உலகத்துக்கு நிரூபித்துக் காட்டுவோம் வாருங்கள்! தமிழருவியோடு கைகோருங்கள்.

மேலும் தமிழருவியின் 5ஆவது இதழில் வெளிவந்த அனைத்து விடயங்களும் எனக்குப் பிடித்திருந்தன. குறிப்பாக "உலகத்து நாயகி" என்ற தலைப்பில் குப்பிளான் மாதாஜி அம்மா ஒரு கட்டுரை எழுதியிருந்தார். மாதாஜி அம்மா என் ஆத்மார்த்தமான குரு என்று கூறிக் கொள்வதில் முதலில் பெருமையடைகிறேன். கடந்த கார்த்திகை 12இல் தனது 80 ஆவது வயதில் காலடி எடுத்து வைத்த அம்மையார் அவர்கள் செந்தமிழ் அறிவில் ஒரு பழுத்த பழமென்றே கூறலாம். எந்நேரமும் நெற்றியில் திருநீறும் சந்தனமும் தரித்து சிவபூசை நாளெல்லாம் செய்து தூய துறவறங் காத்து வரும் சைவப் புலவர் மாதாஜி அம்மையார் குப்பிளான் மண்ணிற்குக் கிடைத்த உயரிய சொத்து என்றே கூறலாம். அவரது அனுபவ அறிவு, ஆன்மீக சிந்தனைகள் என்பவற்றை இந்தச் சமுதாயம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே அந்த ஆன்மீக அன்னைக்கு வாழும் நாளில் நாம் கொடுக்கும் மிகவுயர்ந்த கௌரவமாகும். தை மாதமளவில் எம் ஆன்மீக அன்னைக்கு குப்பிளானில் முத்துவிழா எடுப்பதோடு, சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிடவுள்ளோம். இதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

இறுதியாக உலகில் நாளாந்தம் எத்தனையோ பேர் பிறக்கிறார்கள். இறக்கிறார்கள் எல்லோருடைய பிறப்பிலும், இறப்பிலும் மகிமையிருப்பதில்லை. நாம் எத்தனை காலம் இந்த உலகில் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல...! வாழும் நாளில் நாம் பிறருக்காக என்ன செய்தோம் என்பதே முக்கியம். அந்த வகையில் சிறந்ததோர் அதிபராக, ஊடக நெறி தவறாத உழைப்பாளனாக, ஏழைகளின் இதய தெய்வமாக எம் மத்தியில் வாழ்ந்து காட்டிய என் இதயம் கவர்ந்த சேவையாளன் ஆ.சி. நடராஜா கடந்த 22.11.2011 அன்று பூவுடல் நீத்துப் புகழ் எய்தினார்.

என் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் கவிதைத் துறையில் காலடி எடுத்து வைக்க ஊன்றுகோலாகவுமிருந்த ஆ.சி. நடராஜா அவர்களுக்கான என் ஆழ்மனதில் ஆர்த்தெழுந்த உணர்வுகளை கவிதை என்னும் மொழி வடிவமாக்கி என் அபிமான தமிழருவிக்கு அனுப்புகின்றேன். தவறாமல் பிரசுரிக்கவும்.

*என்றும் தமிழருவியின் அபிமான வாசகன்,*
*செ. ரவிசாந்*
*இளங்கவிஞன்,*
*வீரமனை, குப்பிளான்.*




# தரம் ஒன்றில் காலடி எடுத்து வைக்கும் மாணவர்களிடையே ஏற்படக் கூடிய உளத்தாக்கங்களும் தீர்வுகளும்

திருமதி விஜிதா பிரதாபன்
யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை.

ஆரம்பப் பாடசாலைப் பருவம் வாழ்க்கையின் மிக முக்கியமான கால கட்டமாகும். இக்காலப் பகுதி பிள்ளைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காலம் என்பதால் உளவியலாளர்கள் குழந்தைகளின் மனவெழுச்சிகள், நடத்தை முரண்பாடுகள் பற்றி ஆராய்ந்து பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். எனவே குழந்தைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்ட பெற்றோரும், ஆசிரியரும் அவர்களின் தேவைகள் உணர்வுகளைப் பொறுத்தமட்டில் அவதானமாக இருப்பது அவசியம் ஆகும்.

ஆரம்பப் பாடசாலை மாணவரிடம் முதிர்ச்சி யடைந்த நடத்தைகள், ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றை ஆசிரியர்கள் எதிர்பார்க்க முடியாது. வளர்ந்தவர்கள் தம் உணர்ச்சிகள், தேவைகளை மறைத்து அதன் மூலம் தன்னைச் சூழவுள்ளவர்களுடன் பொருத்தப்பாடு காணலாம். ஆனால் தரம் 1இல் காலடி எடுத்து வைக்கும் சிறுவர்களின் நிலை அவ்வாறு இருப்பதைக் காண முடியாது. ஏனெனில் அவர்கள் தம் உணர்வுகள், தேவைகளை அப்படியே வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்தவர்கள். புதிய சூழ்நிலைக்குத் தம்மைத் தயாராக்கும் போது அவர்களின் எதிர்பார்ப்புக்கள், தேவைகள் அலட்சியப்படுத்தப்படும் போது அல்லது புறக்கணிக்கப்படும் போது அவர்களிடம் பல உளத் தாக்கங்கள் ஏற்படுகின்றன.



## வெறுப்புணர்வு

பிறந்தது முதல் வீட்டில் தனித்துவமாக கவனிக்கப்பட்ட குழந்தையானது, தனது ஆரம்பக் கல்வியை தொடங்கும் முகமாகப் பாடசாலையில் தரம் 1 இல் காலடி எடுத்து வைக்கும் போது அச்சிறுவனுடன் ஒத்த பல குழந்தைகளுள் ஒன்றாக அவனும் கவனிக்கப்படுகின்றான். ஆரம்பத்தில் பாடசாலைக்கு வருவதற்குக் குழந்தைகள் சிலர் மறுத்து அழுவதைக் காணலாம். அதற்குரிய காரணங்களை அறியாமல் பெற்றோரும், ஆசிரியரும் தண்டனை வழங்கும் போது கல்வியிலும், பாடசாலையிலும் அவர்கள் வெறுப்படை கின்றனர். ஆகவே குழந்தைகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் போது அவர்கள் திருப்தி அடைவர் என்பதை உணர்ந்து பெற்றோரும், ஆசிரியரும் அவர்களை அன்பாக வழிநடத்துதல் அவசியம் ஆகும்.

## முரண்பாடான நடத்தைகள்

பாடசாலையில் சிறுவர்கள் புதிய சூழலுடன் பொருத்தப்பாடு காணுமுன் பெற்றோர் ஆயினும் சரி, ஆசிரியரானாலும் சரி அவர்களிடம் ஒழுக்கக் கட்டுப்பாடு காண்பது தவறானதாகும். குழந்தைகள் படிப்படியாக ஒழுக்கத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டுமே தவிரக் கடுமையான ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பிள்ளைகள் மீது திணிப்பது அவர்களை முரண்பாடான நடத்தைக ளுக்கே இட்டுச் செல்லும் என்பதை மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதன் காரணமாக ஆரம்பத்தில் குழந்தை கோபத்திற்கான செயற்பாடுகள், பிடிவாதங்களை வெளிக்காட்டும். அது நீண்ட காலம் நிலைக்கும் போது விரோதமான உணர்வுகளை ஏற்படுத்திக் கொண்டு தாழ்வுச் சிக்கலுக்கு உள்ளாகும். இதனால் உணவில் வெறுப்பு, நித்திரைக் குறைவு ஆகியன ஏற்பட்டு குழந்தை உடல் ரீதியான வளர்ச்சியை அடைய முடியாமல் போகும். இவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு தொடர்பாகப் படிப்படியான முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்வது சிறந்தது.

## கல்வியில் நாட்டமின்மை

தரம் ஒன்றில் பிள்ளைகளுக்கான பாடத்திட்டம் அமைப்பதில் ஆசிரியர் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டும். குழந்தை கல்வி கற்கும் சூழல், குழந்தைகள் விரும்பக் கூடிய வகையில் அமைக்கப்பட வேண்டும். குழந்தை தான் கற்கும் வகுப்பறையை தன் வீட்டின் விரிவாக்கப்பட்ட ஒரு பகுதியாகவும் அங்கு கற்பிக்கும் ஆசிரியரை தன் தாய் போன்ற உணர்வோடும் இருப்பதாக உணரத்தக்கதாக ஆசிரியர் செயற்பாடு அமைய வேண்டும். இவற்றோடு தரம் ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரானவர் மிகுந்த பொறுமையும், சகிப்புத் தன்மையும், நிதானமும் மிகுந்த அன்புள்ளமும் கொண்டவராக இருப்பது மிகவும் அவசியமாகும். இவை இல்லாதவிடத்து பிள்ளைகள் மனத் தாக்கங்களுக்கு உள்ளாகிக் கல்வியில் நாட்டமின்மை ஏற்படும் என்பதை மனதில் கொண்டு ஒவ்வொரு பிள்ளையையும் சிறந்த முறையில் வழிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## ஏமாற்றமும், மனச்சோர்வும்

ஒவ்வொரு குழந்தையின் உணர்ச்சிகளுக்கும் மதிப்பளிப்பது மிகவும் அவசியம். ஒரு குழந்தை தான் பாடசாலையில் பெற்ற அனுபவங்களை வீட்டில் வந்து பெற்றோருக்குக் கூறும்போது அவற்றைக் கவனத்துடன்



கேட்பதும், தட்டிக் கொடுப்பதும், உற்சாகப்படுத்துவதும் பெற்றோர் கடமையாகும். குழந்தையின் முதல் ஆசிரியர் பெற்றோர் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் மறத்தல் கூடாது. அதே போன்று வகுப்பறையிலும் ஆசிரியர் குழந்தைகளின் மனம் கோணாமல் அவர்களின் எதிர்பார்ப்புக்கள், ஆசைகளுக்கு மதிப்பளித்து அவர்களை வழிநடத்த வேண்டும். அத்துடன் பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டி, கலைநிகழ்ச்சிகள் என்பவற்றில் குழந்தைகள் ஒவ்வொருவரதும் திறமைகளை வெளிக் கொணரும் வகையில் அவற்றில் பங்குபற்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் சந்தர்ப்பம் அளித்து அவர்களின் இயலுமைகளை வெளிக் கொணர வேண்டும். வகுப்பறையிலே ஆசிரியர் பிள்ளைகளின் முன்பாகவே இவர் "நன்றாகப் பாடுவார் ஆனால் நிகழ்ச்சிக்கேற்ற ஆடை தைக்க வழியில்லை" என்றும் "அவர் கறுப்பு முன்னுக்கு அழகான பிள்ளையை விடுவோம்" என்றும் கதைப்பது, பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகளில் வசதி குறைந்த பிள்ளைகள் தாம் புகைப்படம் பிடிக்கப்படாததையிட்டு மனம் வெதும்பி அழுவதையும் நாம் பல இடங்களிலும் காண முடிகின்றது. இவை எல்லாம் சின்னஞ்சிறு பிஞ்சு உள்ளங்களில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தி மனச் சோர்வையும், மனத்தாக்கங்களையும் உண்டாக்குகின்றன என்பதை ஆசிரியர் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

**பயத்தினால் தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கை இழத்தல்**

ஒவ்வொரு குழந்தையிடமும் இருக்கும் திறன்கள், ஆற்றல்களைக் கண்டு அவற்றை வளர்த்தெடுத்துப் பாராட்டி ஊக்குவிக்கும் அதே வேளையில் குழந்தையால் முடியாத ஒரு செயலைச் செய்ய வற்புறுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். "உனக்கு ஒன்றும் தெரியாது" என அடிக்கடி கூறும் போது பிள்ளை தன்னம்பிக்கையை இழந்துவிடும். அதே வேளை "கெட்டிக்காரன்" எனப் பாராட்டும் போது புதுத் தென்படையும் குழந்தைகளில் சிலர் தமது திறன்களைப் பயத்தினால் வெளிக்காட்டாது முடங்கிக் கொள்ளும் நிலையும் உண்டு. அளவு கடந்த பயம் காரணமாகத் தம் திறமைகளைப் பிள்ளைகள் மறக்கும் படியான சூழ்நிலைகளைத் தவிர்க்க வேண்டும். தரம் 1 இல் காலடி எடுத்து வைக்கும் குழந்தையை ஆசிரியர் கையில் பிரம்புடன் நின்று வரவேற்றால் முதற் கோணலே முற்றும் கோணலாகி விடும். அன்புடன் இன்முகம் காட்டும் ஆசிரியர் மாணவரை இலகுவில் கவர்ந்து விடுவார். கண்டிப்பான ஆசிரியரால் குழந்தைகள் கலக்கமடைய வாய்ப்புண்டு. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு தரம் 1இல் காலடி எடுத்து வைக்கும் சின்னஞ் சிறு பிஞ்சுள்ளம் கொண்ட குழந்தைகள் மீது பெற்றோரும், ஆசிரியரும் விழிப்புடன் அவதானமாகச் செயற்பட்டுக் குழந்தைகளின் மன உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களைத் தன்னம்பிக்கையும், ஆளுமையும் உள்ளவர்களாக வளர்ப்பது நன்று.



எனவே குழந்தைகள் மட்டில் கூடிய கவனம் செலுத்தி அவர்களிடம் ஏற்படக் கூடிய வெறுப்புணர்வு, முரண்பாடுகள், பயம், மனச்சோர்வு, தாழ்வு மனப்பான்மை, ஏமாற்றம் என்பவற்றை அவர்களிடம் இருந்து தகுந்த செயற்பாடுகள் மூலமாக நீக்கி உளத்தாக்கத்திலிருந்து பாதுகாத்து நிறைவான வளர்ச்சி காண உதவுவோம்.

## வாய்மை

மனிதன் வாழ்வதற்கான வழிகளிலே
மிகவும் சிறந்தது வாய்மையே
எந்த மையினால் எழுதினாலும் அதை
அழித்திட முடியும் - ஆனால்
எமது மனம் எழுதும் மையானது
விண்ணும் மண்ணும் உள்ளவரை
புகழ்சேர்க்குமே
அதுவே வாய்மையே!
வாய்மை என்பது உண்மை பேசுதலே
பொய்யின்றி வாழ்தல் இதற்கு ஊன்று கோலே
வாய்மையாலே நேர்மை வளரும்
இதற்கு இலக்கணம் வகுத்தவர் வள்ளுவரே
பூவுடன் சேர்ந்து மணம் பெறுவது போன்று
வாய்மையே சுமந்தோர் வாழ்வில் நலமே
மாறக் கூடியது பொய்மையே
என்றும் நிலைத்திருப்பது வாய்மையே.
வாய்மை தவறாக நடந்தாலே
ஏற்படுவது துன்ப வேதனைகளே
ஆனால் ஈற்றில் வெல்வது வாய்மையே
வாய்மையால் மேன்மையுற்றோர் பலர்
அதில் வெற்றிக்கு எடுத்துக்காட்டு
அரிச்சந்திரனின் கதையும் - அவர்
வழி நடந்த காந்தியடிகளுமே
வாய்மையின் மேன்மைக்கு தக்க சான்றும் இதுவே.
ஒருவனை நல்லவன் ஆக்குவதும்
பெருமை பெறச் செய்வதும்
ஒருவனது சொல்லிலும் செயலிலும்
வெளிப்படுவதும் வாய்மையே
என்றும் வாழ்வதும் வாய்மையே
அதனை உடையோரும் வாழ்வாரே
வாய்மையே மேன்மை தரும் என்பதையே
நாம் அனைவரு உணர்ந்து வாழ்வோமே.

வி.கீர்த்தனா
யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி.

# செவ்வியல் தமிழிலக்கியத்தில் கல்வி – 6


கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
முன்னைநாள் ஆய்வாளர்,
கக்சயின் பல்கலைக்கழகம்
ஜப்பான்.




அழிவில்லாத செல்வம் எனக் கல்வியை வள்ளுவர் சிறப்பித்துக் கூறியுள்ளார். கல்வி வெள்ளத்தால் அழியாது. வெந்தழலால் வேகாது. நாம் வாழுங்காலத்தில் நாம் செல்லுந் தேசமெல்லாம் சிறப்பைத் தருவது. ஒரு மன்னனையும் கல்வியாளனையும் சீர்தூக்கிப் பார்த்தால் மன்னனைக் காட்டிலும் கல்வி யறிவுடையயோனே சிறப்புடையவனாவான். ஏனெனில் மன்னனுக்குத் தன்தேசத்தில் மட்டுமே சிறப்புக் கிடைக்கும். ஆனால் கற்றவருக்குத் தன்தேசமன்றிச் சென்ற இடமெல்லாமே சிறப்புக் கிடைக்கும்.

வள்ளுவர் தமது நூலிலே கல்வி என்னும் அதிகாரத்தை ஆள்பவர், இயல்பு கூறும் இறை மாட்சி என்னும் அதிகாரத்தின் பின்னேதான் அமைத்துள்ளார். பரிமேலழகர் இவ்வைப்பு முறையைத் தமது உரையிலே வருமாறு விளக்கியுள்ளார்.

**''அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூற்களைக் கற்றல். அவையாவன: அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலம் என்னும் அறிவுடையான் ஆயக்கால் தன்னுயிர்க்கே அன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி இஃது அரசியலுள் வைக்கப் பட்டதாயினும் யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார்.''**

எனவே கல்வியின் பயன்பற்றி நாம் எண்ணும் போது வள்ளுவரது குறட்பாக்களில் கூறப்பட்ட கருத்துக்களை ஆழமாக நோக்க வேண்டியுள்ளது. கற்கவேண்டிய நூல்களைக் குற்றமறக்கற்று அங்ஙனம் கற்றதற்கு ஏற்றபடி வாழவேண்டும் என்பதே வள்ளுவருடைய உறுதியான கருத்தாகும். கல்வியை எண் பற்றிய கல்வி, எழுத்துப் பற்றிய கல்வி என இரண்டாக வகுத்துள்ளார். இரண்டையும் இரு கலைகளாகவே வள்ளுவர் கொண்டுள்ளார். தற்காலத்தில் எண்பற்றிய கல்வியே உயர்வானதாகக் கருதப்படுகிறது. ஆனால் வள்ளுவர் எண்ணும் எழுத்தும் சமமெமன்பதை ஓர் உவமை மூலம் விளக்கியுள்ளார். எண்ணும் எழுத்தும் மனிதருடைய இரண்டு கண்கள் போன்றவை யெனக் கூறுகிறார். அவ்வாறு இரண்டையும் கல்லாத வருடைய கண்களை இரண்டு புண் எனக் கூறியுள்ளார்.

**"கண் உடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு புண் உடையார் கல்லா தவர்" (குறள் : 393)**

பரிமேலழகர் கற்றவரை தேயம் இடையிட்ட வற்றையும் காலம் இடையிட்டவற்றையும் காணும் ஞானம் உடைய கண்களைப் பெற்றவர் எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். கற்றவருடைய கண்களிலே ஒரு தனித்துவம் இருக்கும். எனவே படியாதவர்களுடைய கண்கள் ஊனக்கண்களாகவே இருக்கும். பொருள் நூல் களையும் கருவி நூல்களையும் கற்றவர் உயர்வையும், கல்லாதவருடைய இழிவையும் காட்ட ஞானக் கண்ணையும் ஊனக் கண்ணையும் காட்டியுள்ளார். எனவே கற்றவரை உயர்ந்தவராகவும் கல்லாதவரை இழிவாகவும் கருதும் உலகவழக் கொன்றும் தோன்றி நிலை பெற்றுள்ளது.

கற்றவருடைய உச்சமான சிறப்பு எல்லா நாட்டிலும் சிறப்புப்பெறும் தகுதிப்பாடாகும். எல்லா நாடுகளிலும் தன்னாடு போலச் சிறப்புடன் வாழக் கூடுமாகையால் கல்லாமல் ஒருவன் இருப்பது நன்று அல்ல என வள்ளுவர் வற்புறுத்தியுள்ளார். ஒருவன் ஒரு பிறவியிலே பெற்ற கல்வி ஏழு பிறப்புக்கும் உதவும் தன்மையது. இதுவே கல்வியின் மிக உச்சமான பயனாகும். கற்றறிந்தவருடைய சிறப்பான ஒரு பண்பினைக் கீழ்வரும் குறள் எடுத்துரைத்துள்ளது.

**"தாம் இன்புறுவது உலகு இன் புறக்கண்டு காமுறுவர் கற்று அறிந்தார்." (குறள் 399)**

தாம் இன்பத்தைப் பெறுவதற்குக் காரணமான கல்விக்கு உலகம் மகிழ்வதைக் கண்ட கற்றறிந்தோர் மேன்மேலும் அக்கல்வியை விரும்பிக் கற்பர். வள்ளுவர், கல்வி உடல் உறுப்புக்களைப் பண்படுத்துவது மட்டுமன்றி உள்ளத்தை நன்கு பண்படுத்தும் என்கிறார். அதனால் கல்வியைக் **"கேடுஇல் விழுச் செல்வம்"** எனக் கூறியுள்ளார். ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம் அவன் கற்ற கல்வியே. ஏனைய பொருட்செல்வம் நிலையற்றது.


**தாம் இன்பத்தைப் பெறுவதற்குக் காரணமான கல்விக்கு உலகம் மகிழ்வதைக் கண்ட கற்றறிந்தோர் மேன்மேலும் அக்கல்வியை விரும்பிக் கற்பர். வள்ளுவர், கல்வி உடல் உறுப்புக்களைப் பண்படுத்துவது மட்டுமன்றி உள்ளத்தை நன்கு பண்படுத்தும் என்கிறார்.**


''கல்லாமை'' என ஓர் அதிகாரத்தை, அடுத்து வள்ளுவர் அமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஒரு பொருளின் நன்மையையும் தீமையையும் எடுத்தியம்பும் முறைமையை வள்ளுவர் பின்பற்றியுள்ளார். அதனால் கல்லாமை என்னும் பகுதியில் கற்றலைச் செய்யாமையால் வரும் நிலைமைகளை விளக்கியுள்ளார். இப்பண்பினை விதிமுகத்தாலும் எதிர்மறை முகத்தாலும் விளக்கல் என உரையாசிரியர் கூறுகிறார். கல்லாமையால் வரும் தீமைகளை வள்ளுவர் வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார். படிப்பறிவில்லாதவருடைய நிலையைத் தெளிவுபடுத்த இரண்டு உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

1. கல்லாதவன் கற்றவர் சபையில் ஒன்றைச் சொல்ல விரும்புவது முலை இரண்டும் இல்லாதவள் பெண்மையை விரும்பினாற் போன்றது.
2. ஒருவன் அறிவு பெறுவதற்காக நூல்களைக் கற்காமல் கற்றவருடைய சபையிலே ஒன்றைச் சொல்வது அரங்கு இல்லாமல் வட்டாடியதைப் போன்றது.

எனவே கற்றவர் சபையில், ஒன்றையும் பேசாதிருந்தால் கல்லாதவரும் நல்லவரே என எடுத்தியம்பியுள்ளார். கல்லாதவனை அவன் பேச்சுநிலையே காட்டிக் கொடுத்துவிடும். கல்லாதவர் விளை நிலமல்லாத களர் நிலத்தையே ஒத்தவராவர். பல நூல்களைக் கற்று ஆராய்ந்த அறிவில்லாதவனுடைய புற அழகு மண்பாவையின் அழகு போன்றது. கல்லாதவர்களிடம் சேர்ந்த செல்வம் கற்றவரிடம் உள்ள வறுமையைக் காட்டிலும் துன்பத்தைச் செய்யும். மேற்குலத்துப் பிறந்தவராக இருந்தாலும் கல்லாதிருப்பின் பெருமையடையார். கீழ்க்குலத்தில் பிறந்தாலும் கல்வியுடையவர் பெருமையுடையவராவர். கற்றவர்களே மக்களாவர். கல்லாதவர் விலங்கைப் போன்றவரே. வள்ளுவர் கல்விக்குக் கொடுத்த சிறப்பு பிற்கால இலக்கியங்களிலும் நன்கு பேசப்பட்டுள்ளது.

ஆத்திசூடியை இயற்றிய ஔவையார் **"எண் எழுத்து இகழேல்"** எனப் பாடியுள்ளார். கல்வி கற்க வேண்டிய காலத்தை **''இளமையிற் கல்''** என வலியுறுத்தியுள்ளார். செவ்வியல் இலக்கியமான திருக்குறளிலே முதலில் சொல்லப்பட்ட கல்வி பற்றிய கருத்துக்கள், பிற்காலப் புலவர்கள் ஆக்கங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் ஔவையார் **"நூல் பல கல்"** என அறிவுரை செய்கின்றார்.

வெற்றிவேற்கையை இயற்றிய அதிவீரராம பாண்டியர் **"கல்விக்கழகு கசடற மொழிதல்"** எனக் கூறியுள்ளார். வள்ளுவர் **"கற்கக் கசடற"** எனக் கூறியதை இவர் காலத்துக்கேற்ற வகையிலும் இளைய தலைமுறைக்கு ஏற்ற நிலையிலும் விளக்கிக் கூறியுள்ளார். பல்வேறு அழகுகளைப் பற்றிப் பேசும்போது கல்வியின் அழகைத் தனித்துவமாகக் கூறியுள்ளார். கல்வியறிவு அற்றவர் பற்றிக் கூறும் போது,

**"கல்லா ஒருவன் குல நலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதர் ஆகுமே"** (குறள்:36)

என்கிறார். நெல்லினுள் வேண்டாத பதர் இருப்பது போலவே சமூகத்தில் படியாதவர்கள் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். நல்ல நெல்லினுள்ளே பதர் இருப்பதால் நெல்லைப் பயன்படுத்துவோருக்குச் சிக்கல் ஏற்படும். அதுபோலச் சமூகத்திலே கல்வியறிவற்றவர் இருப்பின் பல தொல்லைகள் ஏற்படும் என்கிறார்.

உலகநாத பண்டிதர் இயற்றிய உலகநீதி **''ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்''** எனக் கூறுகிறது. படிப்பு இல்லாமல் இருப்பதால் ஏற்படும் விளைவுகள் பலவாகும். இந்த விளைவினை வாக்குண்டாம் நூலில் ஔவையார் பாடிய பாடலொன்று மிகச்சிறப்பாக விளக்கியுள்ளது.

**"கான மயில் ஆடக் கண்டு இருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து - தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி"** (14)

காட்டிலே மயில் ஆடுவதைக் கண்ட வான்கோழி தன்னுடைய பொல்லாத சிறகையும் விரித்து ஆடுகிறது. மயிலின் ஆட்டத்தில் இருந்த இயற்கையான அழகு கானமயிலின் ஆட்டத்தில் இல்லை. கல்லாத ஒருவன் கவிதை பாடினாலும் இப்படித்தானிருக்கும்.

**''பிச்சை புகினும் கற்கை நன்றே''** என உரைக்கும் மரபு எம்மிடம் உண்டு. இக் கருத்துப் பண்டைய இலக்கியமான புறநானூற்றுப் பாடலில் முன்னரே பதிவு செய்யப்பட்டுள்ளது.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே''**

(புறநானூறு 183 : 1 - 2)

குமரகுருபர சுவாமிகள் பாடிய நீதிநெறி விளக்கம் **"கல்வியே கற்புடைப் பெண்டிர்''** எனக் குறிப்பிடுகிறது. கல்விப் பேற்றின் சிறப்பை மேலும் ஒரு பாடல் விளக்கமாகச் சொல்கிறது.

**"கற்றார்க்குக் கல்வி நலனே கலன் அல்லால்
மற்று ஓர் அணிகலம் வேண்டாவாம்- முற்ற
முழு மணிப் பூணுக்குப் பூண் வேண்டா யாரோ
அழகுக்கு அழகு செய்வார்."** (12)

கற்றவர்களுக்கு கல்வி நலமே சிறந்த அணிகலமாக விளங்கும். அதனால் அவர்கள் பிறிதொரு அணிகலனை அணிய வேண்டிய தேவை இல்லை. மணிப்பூண் கொண்ட கைத்தடிக்கு மேலும் ஒரு பூண்போட வேண்டிய தேவை இல்லை. அழகுக்கு மேலும் யாரும் அழகு செய்யமாட்டார்கள். இப்பாடலின் கருத்து இக்காலத்தில் பெரிதும் உணரப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. கல்வியின் சிறப்பைவிட ஆடம்பரத்தையே பெரிதாக எண்ணுவோர் பலருளர். முதுமையை இளமையாக்கும் முயற்சியில் தலைமயிருக்கு மைபூசுவோர் தொகை இன்று பெருகிவருகிறது. கற்றவர்களே பலர் இத்தகைய நடைமுறையை மேற்கொள்கின்றனர். அவர்கள் கற்ற கல்வியைக் கசடு அறக் கல்லாதவர் என்றே நினைக்கத் தோன்றுகிறது. எனவே **"கற்றபடி நிற்க"** என வள்ளுவர் கூறிய கூற்றை நடைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. அதனையே இன்றைய இளந்தலைமுறையும் எதிர்பார்த்து நிற்கிறது.

## தமிழருவி பற்றிய உதயன் பத்திரிகையின் விமர்சனம்

தமிழருவி கலை இலக்கிய சமூக விஞ்ஞான மாதாந்த சஞ்சிகையின் அருவி 5 வெளியாகியுள்ளது.

யாழ். பொது நூலகத்தின் கம்பீரமான தோற்றத்தை அட்டைப் படமாகக் கொண்டு இந்த இதழ் இம்முறை மிடுக்குடன் வெளி வந்துள்ளமை பார்ப்போர் மனதைக் கவர்கின்றது.

கலாநிதிப்பட்டம் பெற்ற ஆறு.திருமுருகனுக்கான கௌரவிப்புடன் புலமைப் பரிசில் மாணவரின் நெருக்கடி, தமிழிலக்கியத்தில் பெண்கள், சிறுவர் உளவியல், புலவர் பார்வதிநாதசிவத்தின் நேர்காணல், சங்க காலத்தில் ஆடற்கலை, சொர்க்கத்தில் போன்ற பல்வேறு புதிய ஆக்கங்களைத் தாங்கி இது வெளி வந்துள்ளது.

அது மட்டுமன்றி மருத்துவம், இலக்கியம், மக்கள் வாழ்வியல், விவசாயம் போன்ற விடயங்களையும் தாங்கி பெறுமதிமிக்க மலராக இது வெளி வந்துள்ளது.

இந்த இதழில் சமயக் கருத்துகளுக்கும் இடம் கொடுக்கப்பட்டுள்ளமை இதன் பூரணத்துவத்தைக் காட்டுகிறது.

**நன்றி, உதயன்**




இறைவன் படைத்த படர் பூமியிலே தொடர் அழகுடன் இடர் ஏதும் இன்றி இன்பம் கொழிக்க செந்நெல்லாக வாழும் மக்கள் மத்தியில் இன்று பல வெகுசன தொடர்பு சாதனங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான வெகுசனத் தொடர்பு சாதனங்களுள் மிகவும் சிறப்பானதும் மூப்பானதும் பயன் தரக்கூடியதுமாக செய்தித்தாள் விளங்குகின்றது. இவ் ஒரே சிறப்பு மலரே அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளதோடு உலகின் மூலைமுடுக்கு எங்கிலும் உள்ள மக்களையும் மக்களின் அன்றாட வாழ்க்கை, அன்றாடப் பிரச்சினைகள் முதலானவற்றை உலகளாவிய ரீதியில் உடனுக்குடன் வெளிப்படுத்தும் ஒரு சிறப்பிதழே செய்தித்தாள் என உறுதியாகக் கூறமுடியும்.

வானொலி, தொலைக்காட்சி போன்றன இருபதாம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெற்றனவாகும். ஆனால் செய்தித்தாள் அதற்கெல்லாம் முந்தியதாகவே தோற்றம் பெற்றுள்ளது என்பது கூறப்பட வேண்டியதும் குறிப்பிடப்பட வேண்டியதும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதுமான உண்மையாகும். அதோடு வானொலி தொலைக்காட்சி போன்றன பணம் படைத்தோரும் செல்வந்தர்களும் கைக்கொள்ளும் சாதனங்களாகும். ஆனால் செய்தித்தாள் இவ்வாறான தொன்றல்ல என்பது கண்கூடு காணும் உண்மையே. அதோடு செய்தித்தாள் விலை குறைவானதும் ஏழை, எளியவர்களும் எளிதில் பயன் பெறக் கூடியதுமான ஒன்றாகும். இதனாலேயே செய்தித்தாள் பட்டித் தொட்டி எங்கும் பரந்துபட்டுள்ளமையைக் காணலாம்.

வானொலி தொலைக்காட்சி போன்றவற்றின் காட்சிகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பார்க்க கேட்க முடியும். அவ்வாறு பார்த்தல் கேட்டல் மூலம் பெறும் நிகழ்வுகள், செய்திகள் என்பனவற்றின் ஒரு பகுதியே மனதிற் பதிந்து நிற்கும். மீள்பார்வைக்காக விரும்பினும் எளிதில் பார்வையிட முடியாது. ஆனால் பத்திரிகை இவ்வாறான இயல்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டுப் பயன் தரும் ஒன்றாகும். செய்தித்தாள் விரும்பிய நேரத்திலும் விளங்காத போது மீள் வாசிப்பின் மூலமும் விடயங்கள் யாவையும் கிரகித்துக் கொள்ள முடியும். இதற்கான ஒரு சிறப்பு எழுத்து வடிவில் காணப்படுவதும் ஆகும்.

வானொலி தொலைக்காட்சி போன்றவற்றின் காட்சிகளை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பார்க்க, கேட்க முடியும். அவ்வாறு பார்த்தல் கேட்டல் மூலம் பெறும் நிகழ்வுகள், செய்திகள் என்பனவற்றின் ஒரு பகுதியே மனதிற் பதிந்து நிற்கும். மீள்பார்வைக்காக விரும்பினும் எளிதில் பார்வையிட முடியாது. ஆனால் பத்திரிகை இவ்வாறான இயல்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டுப் பயன் தரும் ஒன்றாகும். செய்தித்தாளை விரும்பிய நேரத்திலும் விளங்காத போது மீள் வாசிப்பின் மூலமும் விடயங்கள் யாவையும் கிரகித்துக் கொள்ள முடியும்.



அதோடு செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி போலன்றி விரிவாக செய்திகளை வெளியிடுவதால் செய்திகளை விளக்கமாகவும் அறிந்து கொள்ள முடியும் என்பதும் செய்தித்தாளின் சிறப்புமிகு பண்பாகும்.

செய்தித்தாள்கள் சுதேச அரசியல், சமூகம், கலைகள், கலாசாரம், ஆக்கங்கள், அழிவுகள், விளையாட்டுக்கள் முதலியவற்றை மாத்திரம் பிரதி நிதித்துவப்படுத்துவதொன்று அல்ல. விதேசிகளினுடைய இது போன்ற விடயங்களையும் மக்கள் மத்தியில் வெளிப்படுத்துகின்றது. இவ்வாறான செய்திகளை தினந்தோறும் பிரசுரிக்கும் செய்தித் தாள்களை வாசிப்பதன் மூலம் ஒவ்வொருவரும் தமது அறிவை விருத்தி செய்து கொள்ள முடிவதோடு இவ்வாசிப்பு மாணவர்களிடையில் பொது அறிவை விரிவுபடுத்தும் ஒரு உந்து சக்தியாகவும் அமைகின்றது. அதோடு உலகச் செய்திகளை அறிந்து கொள்வதன் மூலம் மக்கள் கிணற்றுத் தவளையாக வாழும் நிலமையைத் தவிர்த்துக் கொள்ள முடிவதும் சிறப்பானதே.

செய்தித்தாள்கள் என்பன செய்திகளை மாத்திரம் கொண்டு வருவனவன்று விஞ்ஞானம், சமயம், இலக்கியம், விவசாயம் போன்ற அரிய கருத்துக்களை வெளியிடுகின்றன. அதோடு மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சிலபல போட்டிகளையும் தினம்தோறும் அல்லது வாரந்தோறும் நடாத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதே. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் பலதரப்பட்ட மாந்தர்களையும் உயர்ந்த ஸ்தானத்திற்கு இட்டுச் செல்லும் சிறந்த ஏணி என்றும் கூறலாம். அதோடு பாடசாலை மாணவர்களுக்கு இலக்கியக் கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள் முதலியவற்றை வழங்குவதன் மூலம் எல்லோர் மனதிலும் இடம் பிடிப்பதோடு புதுப்பொலிவு மிக்க உலகினையே ஆக்கும் வல்லமை மிக்கதே செய்தித்தாள் என்று கூறலாம். இவ்வாறு ஒவ்வொரு துறை சார்ந்தவர்களுக்கும் சிறப்பான அறிவை வழங்குகின்றதும் செய்தித்தாளே எனலாம்.

ஒவ்வொரு நாடும் தாம் ஜனநாயக நாடு என்பதை அடையாளப்படுத்த வேண்டுமெனில் அங்கு ஊடக சுதந்திரம் காணப்படுதல் அவசியமாகும். அங்கு காணப்படும் ஊடகங்களுள் சிறப்பும் மதிப்பும் மிக்க ஊடகமாக செய்தித்தாளே விளங்குகின்றது. அரசு, நாட்டில் சர்வதிகாரப் போக்கில் செயற்படுமாயினும் சரி, ஜனநாயக ரீதியில் செயற் படுமாயினும் சரி எந்தவொரு விடயத்தையும் தெளிவாக மக்களுக்குப் புரியும் வகையில் இருக்குமிடம் நோக்கிச் சென்று புத்தறிவு புகட்டுவன செய்தித் தாள்களே என்பதில் ஐயம்

இல்லை. எனவே நாடு நலம் பெறவும் இச் செய்தித்தாள் வழிவகுக்கின்றது.

செய்தித்தாள்களின் இரண்டு கண்கள் போன்று விளங்குவன நேர்மையும், சுதந்திரமும் ஆகும். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போலவே இவை செய்தித்தாள்களுக்கு அத்தியாவசியமானவை யாகின்றன. குறித்தவொரு குழுவிற்கோ அல்லது ஒர் இனத்திற்கோ அல்லது ஒரு கட்சிக்கோ அல்லது அரசிற்கோ அடிபணிந்து செயற்படுவதும் இவற்றிற்கு சார்பாக இருப்பதும் அழகற்றதான ஒரு செயற்பாடாகவே விளங்கும். சுதந்திரமான செயற்பாடே செய்தித்தாளின் உயிர்நாடி ஆகும். அதோடு செய்தித்தாள்கள் கற்பனைக் கூட்டுக்கள் ஏதும் இன்றி இருப்பதும் நேர்மையுடன் செயற்படுவதும் அனைவராலும் வரவேற்கத் தகு விடயமாகும். இவ்வாறு நேர்மையுடனும் சுதந்திரத் துடனும் செயல்புரியும் செய்தித்தாள் களையே அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பது உறுதியான விடயமாகும்.

இவ்வாறான செய்தித்தாள்கள் செய்தித் தொடர்பு சாதனங்களிலேயே சிறப்பிடம் பெறுகின்றன. இவ்வாறான செய்தித்தாள்கள் இன்று வரை மக்களுக்கு பலகோடி நன்மைகளே செய்து வருகின்றதென்பது சிறப்பே. அதோடு இன்றைய உலக மக்கள் குரலை எதிரொலிப்பதும் செய்தித்தாள்களே அதோடு மக்களோடும் மாணவர்களோடும் இன்றைய மனித வாழ்க்கையோடும் பின்னிப்பிணைந்த ஒன்றாகச் செயற்பட்டு வருகின்றவையும். செய்தித்தாள்களே ஆகும்.

**வி.சுலக்சன்**
யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி.
2012 A/L கலைப்பிரிவு.

# குடியை நொறுக்கும் குண்டு



- ச.வே.பஞ்சாட்சரம், கனடா -

நேரம் நள்ளிரவு. காட்டை யடுத்த வயல் வெளி நடுவில், விழுதுகள் ஊன்றி நின்ற ஆலின் கீழ் அந்த இடம் புலிகள், கரடிகளின் நடமாட்டம் அற்றதென்பதால் வழமை போல் நான்கு நரிகள் நிம்மதியாகப்படுத்திருந்தன. தாய் நரி கேட்டது. "பிள்ளைகள்! இரண்டு பேருக்கும் இன்று இரை வயிறாரக் கிடைத்ததா?" இரண்டு மகன்களும் பதிலளித்தன. "தூக்க நோயினால் செத்த இரண்டு கோழிக்குஞ்சுகள் தானம்மா இன்று எங்கள் சாப்பாடு! உங்கள் இரண்டு பேர் பாடும் எப்படி அம்மா?" தாய் நரியை முந்திக் கொண்டு தந்தை நரி பேசியது. "எங்களுக்கு ஒரு மான் குட்டியின் குறை இறைச்சி தான் கிடைத்தது. அரைகுறை இரைதான்" திகைப் படைந்த தாய்நரி தன் கணவனைத் தனி இடத்திறகு அழைத்துச் சென்று காதுக்குள் பேசியது. " ஏனப்பா இப்பிடிப் பொய் சொன்னீர்கள்? இன்று நாமிருவரும் வயிறு நிறையச் சாப்பிட்டு மிஞ்சின மானிறைச்சியை நாளை தின்ன என்று மறைத்து வைத்து வந்து, பிள்ளை களுக்கு இப்படிப் பொய் சொன்னால், அது தற்செயலாக அவர்களுக்கு வெளிப்பட்டால், அதன் பின் எங்களை நம்பார்கள். அவர்களும் எங்களுக்குப் பொய் சொல்லத் தொடங்கி விடுவார்கள். ஆளை ஆள் சந்தேகப்பட்டுக் குடும்பமே குலைந்தழிய நேர்ந்து விடுமே?"

இதைக்கேட்ட கணவன் நரி கூக்குரல் போடலா யிற்று "என்னடி சொல்கிறாய்? எங்கள் நரிக்குலத்தின் பலமும், பாதுகாப்பும் என்றால் பொய்யும் தந்திரமும் குள்ளத்தனமும் தான். இந்தக் குணங்களைக் கை விட்டால் தான் பசியாலும், மற்ற மிருகங்களாலும் நரிக் குலம் நாசமாகும். இதை விளங்கிக் கொண்டும் குடிநாசத்துக்கு வழிகாட்டுகிறாயா? நீ ஆபத்தானவள், இனி ஒரு கணமும் நீ எங்களோடு இருக்கக் கூடாது உடனே ஓடிவிடு" அதிர்ந்து கலங்கிய தாய் நரி பெரு மூச்சோடு தனியளாகத் தள்ளாடிச் சென்று மறைந்தது. அம்மா குசுகுசுத்தது ஒன்றும் குட்டிகளுக்குக் கேட்டி ருக்கவில்லை. அப்பா கூக்குரலிட்டது அச்சொட்டாக அவற்றுக்குக் கேட்டிருந்தது. அப்பா வேறு யாருக்கோ பொய் சொன்னதைத்தான் அம்மா மக்கு கண்டித்தி ருக்கிறது. அப்பா சொன்னதும் செய்ததும் தான் சரி என்று தம்முள் அவை பேசிக்கொண்டன.

மறுநாள் காலை அரைப்பசியோடு நித்திரை விட்டெழுந்த நரிக்குட்டிகள், உச்ச வெய்யிலிலும் ஏமாற்றத்தோடு இரைதேடி அலைந்தன. ஒரு நரிக் குட்டிக்கு ஒரு பற்றைக்குள் பொந்து ஒன்றினுள் ஒரு முயலின் முதுகு தெரிந்தது. லபக்கென்று முயலைக் கௌவி இழுத்த நரி அதை நிலத்தில் அறைந்தது. முயல் எழுப்பிய மரண ஓலங் கேட்டு அடுத்த ஓடைக்குள் நின்ற மற்றக்குட்டி நரி "என்ன சத்தம்? ஏதாவது கிடைத்ததோ?" என்று கத்திற்று "இல்லை இல்லை" என்று பொய் சொல்லிக் கொண்டே மளமள வென்று முயலைப் பிடுங்கித்தின்னத் தொடங்கியது அந்த நரி. அதை நம்ப முடியாமல் மெல்லப் பதுங்கி வந்து எட்டிப் பார்த்த மற்ற நரி திடுக்கிட்டுச் சினந்து "என்ன? இவ்வளவு காலமும் என்ன இரை கிடைத்தாலும் இருவரும் பங்கிட்டே சாப்பிட்டோம்! இன்று எனக்குப் பொய் சொல்லி நீ மட்டும் சாப்பிடப் பார்க்கிறாயா?" என்று கேட்டுக் கொண்டு தானும் போய் இரையில் வாயை வைத்தது. "இராத்திரி அப்பா சொன்னவர் தானே நாங்கள் பொய் சொல்கிறது குற்றமல்ல என்று, அதோடு நீ, நான் இப்பொழுது வளர்ந்து விட்டோம். இன்னும் எதற்குப் பங்கு? இந்த இரையை நான் தான் கண்டு பிடித்தேன். நான் தான் கொன்றேன் நான் தான் தின்பேன். நீ போ" என்று முதல் நரி மற்ற நரி மேல் பாய்ந்து அதைத் தள்ளி வீழ்த்தியது. தொடர்ந்து இரண்டு உடன் பிறப்புகளும் ஒன்றையொன்று ஆவேசமாக நீண்ட நேரமாகக் கடித்துக் குதறின.

முடிவில் முயலின் உடலத் துக்கு அருகில் இரண்டு குட்டி நரிப் பிணங் களும் குருதி வழியக் கிடந்தன.



# தூரிகையின் தடயம்

"ஒரு கலைஞன் மட்டுமே இறந்த பின்பும் இவ்வுலகில் வாழ்கின்றான்." அறிஞர்கள் கூறிய இக்கூற்று இன்று ஒளிவட்டமான உண்மையாக உருமாறி யுள்ளது. உண்மையில் கலைகளால் தான் இவ் உலகம் ஆளப்படுகின்றது. இன்றும் ஓவியக் கலை ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது. ஓவியம் என்று நாம் சாதாரணமாக கூறுகின்றோம் ஆனால் அதனுள் சாதனையான உண்மைகள் ஒளிந்திருப்பதை யாரும் அறிவதில்லை. ஒரு ஓவியக் கலைஞனின் படைப்பிற்குள் அவனது உயிரும் உணர்வும் இரண்டறக் கலந்திருக்கும். ஒரு ஓவியக் கலைஞனின் சிந்தனையானது அவன் சிரத்திற்கும் மேலானது. ஒரு கோட்டினை அவன் வரையும் போது அதில் அவனது உணர்வு தென்படும். அது மட்டுமல்லாது ஒவ்வொரு கோட்டிற்கும் ஒவ்வொரு உணர்வு காணப்படும். இந்த ஓவியக் கலையானது இன்று நேற்று உருவாகியதில்லை. இக்கலையானது வரலாற்றில் பழமையானது. அதாவது ஆதி கால குகைகளில் இருந்தே இக்கலை உயிர் பெற்று வந்துள்ளது. அக் காலத்திலும் ஓவியக் கலையானது சிறப்புற விளங்கியமைக்கு மேலைநாட்டுக் குகை ஓவியங்களும் எமது நாட்டுக் குகை ஓவியங்களும் சான்று பகர்கின்றன.

இன்றைய கால கட்டத்தில் ஓவியக்கலை வளர்ச்சி பெற முடியாத அளவுக்குச் சிறப்பாக உருவாகி வருகின்றது. ஒரு குழந்தை முதல் முதல் சுயமாக வரைவது கோடுகளை. கிறுக்கியும் "அ" என்ற எழுத்தை மாம்பழம் போல எழுதுவார்கள். எந்தக் குழந்தை யானாலும் முதல் வரைவது ஓவியம் தான். ஆரம்ப வயதிலே ஓவியக்கலை உயிர் பெறுவதை நாம் காண்கின்றோம். ஓவியம் வரையும் கலைஞன் தான் தனது சிந்தனையைக் கசக்கிப் பிழிந்து புதிய எண்ணங்களையும் புதிய படைப்புக்களையும் உருவாக்கித் தனது சொல்ல முடியாத துன்பங்களைக்கூட ஒரு உணர்வாக வெளிக் காட்டுகின்றான். இவை இலகுவாக மக்களை சென்றடையும் என்பதில் ஐயம் இல்லை. நடனத்தில் இல்லாத உணர்வைக்கூடத் தெளிவாக ஓவியத்தில் காட்ட முடியும் என்பது தெளிவான உண்மை. ஒரு ஓவியத்தை வைத்து ஓவியம் வரைந்த வருடைய மனத்தின் ஆக்கங்களையும் அவருடைய வாழ்வையும் மிக எளிமையாக அறிய முடிகின்றது. இத்தகைய பண்பை வேறு எக்கலையிலும் காண முடியாது.



ஓவியக் கலை யானது யதார்த்தம், நவீனம் என இரண்டாகக் காணப்பட்டாலும் யதார்த்தத்தைக் கூட நவீனமாகக் காட்டுகின்றார்கள். ஓவியக் கலைஞர்களின் இத்தகைய பண்பு கலையின் ஒற்றுமைக்கும் புதிய பரிணாம வளர்ச்சிக்கும் வித்திடுகின்றது. வர்ணப் பயன்பாடானது ஓவியத்தின் இன்னொரு முன்னேற்ற கரமான பண்பிய லாகும்.



ஒளியின் செறிவு, இருள், ஒளி என்பவற்றை வைத்து ஓவியங்கள் வரையப்பட்டு இவை வர்ணத்தி னூடாக உயிர் பெறுகின்றன. உண்மையில் இயந்திரத் தினால் பெற முடியாத வர்ணக் கலவையை ஓவியக் கலைஞன் கலந்து பயன்படுத்துகின்றான். உண்மையில் கலைஞனின் சிந்தனையினை அவன் ஒரு திசையை நோக்கி நகர்த்துவதை இதனூடாக அறிய முடிகின்றது. நேரடியாகவோ தூரிகையினூடாகவோ வர்ணத்தைக் கையாண்டு ஓவியம் வரையும் போது இங்கு வெளியைப் பூரணப் படுத்தி ஓவியத்தின் தன்மையை வர்ணம் முன்கொண்டு வருகின்றது. ஆனால் ஒளியின் தன்மை தான் ஓவியத்திற்கு உயிர் கொடுக்கும் என்பதைச் சிந்தனையில் நிறுத்தி ஓவியக் கலைஞன் படைப்பை உருவாக்குகின்றான். இங்கு கைமட்டுமல்ல அவனது சிந்தனையும் செயலாற்றுகின்றதைக் காணலாம்.

யாழ்ப்பாண மண்ணின் ஓவியக் கலை பற்றி நாம் பார்வையைத் திருப்பும்போது முன்பைவிடப் பல மடங்கு முன்நிலை வகிக்கின்றது. பல கலைஞர்கள் உருவாகியும் இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் ஒரு துன்பமான விடயம் என்னவெனின் கலைஞர்கள் உருவாகினாலும் ஓவியக் கலையில் ஈடுபடும் இரசனை கொண்ட மக்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணும் அளவிற்கே உள்ளது. பண்பாட்டுக் கலைக்கும் பயன்தரு கலைக்கும் பெயர் போன யாழ் மண்ணின் மைந்தர்கள் எங்கே? என்பதற்கு விடை பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இருப்பினும் கலைகளை அழியாது பாதுகாத்து வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் பங்கு அளப்பரியது. இராமநாதனின் பெயரில் ஆரம்பமான விதையானது இன்று கலை விருட்சமாக உருவாகிப் பலருக்கு வாழ்வளித்த வரப்பிரசாதம் எனது நுண்கலைத் துறை என பெருமையோடு நான் சொல்வதற்கு ஒரு வரமாக அமைந்துள்ளது. இங்கு சித்திரமும் வடிவமைப்பும் துறையில் நாங்கள் சிங்களக் கலைஞர்களின் அறிமுகத்திற்கும் அவர்களின் கற்பித்தலின் கீழ் நாங்கள் கற்பதும் யாழ்ப்பாணத்து மூத்த கலைஞர்களின் வழிகாட்டலில் நாம் தடம் பதிப்பதும் எமக்கு கிடைத்த வரமாக நாம் கருதுகிறோம். ஓவியக் கலையைச் சாதாரணமான கலையாக யாரும் கூறிவிட முடியாது. உணர்வின் ததும்பலும் உயிரூட்டத்தின் வெளிப்பாடும் ஒரு சிந்தனையாளனின் உருவமும் பெற்று வெளி

வருவதாகும். இக்கலை கிடைத்தற்கு அரியது எனக் கூறுவதில் பிழையன்று.

ஓவியக் கலையின் உயிரோட்டம் யாழ்ப்பாணத்தில் மேலும் அருவி நீராக ஊற்றெடுத்து ஓட வேண்டும். இதோ எனது எண்ணமும், ஆதங்கமும் கலைஞனின் பெறுமதிகள் பொக்கிச மாக பாதுகாக்கப்பட்டு வருங்கால சமூகத்திற்கு கையளிக்கும் பண்பை அனைவரும் வளர்த்துக் கொள்வது சிறப்பானது. ஒரு கலைஞனைக் கேலி செய்வதை விடுத்து அவனை ஊக்கு விக்க எமது சமுதாயம் முன்வர வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நீ டாக்டராக வரவேண்டும் பொறியியலாளனாக வர வேண்டும், முகாமையாளனாக வரவேண்டும் என்று கூறுகின்றார்களே தவிர யாரும் என்பிள்ளை கலைஞனாக வரவேண்டும் என்று நினைப்பதுமில்லை. கூறுவதும் இல்லை. கடவுள் கூடக் கலைக்குத்தான் மெய் மறந்து அருள் புரிவான் என்று கூறுகின்ற சொல் உண்மையில் நிஜமான கருத்தாகும். பெற்றோர்கள் ஊக்குவிப்பது மட்டுமல்ல சந்தர்ப்பங் களையும் வழங்க வேண்டும் என்பதே எனது உருக்கமான வேண்டுகோள். ஓவியக் கலைஞன் இறந்தாலும் ஓவியக் கலை உயிர் வாழும். எண்ணங்களை எடுத்தியம்பி எம்மைத் திரும்பிப் பார்க்க வைக்கும் திறமையுள்ள கலைஞர்கள் யாழ். மண்ணில் இருக்கின்றார்கள். இவர்கள் மரியாதையுடன் பேணப்பட வேண்டியவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஓவியக் கலைஞனின் மனம் மென்மையாக இருக்க வேண்டும். எதையும் சகித்துக் கொள்ளும் பண்பும் பொறுமையும் இழையோடிக் காணப்பட வேண்டும் அப்போது தான் அவன் ஓவியத்தின் மீது கொண்ட விருப்பமும் மரியாதையும் தெளிவாகத் தெரியும். ஒரு ஓவியக் கலைஞனுக்குத் தனிமை முக்கியம் வாய்ந்ததாகும். தனிமையில் சிந்திக்கும் போது புதிய படைப்புக்களை உருவாக்க முடிகின்றது. ஓவியக் கலையை நாம் மேலும் மேலும் மெருகூட்ட வேண்டும். இலை மறை காயாக உள்ள கலைஞர்களின் திறமைகள் ஒளியூட்டப்பட வேண்டும். ஓவியக் கலைக்கு மதிப்பளித்து அதனை நாம் மேலும் மேலும் வளர்ச்சி பெற ஒத்துழைப்பு வழங்கி அதனை ஊக்குவிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டுக் காலத்தால் அழியாத ஓவியக் கலையைப் பாதுகாக்க ஒன்றிணைவோம். இதுவே எனது குறிக்கோளும் கலை உணர்வின் சிந்தனையும்.



**M. K. பிரகாஷ்**
*யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவன்*

# நாம்
## Facebook கவிதைகள்





யாழ் இலக்கியக் குவியத்தின் வெளியீடாக "நாம் Face book கவிதைகள்" என்னும் இரு திங்கள் ஏடு வெளிவந்துள்ளது. வேலணையூர் தாஸ் பிரதம ஆசிரியராகவும் நெடுந்தீவு முகிலன் இணை ஆசிரியராகவும் விளங்கும் இச் சஞ்சிகையின் தை – மாசி இதழாக முதலாவது இதழ் உள்ளது. இதன் பெறுமதி 30 ரூபா மட்டுமே.

இச் சஞ்சிகை வெளியிடப்படும் நோக்கத்தை, "இலத்திரனியல் ஊடகங்களில் 'பேஸ்புக்' இன்று பிரபலமாகி வருகிறது. பத்திரிகைகள் சஞ்சிகைகளை விட இளைய வர்கள் இணையத் தளங்களிலேதான் கூடுதலாக எழுதுகிறார்கள். யார் தலையீடும் இன்றிச் சுதந்திரமாக எழுதமுடிவது இதற்குக் காரணமாக இருக்கலாம். இதில் நல்ல படைப்புக்களையும் பெறமுடிகிறது. இவர்களுடைய படைப்பை ஆவணப்படுத்தும் நோக்கோடும் புதிய எழுத்தாளர்களை இனங்காணும் முயற்சியாகவும் பேஸ்புக்கில் வெளியான கவிதைகளைத் தாங்கி நாம் வெளியாகிறது" என ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இச் சஞ்சிகையுடன் தொடர்பு கொள்ள விரும்புவோர்,

yarlelakiyakuviyam@gmail.com

என்னும் இணைய முகவரி மூலம் தொடர்பு கொள்ளலாம்.



# சாமுத்திரிகா லட்சணம்

## (நம்ப முடியாத ஓர் அபூர்வமான கலையாகும்)

வடவரணி சி. சபா

தமிழர்களின் புரதான கலைகளாகக் கட்டிடக் கலை, ஓவியக்கலை, சிற்பக் கலை, மருத்துவக்கலை என்பவற்றுடன் வானவியல் சாஸ்திரம், கைரேகை சாஸ்த்திரம் என்பன இருந்து வந்துள்ளன. இதற்கு ஆதாரமாக வரலாறுளும் நூல்களும் நம்மத்தியில் காணப்படுகின்றன. அழிந்து விட்ட வேறு பல கலைகளும் நம்மத்தியில் ஆதிகாலத்தில் இருந்துள்ளதை பகுத்தறிவினால் அறிந்து கொள்ளக்கூடிய கூடியதாக உள்ளது.

ஆனால் சில கலைகள் முற்றாக அழிந்து அதன் எச்சங்கள் எதுவுமின்றிக் கர்ணபரம்பரைக் கதைகளாகவே உள்ளன. அப்படிப்பட்ட ஓர் அபூர்வமான நம்பமுடியாத ஒரு கலையாக இந்த "சாமுத்திரீகா லட்சணம்" என்ற கலையும் இருந்துள்ளது. இக்கலை விஞ்ஞானத்துக்கும் அப்பாற்பட்ட ஒரு மாபெரும் மனித சக்தியாகவும், நம்ப முடியாத உள்ளடக்கத்தையும் வெளிப்பாடுகளையும் கொண்ட தனிமனித சக்தியாகவும் இருந்துள்ளது. இக் கலையின் வெளிப்பாட்டைச் சான்றுபடுத்த முடியாத அளவுக்கு இது கர்ணபரம்பரைத் தகவலாகவே உள்ளது.

இக்கலைக்கு சாமுத்திரீகா லட்சணம் என்ற பெயரை விட வேறு பெயர்கள் ஏதாவது இருந்துள்ளதா? என்பதும் அப்பிடியிருந்தாலும் அப்பெயர்கள் இந்த கலையைத்தான் குறிப்பிடு கிறதா? என்பதும் அடுத்த கேள்விக் குறியாகவே அமைந்துள்ளன.

ஒரு மனிதனுடைய ஏதாவது ஒரு உறுப்பை வைத்துக் கொண்டு அவனது ஏனைய உறுப்புக்கள் அதன் பரிமாணம் எப்படி அமைந்திருக்கும் அந்த உறுப்புக்கு சொந்தமான மனிதனின் தோற்றமும் முழு அமைப்பும் எப்படி அமைந்திருக்கும் என்பதை துல்லியமாக வெளிக்காட்டக் கூடியதாக இருந்துள்ள இக்கலை மனிதனைப் பற்றிய ஒரு கலையாக இருந்துள்ளது.

ஒரு மனிதனுடைய கை, கால், கண், மூக்கு, காது போன்ற ஏதாவது ஒரு உறுப்பை மட்டும் அடிப்படையாக வைத்துக் கொண்டு (அவனது ஏனைய உறுப்புகள் எதையும் பார்க்காமல்) அவனது ஏனைய உறுப்புக்கள் எப்படியிருக்கும். அதன் பரிமாணங்கள் எப்படி அமைந்திருக்கும், அந்த உறுப்புக்கு சொந்தமான மனிதனின் தோற்றமும் முழு அமைப்பும் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதைத் துல்லியமாக வெளிக் காட்டக் கூடியதாக இருந்துள்ள இக்கலை மனிதனைப் பற்றிய ஓர் கலையாக இருந்துள்ளது.

அதுமட்டுமல்ல, அம்மனிதன் எப்படித் தோற்ற மளிப்பான் என்பதுடன் அவன் உடலின் அமைந்துள்ள விசேட அடையாளங்கள் அதாவது கால் முடமாக இருக்கும் மூக்கு சப்பையாக இருக்கும் கையில் ஆறு விரலிருக்கும், காதில் பாதி கிழிந்திருக்கும் என்பதுடன் முதுகில் இன்ன வடிவத்தில் மச்சமிருக்கும் என்பன போன்ற சகல விபரங்களையும் வெளிக்காட்டக் கூடிய அளவுக்கு இந்தக் கலையின் சிறப்பு அமைந்தி ருந்ததாக நம்பமுடிகிறது. ஆனால் இக்கலையை கற்றுணர்ந்தவர்கள் ஆயிரத்தில் ஒருவர் மட்டுமே இருந்ததாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

இக்கலையின் எஞ்சிய சில பகுதிகள் கிராமப் புற மக்களின் மத்தியில் இன்றும் காணப்படுகின்றன. ஓர் மனிதன் அமைப்பை வைத்துக் கொண்டு சில ஆருடங்களையும் வரை விலக்கணங்களையும் கூறுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஒரு மனிதனுடைய ஏதாவது ஒரு உறுப்பை வைத்துக் கொண்டு அவனது ஏனைய உறுப்புக்கள் அதன் பரிமாணம் எப்படி அமைந்திருக்கும் அந்த உறுப்புக்கு சொந்தமான மனிதனின் தோற்றமும் முழு அமைப்பும் எப்படி அமைந்திருக்கும் என்பதை துல்லியமாக வெளிக்காட்டக் கூடியதாக இருந்துள்ள இக்கலை மனிதனைப் பற்றிய ஒரு கலையாக இருந்துள்ளது.

இக்கலையின் அனுபவங்களையும் நுணுக்கங் களையும் எங்கும் காணமுடியாத அளவுக்கு அழிந்து விட்டதுடன் ஓவியம் சிற்பங்களை போல் பிரதி செய்து வைக்க முடியாத ஒரு கலையாகவும் அமைந்துவிட்டது துர்ப்பாய்க்கியமே.

இது ஒரு புராண, இதிகாச கதைகளைப்போன்ற ஒரு கற்பனை சிருஷ்டியாக ஒதுக்கி விட முடியாது. ஏனெனில் எம்மால் நம்பமுடியாத பல இதிகாச சம்பவங்கள் இன்று நம்பக் கூடிய விஞ்ஞானப் படைப்புக்களாக உரு வாகியுள்ளதை நாம் நேரடியாக உணரமுடிகிறது.

உதாரணமாக ஆதி காலத்தில் "புட்பக விமானங்கள்" பறந்தது அந்தரத்தில் சண்டை புரிந்தது. அஸ்திரங்கள் பாவித்தது. வானத்தில் கோட்டைகளைக் கட்டியது. இவை எல்லாம் பல ஆயிரம் வருடங்களுக்கு முன் நடந்ததாகச் சொல்லப்படும் புராண இதிகாசக் கதைகளாகும். ஆனால் இன்று விஞ்ஞானத்தால் நடைமுறைச் சாத்தியமாக்கப் பட்டுள்ளது. இதே போன்ற ஒரு கலையாகவே "சாமுத்திரிகா லட்சணம்" என்ற கலையையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தேடப்படும் நபர் ஒருவரைக் கண்டுபிடிப்பதற்காக அவரின் புகைப்படத்தை வைத்துக் கொண்டு அல்லது உத்தேசிக்கப்படும் "மாதிரி" உருவை வைத்துக் கொண்டு அவர் தாடி வைத்திருந்தால் எப்படியிருப்பார்? தலைமயிர் இன்றி மொட்டையாக இருந்தால் எப்படியிருப்பார்? ஏன் பெண்ணாக இருந்தால் எப்படியிருப்பார்? பத்து வருடத்துக்கு முன் அல்லது பின் அவரின் தோற்றம் எப்படியிருக்கும்? என்பதை இன்று கணனிகள் மூலம் கண்டறியக் கூடியதாக உள்ளது.

சாமுத்திரீகா லட்சணத்தை" ஒரு கலையாகக் கொள்ள முடியாது விடினும் இச் சக்தியினைக் கொண்ட தனிமனிதர்கள் சில நூற்றாண்டு காலப்பகுதியில் இருந்துள்ளனர் என்பது மிகவும் பொருத்தமானதாகும்.

இக்கலையை வெளிப்படுத்துவதற்கு அத்தனி மனிதர்களுக்கு இதனுடன் இணைந்து வேறுபல தகைமைகளும் தேவைப்பட்டுள்ளன. அதுதான் ஓவியக்கலையும் சிற்பக்கலையும் ஏனெனில் மனிதனின் ஓர் உறுப்பை வைத்துக் கொண்டு அம்மனிதனின் முழுத்தோற்றத்தையும் வெளிப்படுத்த வேண்டுமாயின் அதை இக்கலைகளின் உதவியுடன் தான் நிரூபிக்க வேண்டும். இதில் சிற்பத்தை விட ஓவியமே பெரிதும் உதவியது.

இதை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரைக்கு வலுச்சேர்க்கும் வகையில் புனையப்பட்ட அல்லது நடந்ததாக நம்பக்கூடிய ஓர் "சிறுகதை" இக் கட்டுரையுடன் இணைந்துள்ளது.

ஏடுகள் "சிலவற்றைச் சொல்லும்" "சிலவற்றைச் சொல்லாது" இவை இரண்டுக்கும் நடுவில் ஏடுகள் சொல்வதுண்டா? என்ற வினாக் குறியுடன் இடம் பெறும் இச்சிறுகதை சாமுத்திரிகா லட்சணத்தின் முழுமைத் தன்மையை விளங்க வைக்கிறது. ஏடுகளிலிருந்து சொல்லப்பட்ட உருக்கமான இச் சிறுகதை நெஞ்சிலிருந்து அழிக்க முடியாத ஓர் "காவியமாகும்."

✪ ✪ ✪

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் முஸ்லீம் சாம்ராஜ்ஜியங்கள் கொடிகட்டிப் பறந்த காலம். சலீம் மன்னன் தன் அன்பு மனைவியும் பட்டத்தரசியுமான பேகத்துடன் அரண்மனையின் அந்தப்புரத்தில் அமைந்திருந்த நந்தவனத்தில் அளவளாவிக் கொண்டிருந்தான். அன்று பூரண பௌர்ணமி தினம். பேகத்தின் நீண்ட கடந்தலை வருடிக் கொண்டே பே.....க....ம் நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய்...! முழுநிலவின் ஒழியைக் கூட உன்முகத்திலிருந்து வீசும் ஒளி தோற்கடித்து விட்டது. உன் பூரண அழகுக்கு இணையாக இந்த உலகத்தில் வேறுயார் இருக்கிறார்கள். என்று காதல் மொழிபேசினான்.
பேகத்தின் முகத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. மாறாகப் பொய்க் கோபத்துடன் மறுபுறம் திரும்பிக் கொண்டே "என் அழகைப் பற்றி ஒரு வார்த்தை கூட நீங்கள் பேசவேண்டாம். இத்துடன் எத்தனை தடவைகள் உங்களைக் கேட்டு விட்டேன். எனது உருவத்தை ஓவியமாக வரைந்து தரும்படி. அப்போது தான் உங்கள் வார்த்தைகளிலுள்ள உண்மைகளை என்னால் உணரமுடியும் அத்துடன் எனது அழகையும் தனிப்பட்ட முறையில் என்னால் ரசிக்க முடியும். எனது ஆசையை நிறைவேற்ற நீங்கள் இதுவரை எந்த அக்கறையும் செலுத்தவில்லை" என்று சினத்துடன் கூறினாள் பேகம். "பேகம் உனது சினத்தில் கூட எவ்வளவு அழகு மிளிர்கிறது தெரியுமா?" சரி உன் ஆசையைக் கூடிய விரைவில் நிறைவேற்றுகிறேன் என்று கூறிவிட்டு அரசன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.
அடுத்த சில தினங்களின் பின் பல நாடுகளிலிருந்தும் அழைக்கப்பட்ட பிரபலமான ஓவியக்கலைஞர்களின் மத்தியில் வீற்றிருந்த அரசன் தனது கருத்துக்களைக் கூறினான்.
"நான் உங்கள் அனைவரையும் அழைத்த தன் நோக்கம் யாதெனில் உங்களிடம் ஓர் புதிரான பணியை ஒப்படைக்க விரும்புகிறேன்.
என் மனைவியாகிய அரசி பேகத்தின் முழுமையான ஓவியத்தை நீங்கள் யாராவது ஒருவர் வரைந்து தரவேண்டும். அந்த ஓவியத்தை வரைவது இலகுவான காரியமல்ல. அதில் உங்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படலாம். ஏனெனில் என் மனைவி உங்கள் முன்முழுமையாகத் தோற்றமளிக்கமாட்டாள்.
எமது முஸ்லீம் கலாச்சாரப்படி ஓர் முஸ்லீம் பெண் தன் முழு உடம்பையும் மூடி மறைக்கும் "பர்தா" உடையுடன் பார்க்கும் போது அவளின் கண்ணை மட்டுமே நீங்கள் முழுமையாகப் பார்க்க முடியும். ஏனைய எந்த உறுப்பையும் நீங்கள் பார்க்க முடியாது. அதை மட்டும் வைத்துக் கொண்டு நீங்கள் அவளின் முழுமையான உருவத்தை ஓவியமாக வரைந்து தரவேண்டும்.
இதற்கான சகல ஒழுங்குகளும் உங்களுக்குச் செய்து தரப்படும். இதற்காக நீங்கள் கேட்கும் சன்மானம் எதுவானாலும் என்னால் தரப்படும்" என்று கூறினான்.
இது ஒரு விஷப் பரீட்சை மிகவும் ஆபத்தான காரியம் என்பதை உணர்ந்து கொண்ட ஓவியர்கள் இப்பணியை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. அரசனுக்கு இது மிக வேதனையைக் கொடுத்தது.
ஓவியக்கலை மட்டும் தெரிந்தவர்களால் இதைச் செய்ய முடியாது. கலையுடன் "ஓர் மனித உறுப்பை மட்டும் வைத்துக் கொண்டு ஏனைய உறுப்புக்கள் எப்படி அமையப் பெற்றிருக்கும் என்பது பற்றி முழுமையாக வெளிப்படுத்தும் சாமுத்திரிகா லட்சணம் என்னும் கலைபற்றி பூரண ஆற்றலைத் தெரிந்து கொண்டவர்களால் மட்டுமே இப்பணியை மேற்கொள்ள முடியும். அத்துடன் இந்நாட்டு அரசியின் ஓவியம் சற்று பிசகு ஏற்பட்டாலும் உயிராபத்து. இதனால் சாமுத்திரிகா லட்சணம் பற்றிய கலையைப் பூரணமாக அறிந்து கொண்டவர்களும் அரசனின் கோரிக்கையை ஏற்க முன்வரவில்லை.
இச்சமயத்தில் அரசனால் இந்தியாவின் "நாகை" நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட ஓர் ஓவியன் எழுந்து "அரசே இந்தப் பொறுப்பை நான் ஏற்கின்றேன். ஆனால் எனக்கு சிறிதுகால அவகாசம் வேண்டும்" என்று கூறினான்.
அரசன் முகத்திலிருந்து மிகமகிழ்ச்சி. ஓவியனுக்கு ஏற்ற சகல ஒழுங்குகளையும் செய்து கொடுக்கும்படி மந்திரிக்கு கட்டளையிட்டு விட்டு சந்திப்பை முடித்துக் கொண்டான். மறுநாள் "பர்தா" உடையிலிருந்து அரசி பேகத்தின் இரு கண்களையும் ஓவியன் நன்றாக உற்றுப் பார்த்தான். மீண்டும் ஒரு தடவை பார்த்த ஓவியன் மனதில் எவ்வித சலனமும் இல்லை. அவன் மனதில் ஒரு திருப்தி காணப்பட்டது. அதன் பின் தனக்கென ஒதுக்கப்பட்ட அறைநோக்கிச் சென்றான்.
இரு பௌர்ணமி கடந்து விட்ட நிலையில் அரசன் தன்மனைவி பேகத்தை அன்று சந்தித்தபோது தனது ஓவியம் பற்றி பேகம் அரசனிடம் வினவியபோது தான் அரசனுக்கு ஞாபகம் ஏற்பட்டது.
உடனடியாக மந்திரியை அழைத்து வரையக் கொடுக்கப்பட்ட ஓவியத்தின் நிலைபற்றி விசாரித்தான்.

மந்திரியால் ஒப்புவிக்கப்பட்ட பதில் அரசனை ஆத்திரமடைய வைத்தது. அரசே இது பற்றிச் சொல்லவே எனக்கு அச்சமாக உள்ளது. ஏனெனில் அவன் ஓவியம் வரைவது போல் எனக்கு தெரியவில்லை. தன்னுடைய அறையிலும் அவன் இருப்பதில்லை. ஓடும் நதிகள் உயர்ந்த மலைகள் காடுகரம்பைகள் என்பவற்றைப் பார்த்து கைதட்டி சிரிக்கின்றான். பறவைக் கூட்டம் என்பவற்றை அண்ணாந்து பார்த்து ஆச்சரியப்படுகின்றான். மரநிழலின் கீழ் அடிக்கடி தனக்குள் ஏதோ முணுமுணுக்கிறான். அவன் நடவடிக்கைகளை வந்து நோக்கும் போது அவன் ஒரு பைத்தியக்காரன் போலவே தோன்றுகிறான். அவன் ஒரு ஓவியனைப் போலத் தெரியவில்லை.



மந்திரியின் வார்த்தைகளைக் கேட்ட அரசனுக்கு கடுமையான கோபம் ஏற்பட்டது. உடனடியாக மந்திரியையும் அழைத்துக் கொண்டு அவன் தங்கியிருந்த அறைக்கு சென்ற போது அறை பூட்டப்பட்டிருந்தது. பூட்டை உடைத்துக் கொண்டு அறைக்குள் சென்ற போது உள்ளே பெரிய அதிசயம் ஒன்று அவர்களை வரவேற்றது.

அறையின் நடுவில் அரசி பேகத்தின் அளவில் முழுமையான ஓர் ஓவியம் தத்தரூபமாக வரையப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டிருந்தது. அரசி பேகம் இவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தாள். அவள் சிரிக்கும் போது ஏற்படும் கன்னக்குழி அவள் அழகுக்கு மேலும் மெருகூட்டியது. தலை, கழுத்து, நெற்றி, முகம் அனைத்தும் எவ்வித வேறுபாடுமின்றி ஓவியத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அரசி பேகம் தன்முன் உயிருடன் நிற்பது போன்ற மனப்பிரேமை ஒன்று அரசனுக்கு ஏற்பட்டது. அவன் முகத்தில் நம்பமுடியாத ஆச்சரியக்குறி தென்பட்டது. மந்திரியைக் கடைக்கண்ணால் பார்த்த போது ஏதோ ஒரு சத்தம் உரப்பாகக் கேட்டது.

கண்டுபிடித்து விட்டேன் கண்டு பிடித்து விட்டேன் என்ற சத்தத்துடன் அறையை நோக்கி ஓடி வந்த ஓவியன் தனது அறைக்குள் நின்ற அரசனையும் மந்திரியையும் பார்த்துவிட்டு மிரள மிரள விழித்தான்.

சிறிது கணப்பொழுதில் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ஓவியன் அரசே ஓவியத்தை வரையும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட நான், ஒரு சில தினங்களுக்குள் இந்த ஓவியத்தை வரைந்து முடித்துவிட்டேன். ஆனால் அதை உங்களிடம் ஒப்படைக்கவில்லை. ஏனெனில் இந்த ஓவியம் முற்றுப் பெறவில்லை. இதில் ஏதோ ஓர் குறை காணப்படுகிறது. அந்தக் குறைபாடு என்ன? என்பதை என்னால் அனுமானிக்க முடியவில்லை. அதைக் கண்டுபிடிக்க பலநாள் முயன்றேன். நித்திரையின்றி விழித்திருந்தேன். பைத்தியகாரனைப்போல அலைந்து திரிந்தேன். ஆனால் சற்று நேரத்துக்கு முன்னர்தான் அதைக் கண்டுபிடித்தேன்.

என்று கூறிவிட்டு தனது தூரிகையைக் கையில் எடுத்து அரசியின் முழங்காலுக்கு மேலும் தொடைக்குக் கீழும் தாமரை மொட்டு வடிவத்தில் ஓர் மச்சத்தை வரைந்து விட்டு இப்போது தான் இந்த ஓவியம் முழுமை பெற்றுள்ளது. என்று அடக்கமாகக் கூறினான்.

அரசன் முகத்தில் அளவிட முடியாத வியப்பு. தன் மனைவியின் தொடைக்குக் கீழ் இந்த வடிவில் ஓர் மச்சம் இருப்பது எனக்கு மட்டும் தானே தெரியும். ஓவியனை வியப்புடன் நோக்கிய அரசன் "உனது கலைத்தெய்வீகமானது. உனது திறனை மதிப்பீடு செய்ய முடியாது. உன்னை எந்த வார்த்தைகளால் பாராட்டுவது என்பது எனக்கு தெரியவில்லை.

உனக்கு என்ன சன்மானம் வேண்டும்? எதுவானாலும் தயங்காது கேள். எதையும் தர நான் தயாராக உள்ளேன்."

"அரசே கலைஞர்கள் வெறும் பாராட்டுக்களுக்கும் சன்மானத்துக்கும் அப்பாற்பட்டவர்கள். தங்கள் கலையை தமது உயிரிலும் மேலாக மதிப்பவர்கள். எனவே தங்களின் வெகுமதிகள் பாராட்டுக்கள் ஒருபுறம் இருக்க நான் தங்களிடம் ஒரு சிறு வேண்டுகோளை சமர்ப்பிக்க விரும்புகிறேன். அதை முதலில் நிறைவேற்றுங்கள். அதன் பின் மிகுதியை உங்களிடம் கேட்கிறேன்.

நீங்கள் தானே என் ஓவியத்தை பாராட்டுகிறீர்கள். நான் வரைந்த ஓவியம் எவ்வளவுக்கு சரியானது என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்போது தான் எனக்கு பூரண திருப்தி ஏற்பட முடியும்.

உங்கள் மனைவியை பர்தா உடையின்றி ஒரு தரம் நான் முழுமையாக பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தந்தால் அது ஒன்றே எனக்கு போதுமானது." ஓவியனின் இச்சிறிய வேண்டுகோள் அரசனுக்குப் பெரிய சோதனை. முஸ்லீம் கலாச்சாரம் அதற்கு இடம் கொடுக்காது. ஏன் அரசிகூட இதற்குச் சம்மதமளிக்க மாட்டாள். ஓவியன் கோரிக்கை நியாயமானது. மிகவும் அற்பமானது. இக்கோரிக்கையை நிறைவேற்ற முடியாதுவிடின் அரசனாக இருப்பதில் அர்த்தமில்லை. கடுமையான சிந்தனைக்கு பின்னர் அரசன் தனது முடிவை ஓவியனிடம் வெளிப்படுத்தினான்.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்தின் போதும் நான் எனது மனைவி பேகத்தை அரண்மனையின் அந்தப் புரத்திலுள்ள நந்தனவத்தில் சந்திப்பது வழக்கம் அச்சந்திப்பின் போது அரசி "பர்தா" உடையில் வரமாட்டாள். நாளை மறுதினம் பௌர்ணமி.

இதோ என் முத்திரை மோதிரம் அரச உடைகள். இவற்றை அணிந்து கொண்டு நாளை மறுதினம் அந்தப்புர நந்தவனத்துக்கு வந்துவிடு. நானும் என் மனைவியும் தனித்திருக்கும் போது நீ மறைந்திருந்து அவளின் முழுமையான உருவத்தையும் கண்டு கொள்ளலாம். இதைவிட உனது வேண்டுகோளை நிறைவேற்ற எனக்கு எவ்வித மார்க்கமும் தெரியவில்லை" என்று கூறித் தனது அரச உடைகளையும் முத்திரை மோதிரத்தையும் ஓவியனின் கையில் கொடுத்தான். மாபெரும் கலைஞனின் எதிர்பார்ப்பைத் திருப்திப்படுத்திய மனநிறைவு அரசனிடம் ஏற்பட்டது.

அன்று பௌர்ணமி தினம் நந்தவனத்தில் அரசியை சந்தித்த அரசன் அவளை அன்புடன் அரவணைத்தான். அவளின் ஒவ்வொரு அங்கங்களையும் அன்புடன் வருடிக் கொண்டான். எப்படியாவது எங்கிருந்தாவது மறைந்திருந்து ஓவியன் பார்த்துக் கொண்டிருப்பான் என்பது அவனுக்கு தெரியும். பால் போன்ற நிலா ஒளியில் பேகத்தின் முகம் மேலும் பிரகாசமாக இருந்தது. அவளின் உடல் வனப்புக்கள் அப்பட்டமாகத் தெரிந்தன.

முன்னிரவைக் கடந்து விட்ட நிலையில் அரசன் படுக்கையறைக்குச் சென்று விட்டான். அன்றிரவு அவன் மனத்தில் பூரண திருப்தி குடிகொண்டிருந்தமையினால் நித்திரை அவனை அணைத்துக் கொண்டது.

மறுதினம் அதிகாலை அரசன் விழித்துக் கொண்டான். படுக்கையறைக் கதவு தட்டப்படும் ஓசை அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவசரமான தேவை அல்லது மிக அவசியமான காரியங்களுக்காகவே அரசன் படுக்கை அறைக் கதவை தட்டும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டதை உணர்ந்து கொண்ட அரசன் அறைக்கதவை மெல்லத் திறந்தான். பயந்து நடுங்கியவாறு நின்றிருந்த காவலன் கீழ்வருமாறு கூறினான்.

"அரசே ஒரு தவறு நடந்து விட்டது. நேற்றைய தினம் அந்தி மாலையில் யாரோ ஒரு திருடன் எப்படியோ தங்கள் அரச உடைகளையும் முத்திரை மோதிரத்தையும் அபகரித்துக் கொண்டு அரண்மனை மதிலேறி குதித்து ஆண்கள் நுழையக்கூடாத பெண்கள் தனித்திருக்கும் அந்தப்புரத்துக்குள் நுழைந்து விட்டான். அந்தப் புரத்துக்குள் அனுமதியின்றி நுழையும் ஆண்களுக்கு அரசசபையைக் கூட்டாமலே தண்டனை வழங்கலாம் என்ற நியதி இருந்தமையினால் அவனுக்கு வழங்க வேண்டிய தண்டனையை வழங்கி விட்டோம்.

அவனுடைய இருகண்களையும் குத்திக் குருடாக்கி விட்டு அவனைப் பாதாள சிறையில் அடைத்து விட்டோம். சற்று நேரத்துக்கு முன்பு தான் அறிந்து கொண்டோம் அவன் "நாகை"யில் இருந்து தங்களால் வரவழைக்கப் பட்ட ஓவியன் என்று"

அரசனிடம் இச்செய்தியைக் காவலன் கூறிக் கொண்டிருக்கும் போது உதிரம் வழிந்தோடும் விழிகளுடன் ஏழை ஓவியனின் கரங்கள் பாதாள அறையின் சுவர்களை வருடிக்கொண்டிருந்தன.

## சிந்தனைச் சுடர்

- அறிவாளிகள் நம்பிக்கையின் ஆதாரத்தால் அறிவூட்டப்படுகிறார்கள். சராசரிகள் அனுபவத்தாலும், முட்டாள்கள் அவசியத்தாலும், மூர்க்கர்கள் பிறவிக்குணத்தாலும் அறிவூட்டப் படுகிறார்கள்.
- வாய்ப்புக்கள் வழக்கமாய் மாறுவேடத்தில் வரும் என்பதால் பெரும்பாலானவர்கள் அவற்றை அடையாளம் காண்பதற்கில்லை.



## சலுகை

தீபாவளிச் சலுகை
போட்டோ கொப்பி மிசின்
ஒரு இலட்சம்
செல்போன் அல்லது கிரைண்டர்
இலவசம்
விளம்பரம்
கண்ணில் பட்டது.

ஜனவரியில் தான்
தேவை
சலுகையை விடக் கூடாது
மனம் துடித்தது.

இடம் மாறியது
மனைவியின் நகைகள்
வங்கிக்கு;
கொண்டு வந்தேன்
புதையல் என அதை
வீட்டிற்கு.

"மூவாயிரம் தான் அடிக்கும்"
பொருத்தும்
பொடியன் சொன்னான்
"இல்லை இருபதாயிரம்"
மறுத்து நான் சொன்னேன்.
"மற்ற 'றோணர்' அப்படித்தான்
இது மூவாயிரம் தான்
அடிக்கும்
சலுகை என்றால்
இப்படித்தான்"
பொடியன் சொல்ல
நான் தளர்ந்தேன்

நகையிழந்து
நகை துறந்திருந்த
மனைவி
புறுபுறுத்து
வெளியேறினாள்
அடுப்படியில்
பேசும் சத்தம்
காதைத்தைத்தது

தீபாவளி
கொண்டாட்டம் தான்

"தென் பொலிகை
குமாரதீபன்"

# இனமத பேதமற்ற சமுதாயம்

இம் மனித சமுதாயத்திற்கும் மற்றும் இந்த உலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்கும் இறைவனால் அளிக்கப்பட்ட பரிசே இப் பூமிப்பந்து. இறைவனின் படைப்பிலே வாழும் மனிதர்களான நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்வைச் சிறப்பாக அமைத்துக் கொள்ள விரும்புகிறோம். இன்று உலகில் பல்வேறு நாடுகளிலும் மக்கள் திரண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற போதும் அவர்கள் ஒவ்வொருவருக்குமிடையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழ்வதற்கு நிச்சயமாக பிறரது உதவிகள் மற்றும் சேவைகள் அவசியமாகின்றன.

இவ்வாறான இந்த மனித சமுதாயத்திலே பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் தோன்றியதே இனங்களும் மதங்களுமாகும். ஒவ்வொருவருடைய இனங்கள் மற்றும் மதங்கள் என்பன உயர்ந்த எண்ணங்களை உடையனவாக உள்ளன. எனினும் இவ்வாறாக இனங்கள், மதங்கள் பல காணப்படுவதால் ஒவ்வொரு இனங்கள் மற்றும் மதங்கள் தமது இனங்களே அல்லது

விஞ்ஞானம் அதி உச்சக் கட்டத்தில் வளர்ச்சிகளைக் கண்டு உயர்ந்துள்ள இக்காலத்தில் மக்களுடைய இன, மத வெறிகள் மட்டும் மாறாது இருப்பது வியக்க வேண்டிய விடயமே. மக்களாகிய நாம் எமக்குள் இன, மத சார்பில் மோதிக் கொண்டு எமது உயிர்களை நாமே பலி கொடுக்க முனைகின்றோம்.

தமது மதங்களே உயர்ந்தவை என எண்ணிப் பிறருடன் போட்டி போடுகின்றன. இப்போட்டிகள் எதிர்காலத்தில் பாரிய யுத்தங்களாக வடிவெடுக்கலாம்.

விஞ்ஞானம் அதி உச்சக் கட்டத்தில் வளர்ச்சிகளைக் கண்டு உயர்ந்துள்ள இக்காலத்தில் மக்களுடைய இன, மத வெறிகள் மட்டும் மாறாது இருப்பது வியக்க வேண்டிய விடயமே. மக்களாகிய நாம் எமக்குள் இன, மத சார்பில் மோதிக் கொண்டு எமது உயிர்களை நாமே பலி கொடுக்க முனைகின்றோம். உதாரணமாக எமது தாய் நாட்டில் கடந்த முப்பது ஆண்டுகளாக இனச் சண்டை நிலவியது. இவ் யுத்தத்தில் எவ்வளவு உயிர்கள் பலி கொடுக்கப்பட்டன என்பதை அனைவரும் சற்றுச் சிந்திக்க வேண்டும். எமது நாட்டில் எந்தளவிற்கு பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த அழிவுகள் அனைத்திற்கும் காரணம் எமக்கிடையே உள்ள இன, மத வெறிகள் தான்.

எமது நாட்டிலே இன்றைய காலத்தில் இனங்கள் மற்றும் மதங்கள் பல காணப்படுவதோடு மக்களும் தத்தமது இனங்கள், மதங்களுக்கேற்ப வாழ்க்கை நடத்துவோராகக் காணப்படுகின்றனர். இன்று கோயில்கள், விகாரைகள், மசூதிகள், தேவாலயங்கள் என ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு வணக்கஸ் தலங்கள் காணப்படுகின்றன. மக்கள் தத்தமது வணக்கஸ்தலங்களுக்குச் சென்று தமது மதங்களின் விதிகளுக்கமைய வணக்கம் செலுத்து கின்றனர். சில வணக்க ஸ்தலங்களில் இந்துக்களுக்கு, பௌத்தர் களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு, இஸ்லாமியருக்கு என பல விசேட தன்மைகள் காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் தமது கலாசார உடைகளை அணிந்து ஆலயங்களுக்குச் செல்கின்றனர்.

யுத்தம் நடந்து நாடு சீரழிந்துள்ள இந்த நேரத்திலும் மக்கள் தமது இன, மத வெறிகளை விடவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் கொழும்புக்குச் சென்றால் தமது நடை உடைகளை மாற்றி விடுகிறார்கள். இதற்குக் காரணம் கலாசாரம் மட்டுமே என்று கூறி விட முடியாது. அவர்களிடத்தே காணப்படும் பயமும் இதற்குக் காரணமாகும். நாம் யாழ்ப்பாணத் தமிழர் என்று தெரிந்தால் பிற இனத்தவரால் தமக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விடுமோ என்ற பயம் காணப்படுகிறது. யுத்தம் முடிந்ததன் பின் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலிருந்து பல இனங்கள் மற்றும் மதங்களைச் சார்ந்த மக்கள் இங்கு வருகிறார்கள். அப்போது அவர்களுக்கு நமது பிரதேச மக்கள் சில அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றார்கள். இவ்வாறு அனைவரும் கலவரங்கள் மற்றும் சண்டைகளைத் தூண்ட முனைகிறார்களே ஒழிய பிரச்சினைகளை அடக்க முன்வரவில்லை.

இன்றைய காலத்தில் கல்வி வளர்ச்சியடைந்து எமக்குத் தேசிய ரீதியில் பல்வேறு போட்டிகள் நடைபெறுகின்றன. அவ்வாறான போட்டிகளில் நாம் பங்குபற்றும் போது வேறு பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டி ஏற்படுகிறது. அச்சந்தர்ப்பங்களின் போது எம்மால் ஏனைய இன, மதத்தவருடன் சகஜமாகப் பேச முடிவதில்லை. அவர்களோடு அன்னியோன்யமாகப் பழக முடிவதில்லை. எமக்குள்ளேயே ஒரு தாழ்வு மனப்பாங்கு ஏற்படுகிறது. தமிழ் மாணவர்களான எமக்கும் பிற இனத்தவருடன் பேசிப் பழக வேண்டும் என்ற ஆசை உள்ளது. ஆனால் இந்த இன, மத, வெறி பிடித்த சமுதாயம் எம்மைப் பிரித்து வைக்கிறது.

இப்போது அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகத்தை இலக்காகக் கொண்டே கற்கின்றார்கள். ஆனால் தமிழ் மாணவர்களில் குறைந்தளவு மாணவர்களும் சிங்கள மாணவர்களில் அதிகளவு மாணவர்களுமே பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிறார்கள். திறமையான பல தமிழ் மாணவர்கள் மறுக்கப்படுகிறார்கள். அவர்களிலும் திறமை குறைந்த பல சிங்கள மாணவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்குக் காரணம் படித்த சமுதாயம் இன்னோர் படித்த சமுதாயத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றமையே ஆகும்.

இலங்கையில் பல மதங்கள், இனங்கள் உள்ள போதும் பெரும்பான்மை மதங்கள், இனங்களே உயர்ந்தவையாக நோக்கப்படுகின்றன. முன்னுரிமை கொடுக்கப்படுகின்றன. அப்போது சிறுவர்களான எமது தவிப்புக்களை, ஏக்கங்களை யாரும் புரிந்து கொள்வதில்லை. இவ் இன, மத வெறிகளால்

எதிர்காலத்தில் நாம் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி அவர்கள் சிறிதும் யோசிப்பதில்லை. இந்த இன, மத பேதத்தால் நாம் எவற்றைக் கண்டோம்? வன்னி யுத்தத்தில் இறுதியாகப் பல அவலக் குரல்களையும் அநாதைப் பிணங்களையும் கண்டோம். இன்று உறவுகள், ஊர், உடைமை என எல்லாவற்றையும் இழந்து எம் மக்கள் பிறரிடம் உதவி கேட்டுக் கையேந்துகின்றனர். இச்செயல்களைக் காண ஒவ்வொரு உள்ளத்திலும் வலி ஏற்படும். எம் உறவுகளைத் தவிக்க வைத்த இந்த இனவெறி எமக்கு இன்னும் தேவை தானா? என்பதை ஒவ்வொரு மனிதனும் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

ஒருவன் உயிருக்குப் போராடும் நேரத்தில் குடிப்பதற்கு ஒரு சிறிதளவு நீராவது கிடைக்காதா என ஏங்கும் நேரத்தில் அந்த நீரைக் கொடுப்பவன் வேறு இனத்தை அல்லது வேறு மதத்தைச் சேர்ந்தவன் எனின் அந்நீரைப் பருகாமல் இருக்க அவனால் முடியுமா? அந்த இறுதித் தருணத்தில் அவன் எதைப் பற்றியும் சிந்திக்க மாட்டான். நீர் கொடுத்தவனைத் தெய்வமாக எண்ண நேரிடும். இறக்கும் தறுவாயில் வேற்று இனத்தவனைத் தெய்வமாகவே எண்ணும் இந்த மனித இனங்கள் நீண்டு வாழும் காலத்தில் அவனோடு உறவாட மறுப்பது ஏனோ? இதுவே மனிதனின் விந்தை.

**நாம் எவ்வளவு தான் சொத்து சுகங்களோடு வாழ்ந்தாலும் பிற உயிர்களுடன் அன்பாக வாழாவிட்டால் அந்த வாழ்வால் எவ்வித பயனுமில்லை. இவ்வுலகில் மனிதர்களுக்குள் இனங்கள், மதங்கள் இல்லாது எல்லோரும் ஒன்றித்து ஒரே மனித இனமாக வாழ முன்வர வேண்டும்.**

இவ்வுலகில் எண்ணற்ற உயிர்கள் வாழ்கின்றன. அவற்றுள் மனிதன் மட்டுமே ஆறறிவு படைத்தவனாகக் கொள்ளப்படுகிறான். ஏனைய உயிர்கள் எவ்வித பேதமுமின்றி வாழ்வதால் மகிழ்வுடன் வாழ்கின்றன. வாழும் நாட்களைப் பொற்காலமாகக் கழிக்கின்றன. ஆனால் சிந்திக்கத் தெரிந்தவனாகக் கொள்ளப்படும் இந்த மனிதன் மட்டும் இன, மத வெறிகளுடன் வாழும் காலத்தை நரகமாக்கிக் கொள்கிறான். பகுத்தறிவு என்று சொல்லும் அறிவை உடையவன் தான் மனிதனா? என்று சிந்திக்குமளவிற்குக் கீழ்த்தரமான செயல்களை உடையவனாகக் காணப்படுகின்றான்.

நாம் எவ்வளவு தான் சொத்து சுகங்களோடு வாழ்ந்தாலும் பிற உயிர்களுடன் அன்பாக வாழாவிட்டால் அந்த வாழ்வால் எவ்வித பயனுமில்லை. இவ்வுலகில் மனிதர்களுக்குள் இனங்கள், மதங்கள் இல்லாது எல்லோரும் ஒன்றித்து ஒரே மனித இனமாக வாழ முன்வர வேண்டும். எந்தவொரு மனிதனின் குருதியிலிருந்தும் அவனது இனத்தையோ அல்லது சாதியையோ அல்லது மதத்தையோ இனங்காண முடியாது. உயிருக்குப் போராடும் தருணத்தில் இன, மதப் பிரிவினைகளைச் சிந்தித்து எவ்விதப் பயனுமில்லை.

ஆரம்பத்தில் எமது நாட்டு மக்கள் இனம் என்று நோக்கும் போது இலங்கைத் தமிழர் என்றோ, இலங்கைச் சிங்களவர் என்றோ இலங்கை முஸ்லீம் என்றோ கூறி எழுதி வந்தார்கள். ஆனால் எமது தற்போதைய மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் யாரும் தமது மதத்தைக் குறிப்பிடாது இலங்கையர் என்றே கூறி , எழுத வேண்டும் எனக் கூறியுள்ளார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எம்மிடையே ஒரு உணர்வு ஊடுருவுகிறது. நாம் எல்லோரும் இலங்கையர் என்ற ஒருமைப்பாடு தோன்று கிறது. இந்த எண்ணத்தை நிலைத்திருக்கச் செய்ய பல சமூகத் தொண்டர்களும் முனைகிறார்கள்.

இலங்கை என்ற தாய் பெற்றெடுத்த குழந்தைகளே நாம். நாம் அனைவரும் சகோதரர்கள் சகோதர உறவிலே விரிசல் ஏற்படும் வகையில் தோன்றும் இனங்கள், மதங்களை விலக்கி எமது உறவை மேம்படுத்தி ஒன்றுபட உழைக்க வேண்டும். ஒரே மலையின் ஊற்றுக்களாய் உருவாகி ஒரே ஆற்றில் பாய்ந்து ஒன்றாகக் கைகோர்த்து உறவாட வேண்டும்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியைக் கண்டு மெய் சிலிர்த்து நிற்கும் நாம் மெய்யான உறவை எண்ணி வியக்க வேண்டும். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பது பழமொழி. அதற்கிணங்க நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பிறரையும் எமது உறவுகளாக எண்ணி இன, மத பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கி ஒரு தாயின் குழந்தைகளாக கைகோர்த்து வாழ்ந்து வாழ்வில் வெற்றிக் கொடி நாட்டி வீறுநடை போட்டு மனிதர்கள் நாம் பேதங்கள் அற்றவர்கள் உறவுகளைக் காப்பவர்கள் என்று வாழ்ந்து காட்டுவோம்.



***விஷ்ணுகா கிருபாகரன்***
*யா/மகாஜனக் கல்லூரி*
*தரம் - 10A*

## சிந்தனைச் சுடர்

- எந்த வேலையும் கடினமாயிருக்காது, அதைச் சிறு சிறுபகுதிகளாய் நீங்கள் பிரித்துக் கொண்டு செயல்படுகிறபோது.
- உங்களிடம் மற்றவர்கள் எதிர்பார்ப்பதைவிட உயர்ந்த அளவீட்டைக் கொண்டவராயிருங்கள். கடமையில் இருந்து தவறுவதற்கு உங்களுக்கு நீங்களே இடமளிக்காதீர்கள்.
- மனிதனின் செயல்கள் கீழ்க்காணும் ஏழு காரணங்களில் ஏதேனும் ஒன்றைக் கொண்டிருக்கும் : சந்தர்ப்பம், இயற்கை, நிர்ப்பந்தம், பழக்கம், அறிவு, உணர்ச்சி, விருப்பம்.
- மவுனம் பெரும்பாலும் தவறாக விளக்கப்படுகிறது. ஆனால், ஒருபோதும் அது தவறான மேற்கோளாகி விடுவதில்லை.



# விவசாயமும் நாமும்

பூமதி யோகநாதன்
விவசாயப் போதனாசிரியர்

வீட்டுத் தோட்டத்தில் பயிர் வகைகளைத் தெரிவு செய்து அவற்றின் சிறப்பான விளைவிற்கு அவற்றை நடுகை செய்யும் போது பொருத்தமான இடத்தெரிவு பற்றி தமிழருவி-5இல் குறிப்பிடப்பட்டது.

அதாவது எந்தப் பயிரை எந்த இடத்தில் நடுகை செய்ய வேண்டும் என்ற நுட்பத்தை வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள் யாவரும் அறிந்திருப்பது மிக முக்கியமானதாகும்.

"யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியணும் அட அண்டங்காக்காக்கும் குயில்களுக்கும் பேதம் புரியணும்"



எமது முன்னோர்கள் சரித்திர அனுபவ வாயிலாகவும் சித்தர்களின் வழிகாட்டலுடன் பின்பற்றி வந்த உணவுப் பழக்க வழக்கங்கள் அவற்றிற்கான உணவுற்பத்தி உத்திகளை நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களுடன் ஒன்றிணைத்து வீட்டுத்தோட்டத்தைத் திட்டமிட்டுப் பயிர்செய்கையை மேற்கொள்ளும் போது சூழலுக்குத் தோழமையுடனும் எமது உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான உணவை பெறுவதுடன். வீட்டுத்தோட்டச் செய்கையில் பூச்சி பீடைகளின் தாக்கத்தில் இருந்து இலகுவாக விடுபட்டு தேவையற்ற விவசாய இரசாயனங்களின் பாவனையின்றி உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்காத தூய நஞ்சற்ற மரக்கறிகளை இலகுவாகப் பெற முடியும். அத்துடன் 'உணவே மருந்தாக' என்ற முதுமொழிக்கு உரமூட்டி நோயற்ற வாழ்வு வாழ முடியும்.

இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் ஆரோக்கியமான வாழ்க்கைக்கும் நாம் உண்ணும் உணவில் இருக்க வேண்டிய போசாக்குகள் எவை? எமது பிரதேசத்திற்கு பொருத்தமான பாரம்பரிய பயிர்கள் எவற்றில் இருந்து அவற்றை பெற முடியும்.? அப்படியான பயிர் வகைகளை வீட்டுத்தோட்டத்தில் நடும்போது பூச்சி, பீடைகளைத் தாங்கி அல்லது எதிர்த்து வளரக் கூடியதான வல்லமை உள்ள இனங்களாகவும் விவசாய இரசாயனங்களின் குறைந்த பாவனையுடன் அல்லது முற்றாக விவசாய இரசாயனங்களின் பாவனையில்லாமல் வீரியமான வளர்ந்து கூடிய விளைவைப் பெறக் கூடியதாக இருக்க வேண்டும். உதாரணமாகத் சுண்டங்கத்தரி, கண்டல்கத்தரி, வட்டுக்கத்தரி போன்ற காட்டினங்களில் பூச்சி பீடை தாக்குவது மிகவும் குறைவு. அத்துடன் வறட்சியையும் நன்கு தாங்கி வளர்ந்து அதிக விளைவையும் தரவல்லன. அத்துடன் இவற்றில் மருத்துவ குணங்களும் அதிகம் காலநிலை மாற்றங்களின் போதும் அதிகம் பாதிக்கப் படுவதில்லை.

## நேற்று இன்று நாளை

இப்படி நமது முன்னோர்கள் மரக்கறியாக பயன்படுத்திய உள்ளூர் வர்க்கங்கள் மிக அதிகமாக எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன ஆனால் இன்று எமது உணவுப்பழக்க வழக்கத்தில் பெரும்பாலானவை வழக்கொழிந்து போய்விட்டன இதனால் தான் இன்று எமது சமுதாயம். உடல் ஆரோக்கியம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் கவலைக்கிடமாக உள்ளது.

எனவே எமது இளம் சந்ததியினருக்கு எமது பிரதேசத்துக்குரிய பயிர் வகைகளையும் அவற்றின் உற்பத்தி, பாவனை முறைகளில் பயிற்சியளிக்க வேண்டியதும்
பாரம்பரிய உணவுகளை அவர்கள் உண்ணப் பழக்கப் படுத்துவதும் இன்று எல்லோருடைய சமுதாயக் கடமை யாகவுள்ளமை உணரப்பட வேண்டிய தொன்றாகும்.

எங்களுக்கு விருப்பமில்லை, கணவர், பிள்ளைகள் சாப்பிட மாட்டார்கள். என்று ஒரேயடியாக ஒதுக்காமல் ஒவ்வொரு நாட் சமையலிலும் பல கறிகளுடன் இவற்றில் ஒன்றையும் சமைத்துப் பழக்கப்படுத்தி வந்தால் நாளடைவில் எல்லோரும் பழகிக் கொள்வார்கள்.

என் சிறிய மகள் சுண்டங்காய் தட்டி வதக்கிக் குழம்பு வைத்தால் மிகவும் விரும்பிச் சாப்பிடுவாள். இது எனது அவதானிப்பு. ஆகவே சிறுவர்களைப் பழக்கப்படுத்துவது எமது கடமை. வீட்டுத் தோட்டத்தில்

மிக மிகக் குறைந்த பராமரிப்பு மூலம் சுண்டங்கத்தரியை வளர்க்கலாம். அத்துடன் மருத்துவ குணமும் உள்ளது.

இப்படி எமது குடும்பத்திற்கு மிகவும் அத்தியாவசிய மருத்துவ குணங்களுள்ள, போசாக்கான சத்துமிகு பயிர் வகைகள் மிக இலகுவாக வீட்டுத்தோட்டத்தில் வளரக்கூடிய பல இருந்தும் நாம் அவற்றை அசட்டை செய்யும்போது எமது உடல் நலமும் அசட்டை செய்யப்பட்டு மிகவும் துன்பத்திற்கு உட்படுகின்றோம் என்பதைக் கவனத்தில் எடுப்போம். எமது உணவுப் பழக்க வழக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் நோய்களில் இருந்து விடுபட முடியும். இதற்கு எமது வீட்டுத்தோட்டம் மிகவும் உறுதுணையாக இருக்கும்.

வீட்டுத் தோட்டத்தில் ஈடுபட்ட பலர் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தரிடம் அதிகம் கேட்கும் கேள்வி வீட்டுத்தோட்டத்தில் பயிர் செய்வது மரக்கறி, பழ மரங்களில் பூச்சி, புழுக்களின் தாக்கத்தால் பெரிய பிரச்சினையாக உள்ளது என்பதாகும்.

சந்தைப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டு தற்போது விவசாயிகள் வர்த்தக ரீதியில் விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கையை மேற்கொண்டு பயிர் செய்யும் போது விவசாய இரசாயனங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து தப்பிப் பிழைத்து பயிர்களுக்கு சேதம் விளைவிக்க கூடிய புதிய உயிர் வகைப் பூச்சிகள் உருவாகியுள்ளன. இதனால் தற்போது பயிரிடப்படும் மரக்கறி, பழப்பயிர் வர்க்கங்களில் பீடைகளை (பூச்சி புழுக்கள், நோய்) (கட்டுப்படுத்துவது) முகாமை செய்வதும் பாரிய சவாலாக உள்ளது.


வீட்டுத் தோட்டங்களிலும் தற்போது வர்த்தக ரீதியில் பயிர்ச்செய்கை பண்ணப்படும் பயிர் இனங்களை (வர்க்கத்தை) பயிரிட்டால் பீடை முகாமை என்பது சவாலுக்குரியதேயாகும்.

எனவே தான் எமது பிரதேசத்தில் இயற்கையாக வளர்ந்துள்ள பாரம்பரிய காட்டினங்களை வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கும் போது குறைந்த பராமரிப்பு முயற்சியுடன் வெற்றிகரமான பயனைப் பெறமுடியும்.

இனி வீட்டுத்தோட்டத்தில் பயிரிடக்கூடிய உள்ளூர் பாரம்பரிய காட்டினங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

**01. இலை மரக்கறியாக பயன்படுத்தப்கூடியவை.**


1) தூதுவளை
2) மொசுமொசுக்கை
3) சிறுகுறிஞ்சா
4) பெருங்குறிஞ்சா
5) சண்டி
6) கறி முருங்கை
7) வாதநாரி
8) தவசி முருங்கை
9) கொவ்வை
10) முல்லை
11) முசுட்டை
12) புதினா
13) வல்லாரை



14) பொன்னாங்கண்ணி
15) செடிப்பசளி
16) கொடிப்பசளி
17) மணித்தக்காளி
18) பூசணி
19) கருவேப்பிலை

**02. மரக்கறிப் பயிராக பயிரிடக்கூடியவை (பூச்சி, புழுநோய் தாக்கம் குறைந்தவை)**

1) கொவ்வை
2) குருவித்தலை பாவல்
3) சுண்டங்கத்தரி
4) கண்டங்கத்தரி
5) வட்டக்கத்தரி
6) பலா
7) ஈரப்பலா
8) பூசணி
9) நீத்துப்பூசணி
10) சுரை
11) பிசுக்கு
12) பனி அவரை
13) இராணி அவரை (சிறகவரை)
14) கத்தி அவரை
15) பால் அவரை
16) கறிவாழை
17) சட்டிக்கறணை
18) மோதகவள்ளி
19) அம்பலங்காய்
20) புளிமா





**03. பழப் பயிர்கள்**

1) வாழை
2) கொய்யா
3) மாதுளை
4) பப்பா
5) விளா
6) மா
7) பலா
8) தேசி
9) அன்னாசி
10) கொடித்தோடை



வீட்டுத்தோட்டத்தை அவற்றின் அமைவிடத்தை அடிப்படையாகக் கொண்டு

1) கிராமப்புற வீட்டுத்தோட்டம்
2) நகர்ப்புற வீட்டுத்தோட்டம்
3) ஓரளவு நகர்ப்புற வீட்டுத்தோட்டம்
4) நன்னீர், நன்மண் அற்ற இட வீட்டுத்தோட்டம்

என வகைப்படுத்தலாம். இதுவரை கிராமப்புற வீட்டுத்தோட்டம் பற்றி பார்த்தோம் அடுத்துவரும் தமிழருவியில் கிராமப்புற வீட்டுத்தோட்டம் தவிர்ந்த ஏனைய வீட்டுத்தோட்ட வகைகள் பற்றி நோக்குவோம்.

# எழுதுங்கள்! வெல்லுங்கள்!

## மாதாந்த கவிதைப் போட்டி இல - 6

மாணவர்களின் கவிதை எழுதும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக மாதாந்தம் இப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவருக்கு முறையே 500/-, 300/-, 200/- வழங்கப்படும். தரப்பட்ட கவிதைகளைத் தொடர்ந்து அந்த சந்தத்தில் நான்கு அடிகள் வீதம் கொண்ட மூன்று பாடல்கள் எழுத வேண்டும். இடைவெளி கீழே தரப்பட்டுள்ளது. இந்த ஆக்கம் குறித்த மாணவருடையது என்பதை அதிபர் உறுதிப்படுத்திய பின்னர்,

# எழுதுங்கள்! வெல்லுங்கள்!

## பாடசாலை மாணவர்களுக்கான மாதாந்த கட்டுரைப் போட்டி இல - 6

"0இளைஞர்களின் ஒழுக்க விழுமியங்களைச் சீர்படுத்துவதில் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளின் பங்களிப்புப் போதுமானதா? இல்லையா?" என்பதை மையமாகக் கொண்டு கட்டுரை அமைய வேண்டும். 500 சொற்களுக்குக் குறையாததாக இருக்க வேண்டும். முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவருக்கு முறையே 1000/-, 750/-, 500/- வழங்கப்படும். இந்த ஆக்கம் குறித்த மாணவருடையது என்பதை அதிபர் உறுதிப் படுத்திய பின்னர்,

த.கணேசமூர்த்தி, தமிழருவி இயக்குநர், உதவி ஆசிரியர், சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. ஆக்கங்கள் கிடைக்கவேண்டிய இறுதித்திகதி 31.03.2012

## இம்மாத கவிதைப் போட்டி

### வானொலி

என்றும் செய்தி தருகின்ற
எங்கள் நண்பன் வானொலியாம்
கண்டு பிடித்தார் மார்க்கோனி
நன்றி சொல்வோம் மகிழ்வோடு

* * *

....................................
....................................
....................................
....................................

* * *

....................................
....................................
....................................
....................................

* * *

....................................
....................................
....................................

**தமிழருவி சஞ்சிகையால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவரிடையேயான கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள் (05)**

கவிதைப் போட்டி

- 1ஆம் பரிசு : 500/-
  இ. ரஜேந்தினி, 2013 கலைப்பிரிவு.
  யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
- 2ஆம் பரிசு : 300/-
  சி. மதுஷா, தரம் 9
  யா/ விக்ரோறியாக் கல்லூரி
- 3ஆம் பரிசு 200/-
  அ. அருள்ராஜ், தரம் 7
  யா/ ஹாட்லிக் கல்லூரி

கட்டுரைப் போட்டி

- 1ஆம் பரிசு 1000/-
  செங்கதிர்ச்செல்வன் சேந்தன், தரம் - 11
  யா/ யாழ். இந்துக்கல்லூரி
- 2ஆம் பரிசு 750/-
  காத்யாஜினி கனகேந்திரன், தரம் 12
  யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.
- 3ஆம் பரிசு 500/-
  சற்குணராசா நிதர்சன், தரம் 12
  யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

பரிசில் பெற்ற மாணவர்களைத் தமிழருவி வாழ்த்துகின்றது. பரிசில்கள் விரைவில் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

# புதிய வேதம்

## தொடர்கதை – அத்தியாயம் 06

வாழ்க்கையில் நாம் எதிர்பார்க்காத ஒன்று நிதர்சனமாக நம் முன்னே நிகழும் போது அதிர்ச்சிக்குள்ளாகி நிற்பது இயல்பாயினும் மகிழ்ச்சி தரும் நிகழ்வாகவிருந்தால் விரைவில் நம் உணர்வுகள் சுயநிலைக்குத் திரும்பி விடுகின்றன. மோட்டார் பைக்கில் வந்து நின்றவனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த சுவேதா தன் முன்னே நின்றவனைப் பார்த்து முகம் மலர்ந்து "வாருங்கள் கடிதம் வந்தால் தாங்கள் வரமாட்டீர்கள் என்று நினைத்தேன்" என்றாள்.

"அன்று வரமுடியாது போய்விட்டது. அதனால் தான் கதடிம் போட்டு இருந்தேன். இன்று ஓய்வாக இருந்தபடியால் மனம் கேட்கவில்லை வந்தேன்"

"எல்லோரும் நின்ற போது வந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் இருந்தாலும் பரவாயில்லை இன்றாவது வந்தீர்களே" என்று கூறி அழைத்துச் சென்றாள்.

கம்பீரமான அவனுருவமும் புன்னகை தளம்பும் முகவசீகரமும் பார்த்தவுடன் மற்றவர்களைக் கவரக் கூடிய விழிகளும் நடையழகும் எந்த ஒரு பெண்ணையும் கவரவே செய்யும் என்பதை சிலநிமிடங்களில் புரிந்து கொண்ட சாருலதா எதிலுமே இலகுவில் ஆசைப்படாத சுவேதா அவனிடம் மனதைப் பறிகொடுத்ததில் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை உணர்ந்து கொண்டாளாயினும் கிறிஸ்தவனான அவனை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் தந்தைக்கு வருமா என்பதில் குழப்பமுற்றாளாயினும் வீட்டுக்கு வந்தவனிடம் சகஜமாகப் பேசி வரவேற்றாள்.


பார்வதியம்மாளும் தன் மகளோடு படிக்கும் ஒரு பையன் என்பதைத் தெரிந்து கொண்டு முகமலர்ச்சியுடன் உபசாரம் செய்து விடை கொடுத்தனுப்பினாள். அவன் சென்ற பின்பு தாயிடம் மெல்ல விடயத்தை சாருலதா கசிய விட்டாளாயினும் எதையும் உறுதிபடத் தெரிவிக்கவில்லை. அந்த விடயம் பற்றி சுவேதாவிடம் எப்படிக் கேட்பது என்று தெரியாதவளாய் குழம்பிப் போயிருந்தாள் பார்வதி.

காலம் மனிதர்களின் செயற்பாடுகளுக்காகக் காத்திருப்பதில்லையே. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி ஐந்து வருடங்கள் உருண்டோடிவிட்டன. காலத்தின் வேகத்தில் மனிதனும் போட்டி போட்டு முன்னேறுகின்ற நிலைமை எல்லோருக்கும் முடிவதில்லையாயினும் சுந்தரம் பிள்ளையின் குடும்பம் வளம் பெருகி விருட்சமாகி விட்டிருந்தது. சுவேதா ஆசிரியையாகி உழைத்துக் கொண்டிருந்தாள். சிவனேசனுக்குப் பல லட்சம் சீதனம் வாங்கிப் பெண்ணையும் ஜேர்மனிக்கு அனுப்பி விட்டிருந்தார்கள். ஊருக்குள் பணக்கார வரிசையில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் அளவுக்கு வளம் மிகுந்த மனிதராகி விட்டிருந்தார். ஆனால் வீட்டுக்குள் நிம்மதியற்ற ஓர்நிலையை சுவேதா ஏற்படுத்தியிருந்தாள். குமுறும் எரிமலை எப்போ வெடிக்கும் என்று பார்வதி கலங்கிக் கொண்டிருந்தாள்.

கணேசன், தான் வேலை பார்த்த பேக் ஹவுஸ் உரிமைக்காரனின் பெண்ணை மணந்து கொண்டதுடன் அவர்களின் மதத்துக்கு மாறி கிறிஸ்தவ தேவாலயத்தில் அங்கத்துவமும் பெற்றுக் கொண்டான். அவனும், பார்த்தீபனும் சகோதரி விடயத்தில் தங்கள் ஆதரவைத் தெரிவித்துச் சுந்தரம்பிள்ளைக்குக் கடிதம் போட்டிருந்தனர். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகவிருந்தது அவர் நிலை. எந்த நேரம் வீட்டுக்கு வந்தாலும் பார்வதியம்மாளுடன் தான் தனது இயலாமைத் தன்மையைக் காட்டிக் கொள்வார். சுவேதா அவருடன் பேசுவதையே நிறுத்திவிட்டிருந்தாளாயினும் கணேசனுடைய திருமணம் அவளுக்கு மகிழ்ச்சியூட்டி விட்டிருந்தது.

மாலைக் கதிரவன் மேல் வானில் மேகக் கூட்டங்களுக்குச் செம்மஞ்சள் வர்ணம் தீட்டியிருந்தான். இயற்கை அன்னை கணத்துக்கு கணம் எவ்வளவோ அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறாள்.

ஆக்கம்: கே.எஸ்.ஆனந்தன்



மனிதர்களின் வாழ்க்கையும் இப்படிப்பட்டது தான் எனச் சொல்லாமல் சொல்லும் தத்து வார்த்தங்களை புரிந்துகொள்ளாது மனிதர்கள் தங்களால் எதையும் செய்து கொள்ள முடியும் என நினைத்துக் கொள்கின்றார்கள். ஆனால் பொறுமையிழந்து இயற்கை சீற்றங் கொள்ளும்போது தான் கலங்கிப் போகின்றனர் எனச் சிந்தித்தவாறே இருந்த சுவேதா கதிரவன் மறைந்து இருள் கவ்விக் கொண்டதை உணர்ந்ததும் எழுந்து குளியலறைக்குச் சென்று முகம் கழுவி பூசையறையில் விளக்கு ஏற்றச் சென்றாள்.

"ஏன் சுவேதா மணி ஆறரையாகுது இதுவரை விளக்கேற்றாமல் என்ன செய்து கொண் டிருந்தாய்?" என்று கேட்டவாறே உள்ளே வந்தாள் பார்வதி.

"கணத்துக்கு கணம் மாறும் இயற்கையின் அற்புத லீலைகள் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். பொழுது போனது தெரியவில்லை" என்று சிரித்தாள்.

"ஏன் சுவேதா நீ ஏதும் ஆராய்ச்சி பண்ணுறியா?"

"அம்மா நான் ஏதும் ஆராய்ச்சி செய்யவில்லை. உலகத்தில் மனிதர்கள் நிலையான வாழ்க்கை நிரந்தரம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எப்ப என்ன நடக்குமோ, இன்றிருப்பார் நாளை இல்லை என்று உணராதவர்களாய் வாழ்கிறார்கள். ஆனால் இயற்கையைப் பாருங்கள் ஒரு நேரம் வெயில். பின்பு

மப்பும் மந்தாரமாயிருக்கு, இருந்தாற்போல காற்றடிக்குது மழையும் தூறுது. ஒரு மணித்தியாலத்துக்கு முன்பு அழகாய் செம்மஞ்சள் நிறத்திலிருந்த வானம் இருள் மூடிவிட்டது. இப்படித் தானேயம்மா மனித வாழ்க்கையும் இதை உணராதவர்கள் வரிசையில் அப்பாவும் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று பிடிவாதம் பிடிக்கிறாரே. ஏன்?"

"சுவேதா நான் படிக்காதவள். உப்படியெல்லாம் கதைக்க தெரியாதடியம்மா. அந்த மனிதரிலை ஒன்றுமில்லை. உன்ரை மாமிக்காரி அந்தாளை ஏவிக் கொண்டிருக்கிறாள் கடவுள் இருக்கிறார். எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும். நீ அவசரப்பட்டு அப்பாவிடம் எதுவும் கதைத்துப் போடாதை'' என்றவளுடைய கண்கள் கலங்கிவிட்டன.

"அம்மா நான் கதைப்பதையே நிறுத்திவிட்டன். ஆனால் அவருடைய விருப்பம் நிறைவேறாது. உங்களைக் கண் கலங்கச் செய்யமாட்டன். இது சத்தியம்'' என்று தாயின் விழிகளிலிருந்து பெருகிய நீரைத் துடைத்துவிட்டு அவளைக் கட்டிக் கொண்டாள்.

சுந்தரம்பிள்ளையின் சகோதரி மகனும் கனடாவிலிருந்து வந்திருந்தான். தாய் மரகதத்தின் விருப்பத்துக்கிணங்கத் தான் அவன் ஊருக்கு வந்திருந்தான் அவனைப் பற்றி ஊருக்குள் பல்வேறு கதைகள் உலா வந்து கொண்டிருந்தன. அதனை உறுதிப்படுத்துவ தாகவும் தங்கைக்கு கடிதம் எழுதியிருந்தான். ஆனால் சுந்தரம்பிள்ளைக்கு எதுவும் ஒரு பொருட்டல்ல என்பது போல நடந்து கொண்டார்.

தாயும் மகனும் ஒரு நாள் மாலையில் மோட்டார் சைக்கிளில் வந்திறங்கினர். சுந்தரம் பிள்ளைக்கு ஒரே சந்தோஷம். வீட்டுக்கு வந்தவர்களைப் பார்வதி நல்லமுறையில் உபசரித்தாள். நல்லவேளையாகச் சுவேதா பாடசாலையால் வரவில்லை. அதுவரை பார்வதிக்கு சந்தோஷம்.

"எங்கே மச்சாள் பிள்ளையைக் காணவில்லை. இன்னும் ஸ்கூலாலை வரவில்லையே. இவ்வளவு நேரமும் அங்கே என்ன வேலை?'' என்றாள் மரகதம்.

"பரீட்சை நெருங்குது. மேலதிக வகுப்பு என்று சொன்னவள். வாற நேரம் தான்'' என்ற பார்வதி அவள் இப்போதைக்கு வராமல் இருப்பதே நல்லது என்ற மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

"அவள் வாற நேரம் வரட்டுக்கும் அதற்கிடையில் நாங்கள் சில விசயங்கள் கதைக்க வேணும்'' என்று ஆரம்பித்தாள் மரகதம்.

"என்ன மரகதம் என்ன கதைக்கப் போறாய்? உனக்கிருப்பது ஒரே பையன். இருக்கிற சொத்து இரண்டு தலைமுறைக்கு காணும். தம்பி மீண்டும் கனடா போறது தானே? வேறு என்ன விசயம்? தை மாதம் நாள் பார்த்தா இங்கேயே கல்யாணத்தை முடித்து அனுப்பலாம் தானே? நீ வேறு ஏதும் பிளான் வச்சிருக்கிறியே?'' என்றார் சுந்தரம்பிள்ளை.


"அண்ணே என்ன இருந்தாலும் எங்கடை சனம் வெறும் பொம்பிளை எடுத்தது என்று கதைகள் கதைக்கும். அது மட்டுமல்ல. இல்லாத பொல்லாத கதைகளும் கதைக்கும். ஏன் நான் பச்சையாச் சொல்லுறனே. இவன் அங்கே பொம்பிளை வைச்சிருக்கிறான் பிள்ளைகளும் இருக்கு அதனாலை சீதனமில்லாமல் மச்சாள்காரியை அவனுக்கு கல்யாணம் செய்கிறாள் மரகதம் என்று சனம் கதைக்குது. நீங்களும் கேள்விப்பட்டிருப்பியள் அதனாலை தான்... உங்களுக்கும் விளங்கும் தானே?'' என்று கதையை முடித்தாள்.

"மம்மி இது என்ன பெரிய விடயம்? அந்த நாட்டிலை இது வெறி சிம்பிள் உங்களுக்குத் தேவை என்றால் நீங்கள் வாங்கலாம். அந்த நாட்டு கல்ச்சர் கல்யாணம் செய்யலாம். விருப்பமில்லையோ, ஏதும் பிரச்சினையோ டிவோஸ் வாங்கலாம். அம்மா சொன்ன விடயம் பொய் இல்லை. உண்மை தான். அவள் என்னை விலக்கி விட்டிட்டாள். பட் நான் சுவேதா போட்டோ பார்த்தனான். மம்மி அனுப்பியிருந்தா, பார்த்த அன்று தொடக்கம் எனக்கு வேறு சிந்தனையே இல்லை. ஐலைக் சுவேதா. ஐ லவ் சுவேதா அவளைப் பார்க்கணும், பேசணும் என் மனதிலுள்ளதை கொட்டித் தீர்த்து அவள் சம்மதத்துடன் கல்யாணம் செய்யணும்'' என்று கூறிக் கொண்டிருந்தான்.

"தம்பி கல்யாணம் முடிஞ்சாகவே நினைத்துக் கொள்ளுங்கள். என்ன மரகதம் யோசனை? தம்பி சொன்னவைக்கு மாறாக நீ ஏதும் கதைக்கப் போறியே. ஊரார் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? கல்யாணச் செலவு சகலதும் நானே பார்த்துக் கொள்ளுகிறன். வேறு என்ன வேணும்'' என்ற சுந்தரம்பிள்ளையை நவநீதன் இடைமறித்துக் கூறினான்

"அங்கிள்! இங்கே உள்ள சொத்துக்களைவிட அங்கே வீடு சொந்தமாயிருக்கு. மேல்மாடி இரண்டும் வாடகைக்கு விட்டிருக்கிறன். இங்கே தான் காணி, பூமி வாங்கணும் என்று ஓடித்திரியுது சனம். அங்கே வாழ்க்கையை சந்தோஷமாய் அனுபவிக்கணும் என்று தான் ஒவ்வொருத்தனும் உழைக்கிறான். வாழ்க்கையை மகிழ்ச்சியாய் கொண்டாடுகிறான்''

"தம்பி குறுக்கே நான் கதைக்கிறன் என்று தவறாக நினைக்காதீங்கள். எங்கடை பண்பாடு வேறை, மேல்நாட்டு பண்பாடு வேறை, இங்கே கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற நம்பிக்கையுடன் கணவனே தெய்வம் என்ற நம்புகின்ற மக்கள். அதிலும் சுவேதா படித்த பெண். நான் படிக்காதவளாயிருந்தாலும் அவளையும் ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு...'' என்று பேச்சைப் பார்வதி முடிக்கு முன்பு "பார்வதி'' என்று அவளை மேலே பேசாமல் தடுத்தார் சுந்தரம்பிள்ளை.



"ஏன் மச்சாள் தெரியாமல் தான் கேட்கிறன். வெளிநாட்டுக்கு போறதுக்குப் படிச்ச பெட்டைகளே பாய்ஞ்சோடித்திரியுதுகள். இப்படி வலிய வந்து கேட்டதாலே உங்களுக்கு கசக்குதோ? இல்லை அவளுக்குத்தான் கசக்குதோ?" என்று கேட்டாள் மரகதம்.

"அவள் பேச்சை விடு மரகதம். என்ரை பேச்சைமீறி யாரும் நடந்ததில்லை. சுவேதா கொஞ்சம் வாய்த் துடுக்காக கதைப்பாளே தவிர எல்லோரையும்விட அவள் புத்திசாலி வாழைப்பழம் வேண்டாம் என்று குரங்கு இருக்குமோ?"

"அங்கிள் நீங்கள் என்ன செய்வீர்களோ, சொல்வீர்களோ அதைப் பற்றி கவலையில்லை. இந்தக் கல்யாணம் நடந்தேயாகணும்" என்றான் நவநீதன்.

"நான் தான் சொல்லிவிட்டேனே. அப்புறம் என்ன?"

"அங்கிள் சுவேதா பெயரிலை எது எழுத வேணுமோ அது எல்லாம் எழுதி விடுகிறேன். என்ன மம்மி நான் சொல்லுறது சரி தானே?" என்றான்.

"அவள் எனக்கு மருமகளாய் வரக் குடுத்து வைச்சிருக்கணும். ஏன் மச்சாள் உங்கடை கதையை பற்றி யோசித்தேன். சுவேதா எங்காவது யாரையும் செற் பண்ணி வைச்சிருக்கிறாளே" என்று மரகதம் கேட்டதும் எதுவும் பேசாமல் உள்ளே போய் விட்டார் பார்வதி.

"மம்மி எல்லோரையும் ரென்சனாக்கிட்டா. அங்கிள் நாங்கள் போய் விட்டு வாரோம் நாளைக்கு சுவேதாவிடம் நேரத்துடன் வரச் சொல்லி விடுங்கள்" என்று கூறி விடை பெற்றுச் சென்றான் நவநீதன்.


அவர்கள் சென்ற பின்பு சுந்தரம்பிள்ளையும் எங்கேயோ புறப்பட்டுச் சென்றுவிட்டார். சுவேதா வந்து மறுநாளைக்கான கல்லூரிப் பாடங்களில் மூழ்கியிருந்தாள். இரவு உணவுக்காக இடியப்பம் தயாரிக்கும் முயற்சியிலிருந்த பார்வதியின் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. பணம் மனிதர்களை எவ்வளவுக்கு மாற்றியமைத்து விடுகின்றது. பணமிருந்தால் எதையும் செய்து விடலாம் என்ற எண்ணத்தில் அலையும் மரகதமும் மகனும் ஒரு புறம் பண ஆசையால் பகுத்தறிவையும் பண்பாட்டையும் இழந்து நிற்கும் தன் கணவனையும் நினைத்து மனம் குமுறிக் கொண்டிருந்தாள்.

சுவேதாவின் மனம் அறிந்தவளான தாய் பார்வதி தன் பிள்ளையின் நல்வாழ்வுக்கு ஏதும் குந்தகம் வந்திடுமோ என்று தவித்துப் போயிருந்தது. அந்தத் தாயுள்ளம் மகளுடைய நிலைப்பாட்டை இது வரை நாள் மறைத்து வைத்திருந்தாள். எத்தனை நாளைக்குத் தான் மறைக்க முடியும்? சுந்தரம்பிள்ளைக்கு தெரிந்திருந்தாலும் அவர் அது பற்றி அலட்டிக் கொள்ளாது தன் நிலைப்பாட்டிலேயேயிருந்தார். ஏதோ ஒரு முடிவு வராமலா போய்விடும் என்று நினைத்தவளாய் எழுந்து வந்து வெளியே நின்றாள். சில நிமிடத்தில் சுந்தரம்பிள்ளையும் வந்துவிட்டார். சுவேதாவிடம் எவரும் எதுவும் பேசவில்லை.

காலை மலர்ந்தது சுந்தரம்பிள்ளை சந்தைக்கு போய்விட்டார். சுவேதா கல்லூரிக்குச் செல்வதற்கு தயாராக வெளியே வந்தாள். அதே சமயம் அவர்களின் வீட்டு முற்றத்தில் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கி நடந்து வந்தான் நவநீதன். காலை மலர்ந்த ரோஜா போல் நிற்கும் சுவேதாவை உற்று நோக்கியவாறே வந்த நவநீதன் "குட்மோனிங் சுவேதா" என்றான்.

"குட்மோனிங் நீங்கள் யார்? அப்பா மார்க்கட்டுக்கு போய் விட்டார்"

"நான் உங்களைப் பார்க்கத் தான் வந்தேன். நேற்று ஈவினிங் பூரா எதிர்பார்த்து நேரம் போனதால் போனோம். உங்களை நேரில் பார்க்க வேண்டும் என்பதால் மம்மிக்கும் சொல்லாமல் தனியாக வந்தேன்" என்றான்.



"ஓ கோட். நீங்கள் மரகதம் மாமியின் மகன் நவநீதன் தானே?"

"யா" என்று சிரித்தான்

"அடையாளமே தெரியாமல் மாறிப் போய் விட்டீர்கள்"

"நீங்களும் தான் சுவேதா சின்ன வயதில் பார்த்தது. அழகுத் தேவதையாய் மாறிவிட்டீர்கள். ஸ்கூலுக்கு கிளம்பிவிட்டீர்களா?"

"ஆமா. வாற கிழமை ஓ.எல் எக்ஸாம் தொடங்குது. அதற்காகப் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டியிருக்கு. வெளியிலேயே நிற்கிறீங்க உள்ளே வாங்களேன். அம்மா யார் வந்திருக்கிறார் என்று பாருங்கள்" என்று தாயையும் அழைத்தாள்.

பார்வதி வெளியே வந்து "வாங்க தம்பி உட்காருங்கள்" என்றார்.

"அன்ரி நீங்கள் சுவேதாவிடம் நேற்று நாங்கள் வந்தது பற்றி எதுவும் சொல்லவேயில்லைப் போலிருக்கே" என்றான்.

"எனக்கு எங்கே நேரம்? அவரும் நேரம் செல்லத் தான் வந்தார் சுவேதா பாடசாலைப் பாடங்களுடனிருந்தாள். எதுவும் சொல்லவில்லை. அதோ அவரும் வந்துவிட்டார்" என்று கணவன் வந்ததைக் சுட்டிக்காட்டிவிட்டு திரும்பினாள்.

"அப்பா வந்தாச்சு எனக்கும் நேரமாச்சுது. நீங்கள் அப்பாவுடன் கதையுங்கள் நான் போய் வாரேன். அம்மா போயிட்டு வாரோன்" என்று கூறிவிட்டுப் பறப்பட்டுச் சென்றாள்.

"தம்பி அம்மா வரவில்லை. தனியத்தான் வந்தீர்களா? நான் எங்கடை சாத்திரியாரைப் பார்த்து நாள் பார்த்துக் கொண்டு வாரேன்" என்றார்.

"சுவேதாவைப் பார்க்கணும் போலிருந்தது. வந்திட்டன். நீங்கள் சுவேதாவிடம் கதைத்தனீங்களே"

"அவளுக்குத் தெரியும் தானே. என்ன கதைக்கக் கிடக்கு. மூத்தவளும் முதலில் மாட்டேன் என்றிருந்தவள். பையன் வெளிநாடு போறான் என்றதும் சம்மதித்துவிட்டாள். உங்கடை விடயம் அப்படி யில்லையே. பெரியவனும் சொல்லிப் போட்டான். இப்ப இங்கை மண்டபம் புக் பண்ணனும் நேரத்துடன் நாள் வைச்சால் தான் சுகம் அதனால் தான்.. நீர் சுவேதாவுடன் கதைத்தனீரே" என்றார்.

"கதைச்சனான் படிச்சதுக்கு ஏற்ற மிடுக்கும் இருக்கு. எதுவானாலும் அப்பாவுடன் கதையுங்கள் என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்."

"இங்கே போராட்டம் வந்து எல்லாவற்றையும் மாற்றிப் போட்டுது தம்பி வெளிநாட்டுக்கு போனவை இங்கை வரத் தொடங்கி எங்கடை பழைய நடைமுறை களைக் கூட மாற்றிவிட்டது. எந்த இடத்திலும் பெண்பிள்ளைகளே உயர் பதவிகளில் இருக்கிறார்கள். பெடியள் சிலர் படித்து முன்னுக்கு வந்தாலும் மற்றதுகள் தலைகீழாய்த் திரியுதுகள். எல்லாம் கலப்படக் கலாச்சாரமாய் மாறிக் கொண்டிருக்கின்றது" என்று கூறியவர் பார்வதியைக் கண்டதும் கதையை நிறுத்திக் கொண்டார்.

"அங்கிள் எங்கடை ஊரைப் பார்க்கும்போது தெரியுதே. உலகமே மாறி வருகின்றது. நாங்களும் ஊர் ஓடும்போது ஒத்து ஓடத்தானே வேணும்" என்று சிரித்தான்.

"அது மட்டுமில்லைத் தம்பி பணம் வரவர மனிதர்களின் குண இயல்புகளுமல்லவா மாறிக் கொண்டிருக்குது. உறவுக்குள்ள இருந்த பந்த பாசத் தொடர்புகளை பணம் தான் முடிவு செய்து கொள்கின்றது. எல்லோரும் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்று தான் நான் நினைக்கிறன். விதியின் விளையாட்டு எப்படியிருக்கோ? யார் கண்டார்கள். கடவுள் தான் காப்பாற்றணும்" என்று கூறிவிட்டு உள்ளே சொன்றாள் பார்வதி.

"அங்கிள் டேற்பிக்ஸ் செய்தால் சுவேதாவை ஸ்கூலுக்கு போகாமல் நிற்பாட்டலாம் தானே?" என்று நவநீதன் கூறியதற்கு சுந்தரம்பிள்ளை பதில் கூறுமுன் வெளியே ஓட்டோ வந்து நின்றது.

ஓட்டோவிலிருந்து இறங்கி வந்த ஓட்டுநர் பையன் "ஐயா! டீச்சர் அக்கா 'ஆக்சிடன்' பட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறோம். உங்களுக்குச் சொல்லச் சொன்னா" என்றான்.

இருவரும் அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றிருந்தனர்.

(வளரும்)


## கட்டிய கொட்டில் வீடு

தென்னையின் ஓலை வெட்டி
அன்னையே பின்னிக் கட்டி
அள்ளி நீர் தெளித்து அங்கே
வெள்ளியே நாளும் பார்த்து
கட்டிய ஓலைக் குடில்.

காவோலை தூது சொல்ல
கங்குமட்டை பாட்டுப் பாட
பன்னாடை பாசாங்கு செய்ய
பனம் பழத்தில் பாத்திபோட்டுப்
பூரானும் வெட்டித் தின்றோம்

வேலியெல்லாம் மதிலாமிப்போ
கதியாலெல்லாம் தூணாமிப்போ
களிமண்ணும் சீமெந்தாம்
ஆளில்லை எல்லாமே இயந்திரமாம்
கல்வீடு கட்டி இங்கே
குடியிருக்க முடியவில்லை

காற்றுமே தென்றலில்லை
ஏற்றமே வாழ்விலில்லை
மாற்றமே தோற்றமென்று
கட்டிய வீட்டினிலே
ஓலைக் குடிற் சுகத்தை
ஒருபோதும் காணவில்லை.



கொட்டடி
சி. சிறீதரன்
(சமுர்த்தி முகாமையாளர்)

## எப்போ இந்த ஒலி பெருக்கி?

எங்கள் கோவிலில் இப்போது திருவிழா
எல்லா நேரமும் ஒலிபெருக்கி சத்தந்தான்
எங்களின் இல்லமருகில் இருப்பதால் எப்போதும்
எங்கள் பாடு பெரும்பாடாகி விடும்
எங்கே ஓடினு மங்கே சத்தந்தான்
எங்கே போக? யாருடன் நோக?
எங்கள் பெருமானே! ஏனிந்த சோதனை
எப்போ ஓயும் இந்த ஒலி பெருக்கி?
சற்றே கேளுங்கள் சாற்றுகிறேன் வேதனையை
சங்குசத்த மென்றாலும் சங்கட மாகாதோ?
முற்றும் துறந்தாலும் முனிவர்க்கும் சினமுண்டு
துறவாத எமக்கு மூளாதோ கோபம்?
கற்றதும் மறந்து கடும் வார்த்தை வருமன்றோ!
காரியங்கள் கெடுவதோடு கதைப்பதும் கேளாதே
எற்றும் யோசியாத செயலன்றோ இதுவாகும்
சாற்றுமிந் தவொலி பெருக்கி எப்போ ஓயும்?
மாணவர் கற்கலாமோ மற்றவர்கள் இருக்கலாமோ
மனந்தான் ஆறுமோ மார்புநோய் மாறுமோ
காணவந்தவர் அழைப்பது காதில் விழுமோ
கள்வர்வந் தால் கத்தியது அப்பால் கேட்குமோ
தேனாக இருந்தாலும் தெவுட்டாதோ கூறும்?
செவிடாக போனால் செலவு தருவாரோ
ஏனிந்த கொடும் செயல்பாடும் கடவுளே!
எப்போ ஓயும் இந்த ஒலிபெருக்கி?

பா. பாலச்சந்திரன்
மயிலணி, சுன்னாகம்.

# சைவ சித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர்களின் பங்களிப்பு



சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
*B.A. Dip-in-Edu, S.L.E.A.S., M.A.*

கட்டுரைத் தொடர் - 6

## சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் (1854-1854)

யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் உடுவிலைச் சேர்ந்த முத்துக்குமாரக் கவிராயர் மரபிலே 18.01.1955இல் அம்பலவாணர் தம்பதிகளுக்கு புத்திரராகக் குமாரசுவாமிப் புலவர் தோன்றினார். இளமையிலே முருகேசபண்டிதரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். பின்பு நாகநாத பண்டிதரிடம் தென்மொழியையும் வடமொழியையும் கற்றுத் தேறினார். இவருடைய தந்தையார் சைவ சித்தாந்த நூல்களிலும், புராண இதிகாசங்களிலும் நல்ல பாண்டித்தியம் உடையவராக இருந்ததோடு தமது இல்லத்தில் திருமுறைகளை ஓதல், ஓதுவித்தல், புராண படனங்களைப் படிப்பித்தல் போன்ற கைங்கரியங்களில் ஈடுபட்டிருந்தார்.

இவருடைய கல்வி ஞானத்தைக் கண்ட சி.வை. தாமோதரம்பிள்ளை தான் நிறுவிய ஏழாலை சைவ வித்தியாசாலைக்கு இவரைத் தலைமை ஆசிரியராக நியமித்தார். உதயபானு, இலங்கை நேசன், விஞ்ஞான வர்த்தினி போன்ற பத்திரிகைகளில் சமய இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றைத் தொடந்து எழுதி வந்தார். 1902ஆம் ஆண்டிலிருந்து ஆறுமுகநாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அமரராகும் வரை அதிபராகக் பணியாற்றி வந்தார். பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் நாவலர் பாடசாலையில் இவருடைய மாணாக்கர்களாக இருந்தார்கள். நாவலருடைய மரபைப் பின்பற்றிப் பல ஆலயங்களுக்கும் சென்று சமயப் பிரசங்கங்களும் செய்து வந்தார். பல ஆலயங்களின் மீது பதிகங்களும், ஊஞ்சல் பாடல்களும் பாடியுள்ளார். இதோபதேசம், தமிழ்ப் புலவர் சரித்திரம் ஆகிய நூல்களை எழுதியதோடு தண்டியலங்காரம், நீதி நெறி விளக்கம் என்பவற்றுக்கு சிறந்த உரை நூல்களும் எழுதியுள்ளார்.

## அருணாசல தேசிகர் (1888-1969)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சைவ சமயத்தை அழியவிடாது பாதுகாத்து வளர்த்த பெரியார்களில் அருணாசலதேசிகர் முக்கியமான ஒருவராகப் போற்றப்படுகின்றார். இவர் மட்டக் களப்பு பிரதேசத்தில் உள்ள புளியந்தீவு என்னும் கிராமத்தில் காசிநாத சாத்திரியாரும் சின்னப்பிள்ளை அம்மையாரும் செய்த தவத்தின் பயனாக 1888ஆம் ஆண்டில் திரு அவதாரம் செய்தார். அந்நியர்களாகிய ஆங்கிலேயருடைய ஆட்சியில் நமது நாடும் மதமும் மொழியும் நலிவுற்றிருந்த வேளையில், வடக்கிலே நாவலர் பெருமான் தோன்றிச் சைவ சமய வளர்ச்சிக்குப் பணிகள் பல புரிந்தது போல அருணாசலதேசிகர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பணிகள் பல புரிந்தார். சிவப் பணிகள் புரிவதையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த அருணாசல தேசிகர் தனது 81ஆவது வயதில் 1969ஆம் ஆண்டு சிவபதம் அடைந்தார்.

நாவலர் பெருமானைப் போல இவர் சைவ சமயச் சொற்பொழிவுகள் செய்வதில் வல்லவராக இருந்தார். மட்டக்களப்பில் இவர் சொற்பொழிவாற்றாத கிராமங்களே இல்லை எனலாம். சிறுதெய்வ வழிபாட்டு முறையில் இருந்து ஆகம வழிபாட்டுக்கு மாறிக் கொண்டிருந்த மட்டக்களப்பில் ஆகம வழிபாட்டிற்கு விளக்கம் கொடுப்பவராக இவர் விளங்கினார். ஆலய வழிபாட்டின் முக்கியத்துவம் நித்திய நைமித்திக பூசை முறைகள், வழிபாட்டு முறைகள் என்பன பற்றி மக்களுக்குச் சரியாக விளக்கமளித்து தனது சொற் பொழிவுகளை ஆற்றினார். சைவ சமய ஆசாரங்களைப் பேணுவதையும், ஒழுக்கத்தோடு வாழ்வதையும் மற்றவர் மேல் அன்பு காட்டுவதையும் சமய நூல்களைக் கற்று அறிவு பெறுவதையும் இவர் பெரிதும் வலியுறுத்தினார்.

சைவ சமயக் களஞ்சியம் என்ற பெயரில் சைவ சமய நூல்களை ஒரு தொகுதியாக எழுதி வெளியிட்டார். இவருடைய நூல்களில் சைவசமய சிந்தாமணி என்ற நூல் சாதாரண மக்கள் முதல் பல்கலைக்கழக ஆய்வாளர் வரை பயன்படுத்தப்படும் நூலாக சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. கடவுள் இயல், ஆன்ம இயல், பாச இயல் என்ற மூன்று தலைப்புக்களில் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் இயல்பினைச் சிறப்பாக விளக்கியுள்ளார். புலவர்மணி ஆ.பெரியதம்பிப் பிள்ளை இவரால் எழுதப்பெற்ற சைவசமய சிந்தாமணி என்ற நூலின் பெருமையை இந்நூலிற்கு வழங்கிய சிறப்புப் பாயிரத்தில் பின்வருமாறு போற்றிப் பாடியுள்ளார்.

முப்பொருளினியல்பறியார் முன்னவனா
லயவமைப்ப மறியார் முன்னோர்
செப்ப மனுபவ மறியார் சிவகதையின்
குறிப்பறியார் சிவசின்னத்தின்
ஒப்பரியவுயர்வறியா உறுதீட்சை

யுமதேசமறியாரேனும்
தப்புதலிலாது சைவ சமய சிந்தா
மணி கற்றார் சைவங் காண்பார்.

## ஏழாலைக் கிராமம் தந்த சைவசித்தாந்த அறிஞர்கள்

### அருளானந்தசிவம்

ஏழாலை கிழக்கில் வாழ்ந்த பிரசித்தி பெற்ற சித்த வைத்தியர் ஐயம்பிள்ளை அவர்களின் புத்திரன் பொன்னையா அவர்கள் வைத்தியக் கல்வியைப் பாரம்பரியமாகத் தந்தையிடமிருந்து கற்றதுடன் தமிழ், சமயம், ஆங்கிலம் ஆகியவற்றிலும் கற்றுத்தேறிச் சிறந்த கல்விமானாகத் திகழ்ந்தார். சடைவரத சுவாமிகளின் அருட் பார்வைக்கு உட்பட்ட பொன்னையா அவர்கள் அருளானந்தசிவம் என்ற தீட்சா நாமத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவர் பலதுறைக் கல்வியறிவுடன் அருளாளர் களின் தொடர்பால் விளைந்த அறிவும், இயற்கை விவேகமும் நிறைந்தவராக இருந்தார். பல வருடங்களாகத் தென் இந்தியாவில் வாழ்ந்ததினால் ஞானிகளினதும் சைவ சித்தாந்த அறிஞர்களினதும் தொடர்பினைப் பெற்றிருந்தார்.

சிறந்த வைத்தியராகவும், சித்தாந்த அறிஞராகவும் திகழ்ந்த பொன்னையா அவர்கள் சிறந்த சமயச் சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தார். சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், திக்கம் வை. செல்லையா ஆகியோருடன் நட்பு பூண்டிருந்த இவர் சைவ சித்தாந்த அறிவாராய்ச்சித் துறையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய சைவ சித்தாந்த சொற்பொழிவுகள் மிக ஆழமான கருத்துக்களைக் கொண்டனவாகவும் அனுபவ உணர்ச்சிப் பரிமளிப்பு உடையனவாகவும் காணப்பட்டன. சந்தேகத்துடன் வினாக்களைக் கேட்பவர்களுக்குத் தகுந்த விடைகளைக் கூறி அவர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார்.

வைத்தியக் களஞ்சியம், கயாவல்லி என்னும் மாத சஞ்சிகைகளை நடாத்தி வந்தார். பரராச சேகரம் என்னும் வைத்திய நூலை ஆராய்ந்து அச்சில் பதிப்பித்தார். சிவனை முழுமுதற் கடவுளாகக் கூறும் சுவேதாஸ்வதர உபநிடதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். இம்மொழி பெயர்ப்பு இந்து சாதனம் பத்திரிகையில் வெளி வந்தது.

சைவ சித்தாந்த பாட போதனையில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வந்தார். தெல்லிப்பளையில் சில காலம் இவரால் சைவ சித்தாந்த வகுப்புகள் நடாத்தப்பட்டன. மதமாற்ற முயற்சியை வியாபாரமாகக் கொண்டு ஒழுகுவோரைக் கண்டித்து வந்தார். மடாலயத்தை ஆத்ம ஞானம் பிரகாசிக்கும் இடமாக உருவாக்குவதில் பெரும் முயற்சிகள் எடுத்துச் செயற்பட்டார். உடல் நோயை நீக்கும் வைத்தியமும் உயர் நற்கதி அடைய வழி காட்டும் ஆன்மிகமும் ஒருங்கே கைவரப் பெற்ற அருளானந்தசிவம் 1948 தை உத்தர தினத்தில் சிவபதம் அடைந்தார்.

### சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம்

அருளானந்தசிவத்தின் ஆன்ம ஞான வாரிசாய்த் திகழ்ந்தவர்களில் மு. ஞானப்பிரகாசம் BA, B.Sc. அவர்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றார். ஏழாலை மேற்கில் அமைந்திருந்த சாதுசங்க மடமே இவருடைய சைவ சித்தாந்த அறிவின் பிரகாசத்திற்கு மூலமாக அமைந்திருந்தது. சாது சங்க மடாலயத்தில் சடைவரத சுவாமிகள் தலைமையில் அடியார்கள் கூடிச் சித்தாந்த விசாரணைகள் செய்து கொண்டிருந்த காலத்தில் ஞானப்பிரகாசம் சிறுவனாகக் கலந்து கொண்டார். மடத்திலிருந்த சாதுக்கள் சந்நியாசிகளுடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

அகில இலங்கைச் சைவ மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து வருகை தந்த சித்தாந்த அறிஞர்கள் வச்சிரவேலு முதலியார், C. K. சுப்பிரமணிய முதலியார் போன்றோரின் தலைமையில் சித்தாந்தப் பேச்சுக்கள் பல நிகழ்த்தியுள்ளார். இந்து சாதனம், ஈழகேசரி முதலிய பத்திரிகைகளில் பல சித்தாந்தக் கட்டுரைகள் எழுதியுள்ளார். 1947ஆம் ஆண்டு வெளியான சிவதொண்டனில் மெய்கண்டார் திருவுள்ளம் என்ற கட்டுரையை எழுதினார் சித்தாந்தம் பற்றிச் சிவதொண்டனில் பத்துக் கட்டுரைகள் தொடராக எழுதினார். பின்னர் இக்கட்டுரைகளைச் சிறு சிறு சூத்திரங்களாக்கிச் சிவஞானபோத சூத்திரங்கள் போல அமைத்துச் சிங்கள மொழிபெயர்ப்புடன் அதனைச் சிறுநூலாக வெளியிட்டுள்ளார். இவருடைய சித்தாந்த அறிவுத்திறன் பற்றிக் கொண்ட யோகர்சுவாமிகள் சிவதொண்டன் நிலையத்தில் பெரிய அளவில் இவரைக் கொண்டு சித்தாந்த வகுப்புகள் நடாத்துவித்தார். சோல்பரிப் பிரபுவின் மகனுக்கு சைவசித்தாந்த உண்மைகளைக் கற்பித்த குருவாகவும் திகழ்ந்தார். இவர் ஆற்றிய சைவ சித்தாந்தப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினர் இவருக்கு சித்தாந்த வித்தகர் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்கள்.

ஈழத்துப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீஸ்வரத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து அடியார்கள் சகிதம் பாத யாத்திரை செய்து வணங்கி வருவதை திருவடி யாத்திரையாக வருடம் தோறும் செய்து வந்தார். திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தின் திருப்பணிச் சபையின் தலைவராகப் பல வருட காலம் பணியாற்றி வந்தார். சேர். பொன். இராமநாதனால் ஆண்களுக்கென நிறுவப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியில் மாணவனாக ஆசிரியராக, அதிபராக எல்லாம் திகழ்ந்த ஞானப்பிரகாசம் அவர்கள் பரமேஸ்வர தரும சாதனத்துக்கு சிவபதம் அடையும் வரை சட்டபூர்வமான பொறுப்பாளியாகத் திகழ்ந்தார்.

### வித்துவான் மு. கந்தையா (1917-2002)

ஏழாலை மேற்கில் முத்தர் அன்னப்பிள்ளை தம்பதிகளின் தவப்புதல்வனாக வித்துவான் கந்தையா அவர்கள் 19.06.1917இல் தோன்றினார். சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் 1922ஆம் ஆண்டில் அருளானந்தசிவம் அவர்களால் இவருக்கு

வித்தியாரம்பம் செய்யப்பட்டது. 1938ஆம் ஆண்டில் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக் கொண்ட இவர் 1960ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகத்தால் நடாத்தப் பெற்ற பட்டதாரிப் பரீட்சைக்குத் தோற்றிச் சமஸ்கிருதத்தில் சிறப்புச் சித்தி பெற்றார். இவர் தனது ஆசிரிய சேவையின் இறுதிக் காலத்தில் 12 வருடங்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் (1960-1972) ஆசிரியராகப் பணியாற்றினார்.

தமிழ் வடமொழி ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நிரம்பிய புலமையும், சிவாகமங்களிலே நல்ல பயிற்சியும் சைவ சமய தோத்திர சாத்திர நூல்களில் சிறந்த அறிவும் கைவரப் பெற்றவராகத் திகழ்ந்தார். சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு இறுதிக் காலம் வரை சைவநெறி வழுவாமல் வாழ்ந்து வந்தார். சைவ சமயத்திலும் அதன் தத்துவத்திலும் தெளிந்த அறிவு, கொள்கைக்காக எதையும் விட்டுக் கொடுக்காத இயல்பு, தவறு காணின் தண்டிக்கும் துணிவு, உடல் தளர்வுற்ற போதும் மனம் தளராத உறுதி, அமைதியான வாழ்வு என்பன இவருடைய ஆளுமைக் கூறுகளாக இருந்தன.

சைவ சமயமும் அதன் தத்துவமாகிய சைவ சித்தாந்தமும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. உலகில் வாழும் அறிஞர்களின் பெருமதிப்பினைப் பெற்றவை. சைவம் இன்று தன்னிலையிலிருந்து வீழ்ச்சி அடைகிறது என்பது சைவ அறிஞர்கள் பலரின் கருத்தாகும். சைவத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டியவர்களே சைவத்தின் வீழ்ச்சிக்குத் துணை போவதைக் காண முடிகிறது. இந்நிலையைக் கண்டு பண்டிதர் பெரிதும் வேதனை அடைந்தார். இந்த நிலையைப் போக்கத் தனது முதிர்ந்த வயதில் பல கட்டுரைகளையும் கடிதங்களையும் எழுதினார்.

நாவலர் வழியில் வந்த பண்டிதர் கந்தையா அவர்கள் தனது சைவசித்தாந்த விளக்கத்திற்குத் தொல்காப்பியம், திருக்குறள், சங்கத் தமிழ் நூல்கள், ஆகியவற்றைத் துணையாகக் கொள்கிறார். பல மேற்கோள்களை இத்தமிழ் நூல்களில் இருந்து எடுத்துக் காட்டுவதை இவரின் நூல்களில் காணலாம்.

இவர் சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களை விளக்கிப் பல நூல்களை எழுதி யுள்ளார். சித்தாந்தச் செழும் புதையல்கள் சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள், சிவஞானசித்தி திறவுகோல், சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி, சைவ சித்தாந்தத்தில் மாயை உண்மை என்பன இவர் எழுதிய நூல்களில் சைவசித்தாந்தம் சார்ந்தவை ஆகும். மகா ஞானியாகிய அளவெட்டி பொ. கைலாசபதியின் சிந்தனைகளை விளக்குவதற்குப் பொருத்தமான அறிஞர் இவரே என இனங்கண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூதவையினர் பண்டிதர் கந்தையாவிடம் அப்பணியினை ஒப்படைத்தனர். மூதவையின் அழைப்பை ஏற்றுக் கைலாசபதி அவர்களுடைய சிந்தனையை விரிவாக விளக்கி "சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்னும் மிகச் சிறந்த ஆய்வு நூலை இவர் வெளியிட்டார். சைவ சித்தாந்த ஆய்வில் இந்நூல் மகாமேரு மலை போல் உயர்ந்து காணப்படுகிறது.

உயிருக்கு நிகழும் அறிவு தூல அறிவு, சூக்கும அறிவு என இருவகைப்படும். கருவி கரணங்களால் அறியும் அறிவு தூல அறிவு. திருவருளால் அறியும் அறிவு சூக்கும அறிவு. நுண்ணுணர்வை நுண்ணர்வினாற் பெறும் ஞானம் தத்துவ ஞானம். தத்துவ ஞானத்தைச் செம்மையாக விளக்குவது சைவ சித்தாந்தமே எனச் சித்தாந்தச் செழும் புதையலில் பண்டிதர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திருக்கோயில்களில் நடைபெற வேண்டிய நித்திய நைமித்திய கிரியைகள், சைவ ஆசார வழி நிற்போர் சைவ ஞானத்தைப் பெறும் பொருட்டுச் செய்ய வேண்டிய சிவபூஜை முறைகள் ஆகியவற்றைச் வைச சித்தாந்தப் பார்வையில் விளக்கும் நூலாக "சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்" என்ற நூல் காணப்படுகிறது. உடம்பைப் பெற்று வாழும் உயிர்கள் சைவ ஞான தத்துவப் பின்னணியோடு வாழ வேண்டும் என்பது சைவ சமயத்தவர்களின் குறிக்கோளாகும். உடம்பைப் பெற்று வெளிவருவதொரு உயிர், உடலை விட்டு நீங்கும் வரை உடல், உயிர், உள்ளம் என்பவற்றின் தூய்மை, வலு, உரம் முதலானவற்றை விளக்கும் கிரியைகள் பலவுண்டு. இவை பூர்வக் கிரியைகள் அபரக் கிரியைகள் என இரு வகைப்படும். உயிர் உடலில் தங்கியிருக்கும் வரை செய்யப்படும் கிரியைகள் பூர்வக் கிரியைகள் என்றும் உயிர் நீங்கிய பின்பு உடலுக்குச் செய்யப்படும் கிரியைகள் அபரக் கிரியைகள் என்றும் அழைக்கப்படும்.

மனிதர்கள் வாழ்க்கையில் உயர்ந்த விழுமியங்களை மேற்கொண்டு அன்பும், அறனும், நீதியும் நிறைந்து நன்னெறி வாழ்வினை வாழ்வதற்கும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனை அடைந்து முத்தியின்பம் பெறுவதற்கும் சைவசித்தாந்தம் வழிகாட்டி நெறிப்படுத்துகின்றது. தமிழில் உள்ள மெய்கண்ட சாஸ்திர நூல்கள் பதினான்கினுள் அருணந்தி சிவாசாரியார் அருளிய சிவஞானசித்தியார் மிகவும் விரிவும் விளக்கமும் உள்ள நூலாக விளங்குகிறது. செய்யுள் வடிவில் அமைந்துள்ள சிவஞானசித்தியாரை அனைவரும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக உரைநடையிலே சிவஞானசித்தித் திறவுகோல் என்றும் நூலினைப் பண்டிதர் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இன்றைய அறிவியல் அணுகு முறைக்குப் பொருத்தமான வகையில் தர்க்க ரீதியான விளக்கங்களுடனும் இலகுவாக விளங்கிக் கொள்ள எடுத்துக் காட்டுக்களுடனும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா அவர்கள் எழுதிய நூல்களில் பெருநூல் என்று கணிக்கத்தக்கது "சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்ற நூலாகும். சைவ வேதாந்த சித்தாந்தப் பொருளம்சங்கள், "கைலாசபதி சிந்தனைகள்" என்னும் தொகுப்பு நூல் முழுவதிலும் விரவிக் காணப்படுகின்றன. திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையின் உப அதிபராக இருந்த திரு.பொ. கைலாசபதி அவர்களின் சிநதனையில் முகிழ்த்த ஞானக் கருத்துக்களை நுணுகி ஆராய்ந்து "கைலாசபதி ஸ்மிருதி" என்னும் நூலினை மிகச் சிறந்த

ஆய்வு நூலாக எழுதியுள்ளார். சைவ மக்கள் மத்தியில் சைவ சித்தாந்தக் கொள்கை நிலை பெறுவதற்குப் பெருந் தொண்டாற்றிய கலாநிதி மு. கந்தையா அவர்கள் 2002ஆம் ஆண்டு சித்திரை மாதத்து பூர்வபட்ச பிரதமை தினத்தில் சிவபதம் அடைந்தார்.

இவருடைய சம காலத்தவராக ஏழாலை மேற்கிலே வாழ்ந்த சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம் அவர்கள் இவரது "அரியவும் பெரியவும்" என்ற நூலிற்கு வழங்கிய மதிப்புரையில் இவரைப் பற்றிக் கூறியிருப்பது பண்டிதர் கந்தையா அவர்கள் யார் என்பதை அனைவருக்கும் தெளிவாக விளக்கும் கூற்றாக அமைந்துள்ளது.

"நிகழ்காலம் எனப் பேசப்படும் இக்கால வெள்ளத்தில் சமயத் துறையில் மிதந்து நிற்பது விளம்பர வித்தையே. இந்த ஜால வித்தையிலிருந்து தப்பிப் பிழைத்து நிற்பவர்கள் மிகச் சிலரே. இவர்களுள் ஒருவர் பெரியபுராணச் சிந்தனைகள் என்ற நூலாசிரியர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள்.

## நிறைவுரை

சைவ சித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர்கள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியதாகும். சிவபூமியாகிய இலங்கையில் வாழும் சைவத் தமிழர்கள் நிறைந்த சிவபக்தி உடையவர்கள். அருளாளர்கள் அருளிய பன்னிரு திருமுறைகளை உணர்ந்து ஓதுபவர்கள். சைவ சித்தாந்த தத்துவத்தை வாழ்க்கை நெறியாகக் கொண்டவர்கள் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் முதல் ஏழாலை வித்துவான் கந்தையா வரை முப்பத்திரண்டு பெருமக்கள் சைவ சித்தாந்த தத்துவ வளர்ச்சிக்குச் செய்த பங்களிப்பினைத் தமிழருவி சஞ்சிகையின் ஆறு மலர்களின் ஊடாக வெளிப்படுத்தும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது.

சைவ சித்தாந்த தத்துவம் எழுச்சி பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் இன்றும் நமது நாட்டில் பலர் பங்காற்றி வருகின்றார்கள். ஈழத்தமிழ் மக்களின் உயர்கல்வி நிலையமாகிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த தத்துவத்தின் முதுமாணி கற்கை நெறி கடந்த சில வருடங்களாக நடைபெற்று வருகிறது. மூன்றாவது அணிக்கான கற்கை நெறி இப்போது இடம் பெறுகிறது. சைவத் தமிழர்களின் பொக்கிஷங்களாகத் திகழும் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களும் நமது உயிர் போன்றவை. சிவாகமங்களையும் மெய்கண்ட சாஸ்திரங்களையும் மூலமாகக் கொண்டே சைவ சித்தாந்த தத்துவம் உருவாகியது. நமது மக்கள் சைவ சித்தாந்த தத்துவத்தின் பெருமையை உணர்ந்து செயற்பட்டால் நமது நாடு மீண்டும் சிவபூமியாக மாறும்.

# அதிகரித்து வரும் நாகரீக வளர்ச்சியின் தாக்கத்தில் மனிதப் பண்பு எத்தகைய செல்வாக்கைச் செலுத்துகின்றது?

மனித இனம் தோன்றிய காலத்தினை எவ்வாறு கணக்கிட்டுப் பார்த்தாலும் பலர் பல்வேறு வரையறை களினைக் கூறி நிற்கின்றனர். இருப்பினும் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடே மனிதன் விலங்காகிய குரங்கிலிருந்து தோன்றினான் எனக் கூறி நிற்கின்றது. ஆகையாலேயே சிலர் இன்றும் சில மனிதர்களைப் பார்த்து இவனுக்கு "மிருக குணம்" என்று கூறுகின்றனர். எது எவ்வாறு இருப்பினும் மனிதன் வளர்ச்சியடைய அவனுடைய சிந்தனை ஆற்றலும் வளர்ச்சி நிலையினை உடையதாக மாற்றம் அடைந்தது என்று கூறினால் அது பொருத்தப்பாடு உடைய ஒரு கருத்தென்றே கொள்ள இடமுண்டு.

19ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்டு அரசியலிலே தோன்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை நோக்குகின்ற போது "தோமஸ் கொப்ஸ்" என்பவர் முதன் முதலிலே ஒரு கருத்தை முன்வைக்கின்றார். அதாவது மனிதன் என்பவன் ஒரு கொடிய விலங்கு, கொடிய குணங்களைக் கொண்டவன். ஆகையால் இந்தக் கொடிய குணங்களைக் கொண்ட மனிதர்களினை ஆள்கின்றவன். அவனைவிடக் கொடியவனாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றார். இவர் இவ்வாறு கூறுவதற்கு என்ன காரணம் என்பதனை ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு மனிதனும் சூழ்நிலையின் கைதி என்பதனை மறுத்து உரைப்பதற்கு எந்தவொரு நியாயமும் இருப்பதாகக் கொள்ள இடமில்லை. ஆகையால் தான் தனிப்பட்ட வாழ்வியலில் இந்த கொப்ஸ் என்ற அறிஞரும் மிருகத்தனமான பல நடவடிக்கைகளினால், மற்றவர்களினால் பாதிக்கப்பட்டிருக்கலாம். இவரது கருத்தை தொடர்ந்து 'ஜோன்லொக்" என்ற அறிஞர் சமூக ஒப்பந்தக் கோட்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கின்ற போது மனிதன் என்பவன் அமைதியானவன். எனவே ஆள்பவன் அமைதியை பேணுகின்ற மற்றவர்களின் உணர்வு களினை மதிக்கின்ற பக்குவத்தினை உடையவனாக இருக்க வேண்டும் என்ற கருத்தினை முன்வைக்கின்றார் இங்கே இவரது தேடல் ஒரு சாதகமான மனித நேயத்தைத் தேடி நிற்கின்றது. இவரைத் தொடர்ந்து "ரூசோ" என்ற அறிஞரும் இக்கோட்பாடு தொடர்பிலே கருத்துக்களினை முன்வைத்தாலும் இவ்விரு அறிஞர்களினுடைய கருத்தும் எமது தலைப் பினுடைய சாராம்சத்தைத் தேடி நிற்கின்றது.

இங்கே ஒருவர் மனிதனை அடக்க வேண்டும் என்கின்றார். மற்றையவர் மனிதனின் உணர்வுகளினை மதிக்க வேண்டும் என்கின்றார். எம்முடைய கேள்வி என்னவென்றால் இன்றைய சூழ்நிலைக்கு இதில் எந்தக் கருத்து தேவைப்பாட்டைக் கொண்டதாக இருக்கின்றது

என்பதே யாகும். இன்று எல்லாவற்றிலுமே பணம் தலைவிரித்துச் சுற்றிச் சுழன்று கொள்கின்றது. பணம் படைத்தவன், படித்தவன், ஆட்சியாளன் என்ற வர்க்கத்தினர் உயர்ந்த நிலையிலே தாம் நினைத்தவாறு எல்லாவற்றையும் வளைத்துப் போடுகின்ற நிலை காணப்படு கின்றது. மற்றயவர்கள் தமது இயலாமையை எண்ணித் தமக்குள்ளேயே கண்ணீர் விட்டுக் கொள்கின்றனர். இது தான் இன்றைய சாதாரண வாழ்வியலில் எமது சமூகம் எதிர்நோக்கு கின்ற பாரிய பிரச்சினை ஆகும்.

இந்த விடயத்தை எடுத்துக் கொண்டால் எமது வாழ்வியலில் போற்றுதற்கு உரிய பண்பாட்டைக் கொண்ட இனமாக எமது தமிழினம் கொடி கட்டிப் பறக்கின்றது. ஆனால் வயது முதிர்ந்த ஒரு முதியவர் அல்லது ஒரு கர்ப்பிணித் தாய், பாலூட்டும் தாய், சிறுகுழந்தைகள் என யாருக்கும் பயணிக்கும் பேரூந்திலே கூட இருக்கை கொடுக்க எமது இளம் சமுதாயம் முன்வருவதில்லை என்பது வேதனை கலந்த ஒரு உண்மை. இந்த இடத்திலே "மாற்றான் தோட்டத்தின் மல்லிகைக்கும் மணமுண்டு" என்ற மூதறிஞரின் கருத்து என்னால் ஏற்கப்படு கின்றது. அதாவது எமது சகோதர இனத்தவர்கள் இந்த விடயத்திலே இன, மத பேதமின்றி தங்கள் மனித நேயத்தைக் காட்டுகின்றனர் என்பது நடைமுறை வாழ்க்கையில் உண்மை.


இதைவிட இஸ்லாமிய சமயத்திலே வட்டி வாங்குதல், வட்டிக்கு கொடுத்தல் இரண்டுமே பாவத்திற்கு உரியனவாகச் சொல்லப்படுகின்றன. சில தனவான்கள் பலருடைய வாழ்க்கையை இல்லாமல் செய்வதற்கு இன்று வட்டிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றனர். அத்தோடு பலரை வக்கற்றவர்களாக்கிச் சமுதாயத்திலே தீய நடவடிக்கைகளில் ஈடுபடவும், நேர்மையற்றவராக மாற்றடையவும் கூடிய நிலைக்கு ஒருவரை இட்டுச் செல்கின்றது என்பது உண்மையே. இவற்றை விடுத்து இந்தச் சமுதாயம் என்ற வண்டியைச் சுமக்க வேண்டிய அச்சாணி யார்? என்ற வினா தொக்கி நிற்கின்றது.

தமிழர்களினுடைய இனம் காலத்தால் அழியாத முன்தோன்றி மூத்த இனம். இவர்களினுடைய நாகரிகம், பண்பாடு யாவுமே இந்த "மூத்த" என்று சொல்லப்படுகின்ற எம்முடைய முன்னயவர்களுக்குச் சொந்தமானதே ஒழிய எமக்கல்ல. காரணம் அவர்கள் கட்டிய வீட்டிலே நாம் இலகு புகழுக்கு வாரிசு உரிமை கொண்டாடுகின்றோம். அப்படி யென்றால் இன்றைய எமது நிலை என்ன?

வளர்ச்சி நிலை நோக்கி நகருகின்ற எமது மனித இனம் சந்திரனில் காலடி வைக்கின்றது. கம்பியூட்டரில் சிகிச்சை செய்கின்றது. மாற்றம் என்ற சொல்லைத் தவிர எல்லாவற்றையும் மாற்றி அமைத்துக் கொண்டிருக்கின்றது. இது ஒரு சாதாரண நிகழ்வில்லை. மனித மூளைக்கும் அதன் ஆராய்ச்சிக்கும் கிடைத்த வெற்றி. இந்த வெற்றிக் கனியை ருசித்துப் பார்க்கின்ற வேளைகளில் நாம் எமது இடுப்பிலே கட்டியிருக்கின்ற சேலை முடிச்சுக்களினையும் வேட்டி முடிச்சுக் களினையும் நழுவிச் செல்வதற்கு இடமளிக்கலாமா?

மனிதன் என்று சொல்வதற்கு பிரதான காரணம் என்னவென்று கேட்டால் என்னுடைய கருத்துப்படி மனிதநேயம் இருப்பதினால் தான் அவன் மனிதனாக வாழ முடியும். ஆனால் இன்று பலர் தம்முடைய வாழ்க்கையிலே அறம், தியாகம், நியாயம், புண்ணியம், மன்னிப்பு, சகிப்பு, சமாதானம் போன்ற அரிய இயல்புகளை விட்டுச் சுயநலம், தற்பெருமை, போலிக் கௌரவம், பொறாமை, போட்டி போன்ற விழுமியங்களிலே தமது வாழ்க்கையை வழி நடத்திச் செல்கின்றனர். இதனால் காலம் காலமாக நாம் வளர்த்துக் கட்டிக் காத்த மனிதநேயம் எம்மைவிட்டு மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருக்கின்றது.

மனிதனுடைய நாகரிக வளர்ச்சி நிலைக்கு ஏற்ப இந்த மனித சமூகம் மனிதப் பண்பைக் காட்ட வேண்டும் என்ற எனது கருத்து எல்லோருக்கும் மனித நேயம் செத்துவிட்டது என்பதல்ல. எமது நேயம் எம்மைவிட்டு நகர நகர இன்னொருவருடைய கண்ணீர்த்துளி இந்தப் பூமித் தாயை முத்தமிடுகின்ற அந்த நேரத்திலே அந்தத் தாயின் நெஞ்சு வெடிக்கின்றது. ஆகையால் அன்பான பெரியவர்களிடம் நான் கேட்பது உங்களுக்குக் கீழ் உள்ளவர்களுக்குச் சட்டி பானை முதல் சகலத்திலும் மனிதநேயத்தை ஊட்டுங்கள். இளையவர்களே எம்முடைய நாகரிக வளர்ச்சி என்பது நாம் போடுகின்ற உடையில் மட்டுமல்ல நாம் போற்றுகின்ற மனித நேயத்திலும் உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.



**"பிறருக்கு நன்மையைச்**
**செய்யப் பிறந்த நீ**
**நன்மை செய்யாவிடினும்**
**தீமையாவது செய்யாதிரு"**

*சி. சிறீதரன்*
*சமுர்த்தி முகாமையாளர்*
B.A (Dip.in.Psycologhy)

## புதுவருடப் பிறப்பே
## எது சொல்ல வருகிறாய்?



உலகம் படும் பாட்டைச் சொல்லவா
வருகிறாய்! இல்லை!
உண்மையாகவே நீ பிறக்கும்தோறும்
உலகம் திருந்த வேண்டும்,
பலதும் கற்றும் பேராசையில் உழலும்
பவ்விய மாந்தர் தோன்றிவிட்டனர்,
பாருக்குள் ஒரு பாரதி இல்லையே என
பதைபதைக்குதே நெஞ்சு!
கலகம் தான் உலகம் என்று இங்கு
கடவுளையே நிந்திக்கிறார்கள்,
காசுதான் கடவுள் என்று பெருங்
கல்யாணங்கள் விலை போகிறது.
திலகமிடும் நம் வாழ்வில் "பூமி
திருத்தியுண்" என்றார் - ஔவை,
தெருவோரம் ஒதுங்கிச் செல்லவும் - இந்த
தேசத்தில் வழியில்லை எதுசொல்ல வருகிறாய்?

**கே.எஸ்.சிவஞானராஜா**
கொக்குவில்.

# பூச்சியத்துக்குள் இராச்சியம் அமைத்த அதிசய மனிதர்



குரும்பையூர் பெற்றெடுத்த
குணக்குன்று
குவலயம் போற்றும்
வயாவிளான் மத்திய
மகாவித்தியாலயத்தின்
உயிர்ச் சொத்து
எம்மை விட்டுப்
பிரிந்த செய்தி கேட்டு
ஏங்கித் தவிக்குது
எம்மிதயங்கள்!

நிமிர்ந்த நடை;
நேர் கொண்ட பார்வை;
ஆக்கம் ; ஆளுமை;
அன்பு; அறிவுடைமை;
அத்தனையும் ஒருசேரப்பெற்ற
கல்வியுலகின் கலங்கரை விளக்கே!
உயிருள்ள காலம் வரை
ஆ.சி. நடராஜா என்ற
உங்கள் அழகிய நாமத்துக்கு
எம் நெஞ்சம்
தலை வணங்கும்
இது உங்கள் மேல்
நாம் வைத்த
உண்மை அன்பின்மீது
ஆணை ஐயா!

அதிபர் என்ற சொல்லுக்கு
அகராதியில் அர்த்தம் தேடினோம்
கண்டுபிடிக்க முடியவில்லை....!
உங்களிடம் கண்டு கொண்டோம்
அதனால் அகமகிழ்ந்தோம்
“பதவி” என்ற அந்தஸ்தைப் பயன்படுத்தி
பல அராஜகங்களை
அரங்கேற்றும் இத்தேசத்தில்
பண்பு நெறி தவறாமல்
பாங்குடனே சேவையாற்றிய
வித்தகரே!
பத்திரிகைத்துறை வளர்ச்சியில்
பல்திசையும் போற்ற
நீங்கள் பெற்ற பக்குவமோ
சொல்லிலடங்காது
ஆதரவற்ற ஏழை மக்களை
அரவணைத்துக்
கருணைப் பாலம் மூலம்
கரம் கொடுத்துக்
கண்ணீர் துடைத்தீர் ஐயா!

எத்தனையிடர் வந்த போதும்;
இடப்பெயர்வால் அடுத்தடுத்து
இடம்மாறிச் சென்ற போதும்
கல்லூரியின் தனித்துவத்தைக்
கட்டிக்காத்த பெருந்தகையாளனே!
காலை மாலை நேரம் பாராது
கல்வி சமூக சேவையின்
உயிர்நாடியாகத் திகழ்ந்த
ஒப்பற்ற மனத்தினனை
சத்தமில்லாமல் தழுவிச் சென்ற – அந்தக்
காலனும் ஓர் சதிகாரனோ?

நாடகத்தில் நல்ல நடிகனாய்
விளையாட்டில் யாவரும்
மெச்சிடும் வீரனாய்;
கடமை தவறாத
கண்ணியவானாய்;
சமூக சேவையில் நீண்டதோர்
சரித்திரம் படைத்த
காவிய நாயகனே!



இருவிழிகள் நீர் ததும்ப
விடைதந்தோம்
பூச்சியத்துக்குள் இராட்சியம்
அமைத்த உங்கள் ஆத்மா
பூரணன் தில்லைவேளின்
பொற்பதத்தில்
பேரின்பப் பெருவாழ்வு
பெற்றுய்யப் பிரார்த்திக்கின்றோம்.

***கவியாக்கம்: குறிஞ்சிக்கவி செ. ரவிசாந்***
***(வ.ம.ம.வி பழைய மாணவன்) வீரமனை,***
***குப்பிளான்.***

**அரங்கத்தில் ஆசிரியர், மாணவர்களுடன் எங்கள் அதிபர்**



# இயற்கைச் சூழலும் நாமும்



இன்று நாம் விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பல விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளின் மத்தியில் ஒரு இயந்திரம் போலவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பூமி அழகாக வளைந்து நெளிந்து ஓய்வில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் நதிகள். வானத்தைத் தொடும் மலைகள், பச்சைப் பசேலென இருக்கும் யாவும் இயற்கையின் அதிசயமாகவே இன்றும் இருக்கின்றன. இயற்கை அன்னை நமக்களித்த பெறுமதிமிக்க பரிசுகள் இவை. மனிதன் எவ்வளவுதான் புதிது புதிதாகக் கண்டுபிடித்தாலும் மனிதனுக்கு வாழ்வழிப்பது பூமி. பூமி இல்லாவிடில் மனிதர்களாகிய எமக்கும் வாழ்வு இல்லை. நாம் வாழ்வதற்குத் தேவையான வளி, நீர், உணவுகள் எல்லாம் பூமியிலேயே உற்பத்தி ஆகின்றன. வேறு எந்தக் கிரகத்திற்கும் இல்லாத பெருமை பூமிக்கு உண்டு. அழகான அருமையான பூமியில் மூன்றில் இரண்டு பங்கு நீர். நிலம் மூன்றில் ஒரு பங்கு. நீரின் பங்கு இப்புவியில் கூடியதாலேயே இப்புவி அழகாக நீல நிறத்தில் காட்சி அளிக்கின்றது. மனிதனின் கண்டுபிடிப்புக்களால் பூமியின் அழகு அதிகரிக்கவில்லை. ஆகவே இயற்கை அழகே அழகு என்பதை இங்கு நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எனினும் "மூன்றில் ஒரு சிறிய நிலப்பரப்பிலேயே பூமி வனப்பளிக்கும் வனம். பாரிய மலைகள் மலையில் இருந்து குதிக்கும் நீர்வீழ்ச்சிகள் வெயில் சுடும் மணற்தரை போன்ற பல அதிசயங்களைக் கொண்டுள்ளது.

இவற்றினால் எல்லாம் பூமி எமக்கு பல நன்மைகளைத் தந்து கொண்டிருக்கின்றது. நாம் சுவாசிக்கும் காற்றில் இருந்து உண்ணும் உணவு வரை பூமி எமக்களித்த நன்கொடைகள் ஆகும். பச்சை வீட்டு வாயுக்களில் இருந்து விடுபட பச்சை மரங்கள் பலவற்றையும் கொண்ட காடுகளை நமக்களித்துள்ளது. நீர் எமக்கு அன்றாட கருமங்கள் பலவற்றைச் செய்வதற்கு உதவுகின்றது. எமது சமூக, சமய எல்லா வேலைகளுக்கும் நீர் அவசியம். இன்னும் ஒருபடி மேலே சென்று மனிதனின் வாழ்வாதாரத்தை அதிகமாக்கு வதற்காகப் பல கனிப்பொருட்களை எண்ணெய் வளத்தை, பெறுமதி மிக்க உலோகங்களைப் பூமித்தாய் கொண்டுள்ளாள். இவற்றினால் நாம் பெறும் பயன்கள் எண்ணிலடங்காதவை. எனினும் இவ்வளவு பயன்களைப் பெறும் மனிதன் சிறிதும் நன்றி உணர்வு இன்றி நடந்து கொள்கின்றான். கனிமங்கள், உலோகங்கள், எண்ணெயை அகழ்ந்து எடுப்பதற்காகவும் தனது சுயலாபத்தைக் கூட்டுவதற்காகவும் பல இயற்கைச் சமநிலையைக் குறைக்கும் பொருட்களைப் பயன்படுத்துகின்றான். பல சாதனங்களை சுயபுத்தியின் மூலம் கண்டுபிடித்த மனிதன் இயற்கை சமநிலையைப் பேணத் தவறின் அது தன்னையே அழிக்கும் என்று எண்ணத் தவறுகின்றான். விளைவு இயற்கை அனர்த்தங்களை இயற்கை அன்னை மனிதனின் மேல் அள்ளி வீசுகின்றாள். பாரிய சேதங்களை மனிதன் எதிர்கொள்வது மட்டுமன்றி உயிர்ச்சேதங்களையும் பெற்றுக் கொள்கின்றான். முன்னைய நூற்றாண்டுகளில் இருந்ததைவிட எவ்வளவு தான் நாம் வளர்ச்சியடைந் தாலும் இயற்கையின் சீற்றத்தால் இன்றும் கூட பாதிக்கப்படுகின்றோம். இவை ஒருபுறமிருக்க இன்று ஒவ்வொரு நாடுகளும் அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு பல இயற்கைக்கெதிரான வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன. நிலத்தை அகழ்தல் காடுகளை அழித்தல் என்பன அவற்றுள் மிகப் பாரிய அளவில் நடைபெறுகின்றன. ஏன் நாம் கடல் கடந்த நாடுகளை உதாரணம் காட்ட வேண்டும். இலங்கைத் தீவிலேயே அபிவிருத்தி என்றதின் கீழ் பல இயற்கைச் சீரகேடுகள் நடைபெறுகின்றன.

மிக முக்கியமாக வீதி அகலிப்பின்போது பல அரிய மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. இதனால் இயற்கைச் சூழலும் தன் அழகை இழக்கின்றது. ஆகவே வீதி அகலிப்பின் போது பச்சை மரங்களை வெட்டி வீழ்த்தாமல் அதற்கு மாற்று வழிகளை பயன்படுத்தினால் நாம் ஆரோக்கியமாக, சூழலுடன் இணைந்த வாழ்வு வாழலாம். இன்றைய உலகில் மிக முக்கிய பிரச்சினை சூழல் மாசு. இன்றைய காலத்தில் சூழல் மாசுக்கு நூறு சதவிகித பொறுப்பும் செயற்கைக் காரணிகளே. நிலம், நீர், காற்று என்பன மிக விரைவாக மாசுபட்டுக் கொண்டு வருகின்றன. ஒவ்வொரு நாடும் பொருளாதார வளர்ச்சியடைவதற்காகப் பல தொழிற்சாலைகளை நிறுவி வருகின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையும் இப்புவியில் அதிகரிக்கும் பொழுதும் சூழல் மாசடைவது அதிகரிக்கின்றது. நீரிலும் நிலத்திலும் தொழிற்சாலைக் கழிவுகள் சேர்வதனால் மாசு ஏற்படுகின்றது. மண் அகழ்தல், காடழித்தல் போன்றவற்றின் மூலம் மண்ணரிப்பு ஏற்படுகின்றது. இவற்றைவிட இயற்கை விவசாயத்திலேயும் மனிதன் தனது புத்தியைக் காட்டிவிட்டான். செயற்கை உரங்களைப் பாவித்து தனக்கும் கேடு விளைவித்து இயற்கையையும் அழிக்கின்றான்.

இவ்வாறு பல இன்னல்களையும் நாம் சூழலுக்கு கொடுத்து வந்தால் இப்புவியும் அழிவடைந்து நாமும் அழிவடைய நேரிடும். ஆகவே நாம் இயற்கைச் சமநிலையைப் பேண வேண்டிய கட்டத்தில் உள்ளோம். இயற்கையின் அன்பளிப்பு நீரையும் நாம் இன்று வீண் விரயம் செய்கின்றோம். பல நாடுகள் இன்று நீர்ப் பஞ்சத்திலேயே மிதக்கின்றன. 2050ஆம் ஆண்டளவில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவும் என ஆய்வுகள் தம் முடிவினைத் தெரிவிக்கின்றன. ஆனால் அதிஷ்டவசமாக நம் நாட்டில் வாழும் அனைவரும் அளவுக்கதிகமான நீரினைக் கொண்டுள்ளோம். எனினும் அதனை முறையாகப் பயன்படுத்தாமல் வீண் விரயம் செய்கின்றோம். நீரின் வீண் விரயத்தைத் தடுக்க சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதைத் தவிர இயற்கைச் சமநிலையைப் பேண நாம் காடுகளை அழிக்கக் கூடாது. இயற்கை அனர்த்தங்களில் இருந்து எம்மைக் காப்பவை அவை. நாட்டின் வருங்காலத்

தலைவர்கள் ஆகிய நாம் இயற்கைச் சமநிலையைப் பேண முன்வர வேண்டும். தேவையேற்படின் ஒரு மரத்தை வெட்டினால் இன்னொரு மரத்தை நட வேண்டும். மரத்தின் பெறுமதி பற்றி இளஞ் சந்ததியினருக்கு உணர்விக்க வேண்டும். மரம் நடுகைத் திட்டங்களை மக்கள் மத்தியில் அமுல்படுத்த வேண்டும். எமது சுகமான வாழ்க்கைக்கு நவீன யுகத்தில் இயற்கையின் பங்களிப்பை மக்களுக்குத் தெரிவிக்க மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இயற்கை அன்னையை வெகுவாக நோய்க்குள்ளாக்கும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஆகவே இப்புவி எமக்குச் செய்யும் அன்பளிப்புக்களுக்கு நாம் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும். இயற்கையை மாசுபடுத்தாமல் இயற்கையோடு இணைய வேண்டும். மனிதன் எவ்வளவுதான் புவியைக் கட்டுப்படுத்தித் தன் கைக்குள் வைத்தாலும் ஒரு நாள் புவி மனிதனை வென்று விடும். மிகச் சிறந்த உதாரணம் 2004ஆம் ஆண்டு வந்த சுனாமி அனர்த்தம். ஆகவே இப்பாதிப்புக்களால் பாதிப்புக்குள்ளாக இருப்பது மனித இனம் மட்டுமே. எனவே இயற்கையின் சமநிலையைப் பேணி எமக்கு வாழ்வளித்த பூமிதனை மாசுபடுத்தாமல் இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்க்கை முறையைக் கட்டி எழுப்புவோம். என்ன தான் மனிதன் பூமியதை வென்றாலும் ஒரு நாள் மண்ணில் புதைபடப் போகின்றோம். அப்போது பூமி எம்மை வென்று அதன் காலடியில் வைத்திருக்கும். ஆகவே நாம் இதனை உணர்ந்து இயற்கைச் சூழலோடு எம்மை இணைப்போமாக.

**சுயோதமி யோகநாதன்**

*யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.*

### சிந்தனைச் சுடர்

- எந்தக் கனவும் – அதை நனவாக்குவதற்கான திறனோடுதான் உங்களுக்கு வழங்கப்படுகிறது.
- இந்த வாழ்க்கை நீங்கள் விரும்பியவண்ணம் அமையாவிடில், இதில் மகிழ்ச்சியைக் காணாவிடில் உங்கள் சிந்தனைகளை, நம்பிக்கைகளை உங்கள் உணர்வுநிலையின் உடல்சார்ந்த வெளிப்பாடுகளை மாற்றிக் கொள்ளுங்கள்.
- நீங்கள் நிலையான வெற்றியைப் பெறுவதற்கு உங்கள் கொள்கையிலும் செயல்முறையிலும் – நீங்கள் நிலையாக இருக்க வேண்டும்.
- வெற்றியால் நீங்கள் வலிமை பெற்று விடுவதில்லை. உங்கள் போராட்டங்களே உங்களை வலிமையுடையவராக்கும். வாழ்க்கையின் துன்ப நிலைகளிலும் விட்டுவிடாமல் இருக்கிறீர்களே, அதுதான் வலிமை.
- நேர்மை இல்லாத அறிவு தந்திர புத்தியேயன்றி விவேகமாகாது.
- அன்பும் இரக்கமும் நிரம்பி வழிகிற ஆன்மாவே எப்போதும் உவகை மிக்கதாயிருக்கும்.

## மங்கையராகப் பிறப்பதற்கே.......

பத்துமாதம் சுமந்து பெற்றாள் அன்னை
அவள் பட்ட பாடுகளை யாரறிவர்?
பாரினிலே பிறந்து விட்டோம்
பாவங்கள் பல அனுபவிக்க
பெண்கள் நாம் யாது செய்வோம்?

அன்பாக எம்மைப் பெற்றெடுத்தாள் அன்னை
ஆனால் - அயலவர் தூற்றிடுவர் எம்மை
ஆண்பிள்ளை என்றில் ஆனந்தம் - என்பர்
பெண்பிள்ளை என்றால் துன்பமென்பர்
பெண்கள் நாம் யாது செய்வோம்?



இன்பம் இல்லை துன்பமிது என
விலக்கி வைக்கும் பாவிகள்
இவர்களின் தொல்லையைத் தீர்க்க
இறைவன் தான் வழி
பெண்கள் நாம் யாது செய்வோம்?

பெண்ணாகப் பிறந்தால் பெரும்பாடு என்பர்
அது உண்மைதான் என்பது தெரிகிறது
பெண் தெய்வவடிவென்பர் ஆன்றோர்
ஆனால் பெண்களோ பேய் என்பர் இன்றோர்
பெண்கள் நாம் யாது செய்வோம்?

ஆசைக் கென்று அலங்கரிப்பர்
ஆசை முடிய அனுப்பிடுவர்
அழகாய்ப் பிறந்தாலும் ஆபத்து
அசிங்கமாய்ப் பிறந்தாலும் ஆபத்து
பெண்க்ள் நாம் யாது செய்வோம்?



பச்சைக் குழந்தையும் மனமுருகும்படி
பாசாங்கு செய்வார்கள்
பண்பாய் இருக்கும் எம்மை
பலிக் கடாவாய் ஆக்கிடுவர்
பெண்கள் நாம் யாது செய்வோம்?

வேலைக்குச் சென்றாலும் வேதனை
வேலையின்றி இருந்தாலும் சோதனை
சீதனம் வேண்டாம் என்று சொல்வார்கள்
சிறு காலம் கழிய விரட்டி அடிப்பர்
பெண்கள் நாம் யாது செய்வோம்?

அன்னையை எல்லாம் போற்றுவர்
ஆனால் அந்த அன்னையும் ஒருபெண்தானே
ஆடவரே எல்லோரும் கேளுங்கள்
பெண்கள் உங்கள் கைப்பொம்மையல்ல
பெண்கள் ஒருநாள் பொங்கியெழுவர்



மங்கையராய் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திட வேண்டும்
மண்ணுலகத் துன்பத்திலிருந்து
மானசீகராய் வாழவேண்டும்
மங்கையராய் பிறக்க வேண்டும்.

க. வினுஷியா,
யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி

(மார்ச் 8 மகளிர் தினம் தொடர்பான கவிதை)

# சு. பாஸ்கரன் சிற்பாலயம்

## விக்கிரக வேலை விற்பன்னர்கள்



திருக்கோவில்களுக்கு தேவையான கருங்கல் சிற்பம்,
பஞ்சலோக சிற்பம், கண்டாமணி,
கலசங்கள், தேர்மணிகள், ஆசனக்கற்கள்,
யந்திரங்கள் எழுதிக்கொடுக்கப்படும்.
வீடு, கடைகளுக்கான யந்திரங்களும் செய்து கொடுக்கப்படும்.
கருங்கல்லில் ( கிறிநெற்கல்லில்) நினைவுக்கற்களும்
பித்தளைத்தகட்டிலும் நினைவு எழுத்துக்கள் வெட்டித்தரப்படும்.

479, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Tel - 021 222 3515
0776351805,
0776106718


எழுத்தாளர்களே!

உங்கள் கைவண்ணத்தில் உருவான ஆக்கங்களிற்குக்களம் அமைத்துத்தர நாங்கள் தயாராக உள்ளோம்.
உங்கள் ஆக்கங்கள்
கவிதை , கட்டுரை , சிறுகதை, நாவல், நூல் விமர்சனம், நகைச்சுவைத் துணுக்குகள் ,
கலை இலக்கிய நிகழ்வு பற்றிய செய்திகள்...
எதுவாகவும் இருக்கலாம். ஆக்கத்துடன் உங்கள் புகைப்படம் ஒன்றையும் இணைத்து அனுப்பிவையுங்கள் .

விளம்பரம் செய்தால் வியாபாரம் பெருகும்!

விளம்பரதாரரின் நன்மை கருதி 2012 ஜனவரி முதல் தமிழருவி சஞ்சிகையின் விளம்பரக் கட்டணங்கள் பின் வருமாறு குறைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பின் அட்டை | :- 10000/- |
| பின் உள் அட்டை | :- 6000/- |
| முன் உள் அட்டை | :- 6000/- |
| உள்முழுப்பக்கம் | :- 8000/- |
| உள் அரைப்பக்கம் | :- 4000/- |

இந்த அரியவாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!விளம்பரக் கட்டணத்தை மணியோடர் மூலமாகவோ காசோலை மூலமாகவோஅனுப்பலாம். விளம்பரம் செய்ய வேண்டிய விடயமும் தெளிவான எழுத்தில் எழுதி அனுப்பப்பட வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி,

த.கணேசமூர்த்தி
நிர்வாக இயக்குநர், உதவி ஆசிரியர். தமிழருவி,
சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு.
தொ.இல :- 077 7743055

ரூபன் பிறின்டேர்ஸ் ஆனைக்கோட்டைச் சந்தி, யாழ்ப்பாணம். 0776624386